விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 18 ஞாயிற்றுக்கிழமை (04.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 290

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## மகன் தாக்கியதில் தந்தை உயிரிழப்பு

### மட்டுவில் வடக்கில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - மட்டுவில் வடக்கு பகுதியில் மகனின் தாக்குதலுக்கு இலக்

15

## பருத்தித்துறை நகரப் பகுதியில் பொலிஸ் மீது தாக்குதல்

### குழு மோதலை தடுக்க சென்றபோது சம்பவம்

(கரணவாய்)

பருத்தித்துறை நகரை அண்டிய பகுதியில் வைத்து பொலிஸார் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் முகப் பகுதியில் காயங்களுக்கு உள்ளான பொலிஸ் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிககப்பட்டுள்ளார்.

நேற்று சனிக்கிழமை மாலை 4.00

15

## புங்குடுதீவில் சிவாச்சாரியார் அடித்துப் படுகொலை

### சிவாச்சாரியாரின் உதவியாளர், இரு பெண்கள் உட்பட ஐவர் கைது



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, ஊரதீவு சிவன் ஆலய சிவாச்சாரியார் நேற்று அதிகாலை அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரின் படுகொலை தொடர்பில் சிவாச்சாரியாரின் உதவியாளர் மற்றும் இரு பெண்கள் உட்பட ஐவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### - 20ஆவது திருத்தம் தற்காலிக ஏற்பாடே -

## நாட்டுக்குப் பொருத்தமான அரசியலமைப்பு உருவாக்கப்படும்

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



(கொழும்பு)

20ஆவது திருத்தச் சட்டம் என்பது தற்காலிக ஏற்பாடே. நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று சனிக்கிழமை நடை பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக ஊடகங் களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டுக்குப் பொருத்தமான அரசியலமைப்பொன்றை உருவாக்குவதறகாகவே எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவை மக்கள் வழங்கினர்.

15

## முல்லையில் வாடிகளுக்கு விசமிகளால் தீ வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாத்தளன் பகுதியில் இரண்டு மீனவர்களின் வாடிகள் இனந்தெரியாத விசமிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

15

## 20ஆவது திருத்தத்துக்கு எதிர்க்கட்சியில் ஐவர் ஆதரவு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 20ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு ஆதரவாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 5 பேர் அரசாங்கத்தில் இணையவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

15

## இந்திய மீனவர்களுடன் தொடர்பைப் பேணிய

### 09 பேர் தனிமைப்படுத்தலில்
### 70 பேர் சுயதனிமைப்படுத்தலில்

(கரணவாய்)

இந்திய மீனவர்களுடன் தொடர்பைப் பேணிய 9 பேர் தனிமைப்படுத்தப்பட்டதோடு 70 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு குடாரப்பு கடற்கரைப் பகுதியில் வாடி அமைத்து கடலட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுவந்த 9 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் 70 பேர் வரையானோர் சுய

15

## சண்டிலிப்பாயை சேர்ந்த ஐவர்

### பிரான்ஸில் படுகொலை

(பாரிஸ்)

பிரான்ஸில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த குடும்பம் ஒன்று நேற்று கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாரிஸின் வடக்கு புறநகர்ப் பகுதியில் வீட்டில் நடந்த குடும்பத் தாக்குதலில் நான்கு குழந்தை

15

### வடமராட்சி கிழக்குப் பகுதியில்

## நெற்செய்கையில் ஈடுபட்ட 22 விவசாயிகள் கைது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் தமது பூர்வீக சொந்த நிலங்களில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட விவசாயிகள் 22 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கின் கட்டைக்காடு பச்சிலைப்பள்ளி இயக்கச்சி உட்பட்ட பகுதிகளில் நெற்செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த காணிகள் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு சொந்தமானவை

15

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**

(4369)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


# வடமாகாண பிரிமியர் லீக்கின் இறுதிச்சுற்றுப் போட்டி இன்று

வடமாகாண துடுப்பாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் "வடக்கு பிரிமியர் லீக்" சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி வவுனியா நகரசபை மைதானத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்த மாதம் ஆரம்பித்த இச்சுற்றுப்போட்டியில் வடக்கை சேர்ந்த ஐந்து மாவட்டங்களின் அணிகள் பங்குபற்றியிருந்தன. இருபது பந்து பரிமாற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்ட இப்போட்டியில் இறுதிப்போட்டிக்கு தெரிவாகிய யாழ். மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அணிகள் இன்றையதினம் மோதிக்கொள்கின்றன.

வடமாகாண துடுப்பாட்ட சங்கத்தின் தலைவர் யோ.ரதீபன் தலைமையில் பிரமாண்டமாக ஆரம்பிக்கும் இப்போட்டியில் முதன்மை அதிதியாக இலங்கை துடுப்பாட்ட நிறுவனத்தின் தலைவர் சாமி சில்வா கலந்துகொள்வார். விசேட விருந் தினராக நிறுவனத்தின் பிரதி தலைவர் ரவீன் விக்கிரமரத்தின உட்பட பலர் கலந்து கொள்வர். (ம-03,299)


## வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும்



**செல்வி வசந்தா செல்லதுரை**

ஆசிரியை,
பிள்ளைக்கனியமுதம் முன்பள்ளி
( யாழ். மாநகர சபை )

எமது கரம்பற்றி, அன்னையின் அணைப்பினை வழங்கி எம் கல்விப் பயணத்திற்கான முதல் அடியினை எடுத்து வைக்க துணை நின்று இலக்கினைக் காட்டி ஊக்கமளித்த எம் முன்பள்ளி ஆசிரியையின் ஓய்வு காலம் மகிழ்ச்சியுடன் அமைய இறைவனின் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

(4117)

**2004 - 2005ஆம் வருட மாணவர்கள்,**
**பிள்ளைக்கனியமுதம் முன்பள்ளி.**



## காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் – நடாத்தும்
### பரிசளிப்பும் கலைநிகழ்வும் - அழைப்பு

இடம் : துர்க்கா மணி மண்டபம், நல்லூர்
காலம் : 04.10.2020 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 2.00 மணி

**2020ஆம் ஆண்டுக்கான பதக்கம் பெறும் மாணவர்கள்**

| | |
|---|---|
| பண்ணிசை | செல்வன். சத்தியானந்தன் கோபிகாந் |
| | செல்வி. செந்தில்வேல் செவ்வர்சினி |
| சங்கீதம் | செல்வன். பிரதீபன் கேதுஷன் |
| | செல்வி. செந்தில்வேல் செவ்வர்சினி |
| நடனம் | செல்வி. சுந்தரலிங்கம் லக்ஷிகா |
| | செல்வி. பத்மநாதன் சானுகா |
| மிருதங்கம் | செல்வன். பிரதீபன் கேதுஷன் |
| | செல்வன். தவராசா கஜன் |
| வயலின் | செல்வி. சிவசுப்பிரமணியம் நிரோசினி |
| வீணை | செல்வன். ஜெயசீலன் அனுராகன் |
| ஓகன் | செல்வன். சோதிநாதன் மதுஷன் |
| சித்திரம் | செல்வன். விக்னேசன் அன்பழகன் |
| | செல்வி. ராகுல்ன் இந்துஜா |

(C-473)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

கிழவன்காடு கலாமன்றம், காரைநகர். / யாழ். கிளை இல. 428, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆறுகால் மடத்தில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(ஒவ்வொரு பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.)

தரகர் தேவையில்லை. (4348)

077 468 3354 / 076 221 2037

## வாடகைக்கு

வெள்ளவத்தையில் Harmes Avenue யில் குறைந்த விலையில் நாள், கிழமை, மாத வாடகைக்கு. 2,3,6 Bed rooms சுபகாரியங் களுக்கும் கொடுக்கப்படும்.

( Market, Station அருகில் ) (C-1033)

தொடர்பு - SATHIYA

077 766 7511, 011 250 3552

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு (4361)

077 340 5951


e-mail : engchelvam@gmail.com

## சேவை

நீங்கள் அடகு வைத்த மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவன்த்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை. AAA Gold Center (C-1034)

076 568 4346


# மரண அறிவித்தல்



## இறப்பியேற்பிள்ளை செல்வநாயகம்

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி, நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட இறப்பியேற்பிள்ளை செல்வநாயகம் நேற்று (03.10.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இறப்பியேற்பின்ளை - அன்னம்மா தம்பதியரின் புத்திரனும் எவிஜின் மல்லிகாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இமானுவேல், வேதநாயகம், சிங்கராசா ஆகியோரின் அன்புத் தம்பியும் அருளாணந்தம், காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, ஜெயநாயகம் ஆகியோரின் பாசமிகு தமையனும் செல்வக்குமார் (இலண்டன்), மேரி மஞ்சுளா, மேரி சுனேத்திரா, மேசி ரேணுகா, ஜெஸ்மினா, அன்ரன் சுரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் மணிமேகலை, மனோகரன், அல்பிறட் றோபின், மதிவண்ணன், மோகன், சிவசுதனி ஆகியோரின் மாமனாரும் மயூசன், ஜெதுர்ஷனா, கவிப்பிரியா, மதுஷனா, சாரங்கன், ஜெனுஷனா, லக்ஷன், சுபலக்ஷன், துவாரகன், ஸ்வேத்தா, கயல்விழி, புவிஷா, சிந்துஜன், அஞ்சனா, அஸ்விதா, அவந்திகா, அனுப்பிரதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி நாளை (05.10.2020) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் வசாவிளான் உத்தரியமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு அன்னாரின் பூதவுடல் வசாவிளான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கொடிகாம வீதி, நெல்லியடி.

076 620 0001

தகவல்: குடும்பத்தினர்

(C-472)

# ஆயுதம் தூக்கியோரை தெற்கில் நினைவுகூர முடியுமென்றால் வடக்கில் ஏன் முடியாது? - மனோ கணேசன் காட்டம்

(கொழும்பு)

**மறைந்த தமது உறவுகளை தமிழர் நினைவுகூருவது மறுக்கப்படுவதும் அதே உரிமை சிங்களவருக்கு வழங்கப்படுவதும் இந்நாட்டில் அரசின் இரட்டை கொள்கையின் அடிப்படையில் கேலிக்கூத்தாக அமைகிறது.**



(கொழும்பு)

1970/80 களில் இலங்கை அரசுக்கும் இராணுவத்துக்கும் எதிராக ஆயுதம் தூக்கிய, ஜே.வி.பியின் தேசப்பிரேமி இயக்க போராளிகள் தெற்கில் பகிரங்கமாக நினைவுகூரப்படும் போது, அதே வரப்பிரசாதம் வடக்கில் தமிழருக்கு இல்லை? இதனால், இந்த அரசாங்கம் இப்போது அடிக்கடி சொல்லும், "ஒரே நாடு-ஒரே சட்டம்" என்ற கொள்கை ஒரு கேலிக்கூத்தாக தெரிகிறது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி, தனது டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார். அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்குபவர்களை அரசாங்கம் தனது கணிப்பீட்டின்படி "பயங்கரவாதிகள்" என்கிறது. அப்படியானால் 1970 ஆம் 80 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசுக்கும் இராணுவத்துக்கும் எதிராக ஆயுதம் தூக்கிய ஜே.வி.பியின் தேசப்பிரேமி இயக்க போராளிகள், "சிங்கள பயங்கரவாதிகள். இவர்கள் வருடாவருடம், தெற்கில் பகிரங்கமாக நினைவுகூரப்படுகிறார்கள்.

ஆனால், அதே வரப்பிரசாதம், தமிழர்களுக்கு இல்லை. "தமிழ் பயங்கரவாதிகள்" என்ற தமிழ் ஆயுததாரிகளை மட்டுமல்ல, பலவேளைகளில் மரணித்த சாதாரண மக்களையே பகிரங்கமாக நினைவுகூர, தமிழர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

இது இந்நாட்டில் நீண்டநாளாக நடந்து வரும் ஒரு இரட்டை நிலைப்பாடு கொண்ட பாரபட்ச கொள்கை ஆகும். இதற்கு இடையில் இன்று இந்த அரசு, மேலும்ஒரு கொள்கையை பற்றி பேசி வருகிறது. அது தான், "ஒரே நாடு-ஒரே சட்டம்" என்ற கொள்கை ஆகும். இது இந்நிலைமையை இன்னமும் கேலிக்கூத்தாக மாற்றி உள்ளது.

அதாவது, மறைந்த தமது உறவுகளை தமிழர் நினைவுகூருவது மறுக்கப்படுவதும் அதே உரிமை சிங்களவருக்கு வழங்கப்படுவதும் இந்நாட்டில் அரசின் இரட்டை கொள்கையின் அடிப்படையில் கேலிக்கூத்தாக அமைகிறது. மறுபுறம் தமிழ் மக்களை பொறுத்தவரையில் இது பெரும் சோகமாக அமைகிறது.

இந்த இரட்டைக் கொள்கை உடன் முடிவுக்கு வரவேண்டும். இதுபற்றி தேசிய கலந்துரையாடல் நடைபெற வேண்டும்.

இதுபற்றி எவருடன்வேண்டுமென்றாலும் மூன்று மொழிகளிலும் பகிரங்க விவாதம் நடத்த நான் தயார் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ரஷ்ய பல்கலைக்கழகங்கள் நீக்கப்பட்ட விவகாரம்

## பாதிக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பில் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை மருத்துவ சபையால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பட்டியலில் இருந்து முன்னறிவிப்பின்றி 3 ரஷ்ய பல்கலைக் கழகங்கள் நீக்கப்பட்டமையினால், அங்கு மருத்துவ உயர் கல்வியைத் தொடர்வதற்கான புலமைப்பரிசிலைப் பெற்ற மாணவர்கள் அந்த வாய்ப்பை இழக்கும் நிலையேற்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பில் விரைவான தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மருத்துவ சபையிடம் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே கோரிக்கை விடுத்தார்.

இவ்விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தினால் நேற்று கொழும்பிலுள்ள என்.எம்.பெரேரா நிலையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார். (ஜ-4)

## சர்வதேச நாடுகளின் உதவியுடன்

# அதி உச்சபட்ச சமஷ்டியை உருவாக்க முயற்சிப்போம்



(கொழும்பு)

ஒற்றையாட்சி என்றால் புதிய அரசியலமைப்பு தேவையில்லை என தெரிவித்த முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சர்வதேச நாடுகளின் உதவியுடன் ஐக்கிய இலங்கைக்குள் அதி உச்சபட்ச சமஷ்டியை உருவாக்க முயற்சிப்போம் என தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பில் ஒற்றையாட்சி தவிர வேறு எந்த முறையும் வராது என்பதுடன் ஐக்கியம், சமஷ்டி குறித்த பேச்சுக்கு இடமில்லை என சபை முதல்வரும் வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்த கருத்து தொடர்பில் கேட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒற்றையாட்சி என்றால் புதிய அரசியல் அமைப்பு என்ற ஒன்று தேவையில்லை. ஏற்கனவே உள்ள அரசியலமைப்புக்களும் தமிழ் மக்களின் சம்மதமின்றி நிறைவேற்றப்பட்டவை.

ஆகவே, எங்களுக்கு இலங்கைக்குள் தீர்வு இல்லையென்றால் சர்வதேச நாடுகளின் உதவியுடன் ஐக்கிய இலங்கைக்குள் அதி உச்சபட்ச சமஷ்டியை உருவாக்க முயற்சிப்போம்.

நாங்கள் பிரிந்து சென்று தனி அரசை உருவாக்க வேண்டும் என்பதுதான் உங்கள் சிந்தனையாக இருந்தால், அதனை நோக்கி பயணிப்பதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம் என அமைச்சருக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

ஒற்றையாட்சி அரசியலமைப்பின் மூலம் நாம் எங்களுக்குரியதை செய்ய முடியாது. எதற்கெடுத்தாலும் மத்திய அரசை கேட்டுக்கொண்டிருக்க வேண்டும் எனவும் சுட்டிக் காட்டினார். (ஜ-4)

# தமிழர்களின் தாயகத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவும்

## ஜெனீவாவில் கோரிக்கை

(ஜெனீவா)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கான சிறப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் இன அழிப்பிலிருந்து தமிழர்களின் தாயகத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தமிழர் உரிமைச் செயற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 45 ஆவது கூட்டத்தொடரில் தென்றல் அமைப்பின் சார்பாக உரையாற்றிய இரமேசு கோவிந்தசாமி, தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இன அழிப்பை பற்றி பன்னாட்டு விசாரணை நடத்த வேண்டும் என்றும் கோரினார்.

அத்தோடு சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ள பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் இதன்போது அவரை வலியுறுத்தினார்.

இங்கிலாந்தும் அதன் உறுப்பு நாடுகளும் தங்களது அறிக்கையில் பாதிக்கப்பட்டவர்கள் எவர் என்பதை முழுமையாக மறைத்து ஈழத் தமிழர்களுக்கு கிடைக்கவேண்டிய நீதியை முழுமையாக மறுக்கின்றன.

ஐக்கிய நாடுகளது சார்லசு பியேட்றி அறிக்கை இலங்கையில் போர் இடம்பெற்ற இறுதி காலப்பகுதியில் 70 ஆயிரம் ஈழத்தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு பகுதியில் கொலை செய்யப்பட்டனர் என்று கூறுகிறது.




உறவுகளை இழந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்பு வழியாக இன்னும் தங்களது உறவுகளைத் தேடிக் கொண்டிருக்கும் குடும்பங்கள் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன .

எனவே இலங்கைக்கான சிறப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் இன அழிப்பிலிருந்து ஈழத் தமிழர்களின் தாயகத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இரமேசு கோவிந்தசாமி கோரிக்கை விடுத்தார். (நி-4)

# வேலைவாய்ப்பின்மையால் இளைஞர்கள் தற்கொலை

(கொழும்பு)

**வேலைவாய்ப்பின்மை மற்றும் பொருளாதார சிக்கல் நிலைமை காரணமாக இளைஞர்கள் பலர் தற்கொலைக்கு முயற்சிப்பதாக சுமித்ரயோ எனும் அமைப்பு நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.**

மேலும் வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 779 பேர் தற்கொலை செய்து கொண்டதாகவும் அவர்களில் 635 பேர் இளைஞர்கள் என்பதுடன் 144 பேர் யுவதிகளெனவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு தற்கொலை செய்து கொள்பவர்களில் பெரும்பான்மையோர் அநுராதபுரம், வவுனியா, மொனராகலை பகுதியைச் சேர்ந்தவர்களெனவும் இவற்றுள் இளைஞர்கள் பாதுகாப்பற்ற வேலை, குடும்பத்தின் தேவையினைப் பூர்த்தி செய்ய தவறுதல், கடன் சுமை போன்ற காரணங்களினாலும் யுவதிகள் குடும்ப வன்முறையினால் பாதிப்புற்று மன உளைச்சலுக்கு ஆளாகி தற்கொலைக்கு முயற்சிப்பதாகவும் அவ் ஆய்வறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# ட்ரம்பும் அவரது மனைவியும் குணமடைய வேண்டும்

## ஜனாதிபதி கோட்டா பிரார்த்தனை





(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அவரது மனைவி கொரோனா தொற்றில் இருந்து விரைவில் குணமடைய வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் நெருங்கிய உதவியாளருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்ட நிலையில், அவருக்கும் அவரது மனைவி மெலனியா ட்ரம்புக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து பதிவிட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்த கடினமான காலத்தில் இலங்கை மக்களின் பிரார்த்தனைகள் என்றும் உங்களுடன் இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# அரச ஊழியர்களுக்கு அடுக்குமாடித் தொடர்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள பொரெல்லை, வனதமுல்ல "ஓவல் வியூ ரெசிடென்சி" அடுக்கு மாடி வீட்டுத் தொடர் நாளை 5 ஆம் திகதி பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது. அரசு ஊழியர்களுக்கான வீட்டு வசதி திட்டத்தின் கீழ் நகர்ப்புற மேம்பாட்டு ஆணையத்தினால் நிர்மாணிக்கப்பட்டு வந்த குறித்த அடுக்குமாடி வீட்டுத் தொடரின் கட்டுமானப் பணிகள் முடிந்துள்ள நிலையில் தற்போது மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆயுதங்கள் மீட்பு


(திருமலை)

திருகோணமலை - மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தாம் கட்டை காட்டுப் பகுதியிலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

காட்டுக்குச் சென்ற நபரொருவர் வழங்கிய தகவலை அடுத்து அப் பகுதியை சோதனையிட்டபோது கட்டுவாரிக்கு அருகில் T-56 துப்பாக்கி ரவைகள் 155 மற்றும் மெகசின் 4 மீட்கப்பட்டுள்ளன.

குறித்த ஆயுதங்களை தற்போது பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக திருகோணமலை சர்தாபுர விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். (ஐ-4)

# பெண்களை வலுவூட்டுவதில் அரசாங்கம் அக்கறை




(கொழும்பு)

நாட்டின் சமூக - பொருளாதார அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பை உறுதி செய்வதிலும் பாலின சமத்துவத்தை ஏற்படுத்தி, பெண்களை வலுவூட்டுவதிலும் பெரும்பான்மையான மக்களின் ஆதரவைப்பெற்றுத் தெரிவான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம் பெரிதும் அக்கறை கொண்டிருக்கிறது என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இணையவழி ஊடாக நடைபெற்ற பெண்கள் தொடர்பான நான்காம் உலக நாடுகளின் மாநாட்டில் இலங்கையின் சார்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 1995 ஆம் ஆண்டில் பெண்கள் தொடர்பான நான்காம் உலக நாடுகளின் மாநாட்டில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட பீஜிங் பிரகடனம், 25 வருடங்கள் கடந்த பின்னர் இப்போது பெண்கள் முன்னேற்றம், பாலின சமத்துவம் ஆகியவற்றை அடைந்து கொள்வதற்கான முக்கிய வழிகாட்டியாக இருக்கின்றது.

பாலின சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கும் பெண்களை ஊக்குவிப்பதற்கும் உலகளாவிய ரீதியில் குறிப்பிடத்தக்க பல்வேறு நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் கூட சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியிலான பெண்களின் முன்னேற்றத்திற்கு அநேக காரணிகள் சவாலாக உள்ளன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நாட்டின் சமூக - பொருளாதார அபிவிருத்திக்கு பெண்களின் பங்களிப்பு பெறப்படுவதை உறுதி செய்வதற்கும் பெண்களை ஊக்குவித்தல் மற்றும் ஆண் - பெண் சமத்துவத்தை ஏற்படுத்தல் என்பவற்றிலும் அரசாங்கம் தொடர்ந்தும் அக்கறையுடனேயே செயற்பட்டு வந்திருக்கின்றது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ-4)


மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



30 வருட அரச சேவையிலிருந்து இன்று 04. 10. 2020 ஞாயிற்றுக்கிழமையுடன் ஓய்வு பெற்று மணிவிழா காணும்

உயர்திரு. இராசா இரவீந்திரன்

(மேலதிக செயலாளர் - நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு - தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப் பிரிவு, முன்னாள் செயலாளர் - கல்வி, இளைஞர் விவகாரங்கள், விளையாட்டு மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சு, வடமாகாணம், முன்னாள் செயலாளர் - சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக சேவை மற்றும் மறுவாழ்வு அமைச்சு வடமாகாணம், முன்னாள் பிரதிப் பிரதம செயலாளர் - வடமாகாணம், செயலாளர் - விவசாய அமைச்சு, வடமாகாணம், முன்னாள் பிரதிப் பணிப்பாளர் - சுகாதார அமைச்சு, வடகிழக்கு மாகாணம், முன்னாள் உதவிப் பணிப்பாளர் - கிராமிய அபிவிருத்தி திணைக்களம், வடகிழக்கு மாகாணம், முன்னாள் மாகாண காணி ஆணையாளர், மாகாண காணித் திணைக்களம், வடகிழக்கு மாகாணம், முன்னாள் உதவி அரசாங்க அதிபர் - பூநகரி மற்றும் கிளிநொச்சி)

அவர்களது ஓய்வுக்காலம் இறைவன் திருவருளால் அவர்தம் குடும்பத்துடன் இன்பமாகவும் அமைதியாகவும் சீரும் சிறப்பாகவும் அமைய மனதார வாழ்த்தி நிற்கின்றோம்! வாழ்க பல்லாண்டு!! வாழ்க வளமுடன்!!

மனதார வாழ்த்துவோர்,
ஆனந்தகுமார் - ரஜனி குடும்பம் (சுன்னாகம்),
இராமச்சந்திரன் - அருணா குடும்பம் (ஐக்கிய ராட்சியம்),
றிசீந்திரன் - நவமலர் குடும்பம் (கனடா)

(4387)

# சூழலைப் பாதிக்கும் எந்த நடவடிக்கைக்கும் அனுமதியில்லை

## மகிந்த அமரவீர திட்டவட்டம்



(கொழும்பு)

**சுற்றாடலை பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளையும் அனுமதிக்க முடியாது என தெரிவித்த சுற்றாடல்துறை அமைச்சர் மகிந்த அமரவீர, சுற்றாடலை பாதிக்கும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.**

மட்டக்களப்புக்கு நேற்று விஜயம் செய்துள்ள சுற்றாடல் துறை அமைச்சர் மகிந்த அமரவீர,அவரது அமைச்சின் கீழ் செயற்படும் புவிச்சரிதவியல் அளவை சுரங்க பணியகத்திற்கும் விஜயம் செய்தார்.

அங்கு ஊழியர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்ட அமைச்சர் பணியகத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத மண் கடத்தல் உட்பட இயற்கை வளங்கள் சட்டவிரோதமான முறையில் அழிக்கப்படுவது குறித்து அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

மண் அகழ்வில் ஈடுபடுவோர் மாபியாக்கள் போல் செயற்படுவது குறித்தும் மண் வளம் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு பயன்படுத்தும் வகையில் அகழ்விற்கான அனுமதிகள் வழங்கப்பட வேண்டும் என்பது குறித்து அமைச்சரிடம் கோரிக்கையாக முன்வைக்கப்பட்டது.

சில அரசியல்வாதிகள் தங்களது அரசியல் அதிகாரங்களைக்கொண்டு அதிகாரிகளை அச்சுறுத்தி மண் அகழ்விற்கான அனுமதிகளைப்பெறுவது குறித்தும் தற்போது அதிகளவான மண் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக அது இயற்கையினை கடுமையாக பாதிக்கும் என்ற வகையிலும் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இயற்கை வளங்களையும் மக்களுக்கு பயன்தரும் வளங்களையும் பாதுகாப்பதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக அமைச்சர் மகிந்த அமரவீர சுட்டிக்காட்டினார்.

இந்த மாவட்டத்தில் உள்ள மண் வளத்தினை இங்குள்ள மக்களே அதிகளவில் பயன்படுத்தும்வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## பலத்த காற்று வீசக் கூடும்

(கொழும்பு)

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை முதல் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் நுவரெலியா மற்றும் மத்திய மலைநாட்டின் மேற்கு மலைச்சரிவு பகுதிகளிலும் மணிக்கு 40 முதல் 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் அம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரையான ஆழமற்ற மற்றும் ஆழமான கடல் பகுதிகளில் மணிக்கு 60 முதல் 70 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுமென சப்ரகமுவ, மேல், மத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களில் மழையுடனான வானிலை காணப்படுமென எதிர்வுகூறப்படுவதால் கடலிற்குச் செல்லும் கடற்றுறை சம்பந்தமான அதிகாரிகள் கடற்றொழிலாளர்களை மிகுந்த அவதானத்துடன்செற்படுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## '19' ஆல் நாடு பாரிய பின்னடைவு

### பிரசன்ன சுட்டிக்காட்டு



(கொழும்பு)

19 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக நாட்டில் அதிக மோசடி செயற்பாடுகள் இடம் பெற்ற நாடு பாரிய பின்னடைவை சந்திக்க நேர்ந்ததாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டினார்.

நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தம்மிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுவதுடன் 150 ஆசனமும் உள்ளது.

எனவே தமக்கு யாருடைய ஆதரவும் தேவையில்லை. யார் வேண்டுமானாலும் விரும்பினால் தம்முடன் இணைந்து கொள்ளலாம். எனினும் தம்முடன் இணைந்து கொள்ளுமாறு யாரையும் தான் கட்டாயப்படுத்தப் போவதில்லையெனவும் தெரிவித்தார். (ஜ-6)

## நாட்டில் மார்பகப் புற்றுநோயால் வருடாந்தம் 700 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் மார்பகப் புற்றுநோயால் வருடாந்தம் 700 பேர்வரை மரணிப்பதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் விசேட வைத்திய நிபுணர் சுராஜ்பெரேரா தெரிவித்தார்.

இந்நோய் ஆரம்பகட்டத்திலேயே அடையாளம் காணப்பட வேண்டுமென்றும் இந்நிலைமை தற்போது அதிகரித்து வருவதாகவும் வருடாந்தம் 3 ஆயிரத்து 500 பேர்வரை இவ் மார்பகப்புற்று நோயாளர்களாக அடையாளம் காணப்படுவதாகவும் இவர்களில் 50 பேர் வரை ஆண்கள் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-6)

## மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் விநியோகம்

### இருவர் கைது

(கொழும்பு)

கஞ்சா போதைப்பொருளை பாபுலுடன் கலந்து மாணவர்களுக்கு விநியோகித்த குற்றச் சாட்டில் இருவர் கைது செய்யப் பட்டனர்.

மொனராகலை -புத்தள பகு தியில் பிரத்தியேக வகுப்பு மாணவர்களுக்கு மத்தியில் இவர்கள் இந்த விநியோகத்தை மேற்கொண்டிருந்த போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது இரு வரிடம் இருந்தும் 5300 கஞ்சா-பாபுல் கலந்த சிறிய பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஜ-4)


16 ஆம் ஆண்டு நினைவலைகள்



இருவருக்கு மகனாக 27 - 01 - 1927

இறைவனுக்கு மகனாக 13 - 10 - 2004

அமரர் திரு. கார்த்திகேசு தெய்வேந்திரம்

25 ஆம் ஆண்டு நினைவலைகள்



இருவருக்கு மகளாக 19 - 06 - 1927

இறைவனுக்கு மகளாக 04 - 10 - 1995

அமரர் திருமதி. தெய்வேந்திரம் பாலாமணி

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்
மண் வீட்டு மறைந்த நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல் எம் நெஞ்சமதில்
எப்போதும் இருப்பீர்கள்.

97. A. ஆடியபாதம் றோட், யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்.

(4363)


## வாகன சாரதிகளுக்கு விசேட அறிவித்தல்

(கொழும்பு)

வீதி ஒழுங்கு விதிகளை மீறும் சாரதிகளை அடையாளம் காண்பதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் போக்குவரத்து பிரிவு தெரிவித்துள்ளது.

விமானப் படையின் ட்ரோன் கருவிகள் மூலம் சாரதிகளை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் இந்த நடவடிக்கை செயற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார். (ஜ-4)

# எலிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் எலிக் காய்ச்சல் பரவாமல் தடுக்கலாம்

## -வைத்தியர் யமுனாநந்தா-

(யாழ்ப்பாணம்)

**யாழில் எலிக்காய்ச்சல் தொற்று அரிதாக இருந்தாலும் எலிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமே இந் நோய் பரவலை தடுக்கலாம் என யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.**



யாழ்.மாவட்டத்தில் எலிக் காய்ச்சல் நோய்த் தொற்று தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது லெப்ரொஸ் வைரஸ் என்பது பொதுவாக எலிக் காய்ச்சல் என அழைக்கப்படும். இது இலங்கையில் 1960,1970களில் இனங்காணப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. பின்னர் நெடுநாட்களாக இந்நோய்த் தாக்கம் குறைவடைந்திருந்தது.

குறிப்பாக இந்நோயானது வயலில் வேலை செய்பவர்களுக்கு ஏற்படுகின்றது. இந்நோய்க் கிருமி எலிகளிலிருந்தும் அவற்றின் சிறுநீர் வயல் நீருக்குள் செல்லும் போதும் விவசாயிகளின் உடலில் ஏதாவது சிறு காயங்கள் இருப்பின் அதனூடாக நோய்க்கிருமி தொற்றலாம். இந்த சிறுநீர் கலந்த நீரில் முகத்தை கழுவும் போதோ அல்லது குளிக்கும் போதோ இந்த நோய்க் கிருமி தொற்றக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

இந்நோய் பொதுவாக இலங்கையில் களுத்துறை, இரத்தினபுரி, புத்தளம் சிலாபம் அநுராதபுரம் போன்ற மாவட்டங்களில் அதிகளவில் காணப்படுகின்றது. ஏனைய பிரதேசங்களில் குறைவாக இருந்தது. யாழ்ப்பாண மாவட்டத்தை பொறுத்தவரை தற்போது ஓரளவு இனம் காணப்பட்டு வருகின்றது. இவ்வருடம் ஒருவர் இந்த வைரஸ் நோயால் இனங் காணப்பட்டு இறந்துள்ளார். சுமார் 30 பேருக்கு சந்தேகத்துக்குரிய இந்த கிருமி இனங் காணப்பட்டு சிகிச்சையளிக்கப் படுகின்றது.

லெப்ரோஸ் வைரஸ் பீடிக்கப்பட்டவர்களுக்கு காய்ச்சல், தசை நோய் இருப்பதுடன் கண் சிவப்பாக இருக்கும். இவர்களுக்கு சிறுநீரகம், மூளை, இதயம் செயலிழக்கலாம். சிறுநீரகத்தின் செயற்பாடு குறைவடைந்து செல்லும்.

லெப்ரொஸ்வைரஸ்தொற்றை ஆரம்பத்தில் இனங்கண்டால் சிகிச்சை அளிப்பதன் மூலம் பூரணமாக குணப்படுத்த முடியும். இனங்காணப்படாவிட்டால் மரணம் வரை செல்லும்.

ஆரம்பத்திலேயே இந்நோய் தொற்றினை கண்டு பிடித்து சிகிச்சையளிப்பதன் மூலம் இதனை குணப்படுத்தலாம். இதனை இனங்கண்டு தடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

எலிகளின் பரம்பல் இந்த நோய்க்கு ஒரு காரணமாக இருக்கிறது. அதேபோல் யாழ்ப்பாண குடாநாட்டை பொறுத்த வரைக்கும் எலிகளின் பெருக்கம் இந் நோய் பரவுவதற்கு ஒரு காரணமாக அமையும் .

எனவே யாழ்ப்பாணத்தில் இந்த நோய் மிகவும் அரிதாக இருந்தாலும் எலிகளை கட்டுப்படுத்துவதால் நோய் பரவலை தடுக்கலாம். எருமை மாடு, நாய் போன்ற வற்றில் இருந்தும் நோய் தொற்று ஏற்படலாம். குறிப்பாக மிருகங்களை வளர்ப்பதற்காக ஒரு பிரதேசத்தில் இருந்து இன்னொரு பிரதேசத்திற்கு கொண்டு வரும் போதும் வளர்ப்பு பிராணிகளின் மூலமும் இந்த நோய் தொற்று வரக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுகின்றது.

எனவே யாழ்ப்பாண மாவட்ட மக்கள் எலிக் காய்ச்சல் தொற்று தொடர்பில் அவதானமாக இருக்க வேண் டும் எனவும் வைத்தியர் தெரிவித்தார். (நி-4-33)

# கடலில் கொட்டப்படும் கழிவுகள்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபைக் குட்பட்ட தனங்கிளப்பு கடற்கரைகளில் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் கழிவுகள் , வெற்றுத் தண்ணீர் போத்தல்கள், பிளாஸ்ரிக் கழிவுகள், வர்த்தக நிலையக் கழிவுகள், உணவகக்கழிவுகள் என பலவகை கழிவுகளை வாகனத்தில் கொண்டு வந்து கடலில் வீசுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கடல் வளத்தினை மாசுபடுத்தும் வகையில் இச்செயல் இடம்பெற்று வருவதாகவும் அப்பகுதியில் அதிக துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

பருவமழை காலம் ஆரம்பமாகிய நிலையில் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் இச் செயற்பாடுகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-4)




## கலந்துரையாடல்

(அளவெட்டி)

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் 110 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு பெற்றோர்-ஆசிரியர் பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் பாடசால்ல மண்டபத்தில், பாடசாலை அதிபர் கு.லங்காதீபன் தலைமையில் இடம்பெறும். (நி-4-110)

# குடும்பத் தகராறில் ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-கச்சாய் வீதிப் பகுதியில் நேற்று வெள்ளிக் கிழமை இரவு இடம்பெற்ற போத்தல் குத்துச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றிருப்பதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதில் சாவகச்சேரி கச்சாய் பகுதியைச் சேர்ந்த 31 வயதான நபரே போத்தல் குத்திற்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-4-30)

# இலாபமீட்டும் உற்பத்தி பொருளாக பனை வடிசாராயத்தை மாற்ற வேண்டும்

## யாழில் அருந்திக்க பெர்னாண்டோ



(சாவகச்சேரி)

பனை வடிசாராயத்தை இலாபமீட்டும் உற்பத்திப் பொருளாக மாற்ற வேண்டும் என்பதே எனது முதல் நோக்கம் என உள்நாட்டு சிறு கைத்தொழில் பனை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை தென்மராட்சி வரணி பகுதியில் அமைந்துள்ள பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பனங்கள்ளு உற்பத்தி மூலம் ஒரு தொழிற்சாலையைக் கூட்டுறவுச் சங்கமாக இணைத்து இந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உறுதுணையாக இருப்பதனை நினைத்து மகிழ்வடைகிறேன்.

இந்த நாட்டினுடைய ஜனாதிபதியின் கருத்திட்டமானது பனை அபிவிருத்தியை மென்மேலும் அபிவிருத்தி செய்து அதன்மூலம் பெரும்பாலான அந்நிய நாட்டுச்செலாவணியைப் பெற்று இந்த நாட்டினை அபிவிருத்தி அடையச் செய்ய வேண்டும்என்பதே அவரின் நோக்கம்.

திறைசேரி ஊடாக வரியைக் குறைத்து இலாபகரமீட்டும் உற்பத்திப் பொருளாக பனை வடிசாராயத்தை மாற்ற வேண்டும் என்பது எனது முதல் நோக்கம்.

எதிர்காலத்தில் பனை வடிசாராய தொழிற்சாலைகளின் அபிவிருத்திக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவேன். என மேலும் அவர் தெரிவித்தார். (நி-4-30)

# வீதி புனரமைக்க கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தையிட்டி சந்தியிலிருந்து காங்கேசன் துறை பருத்தித்துறை பிரதான வீதி வரையான சுமார் 4 கிலோ மீற்றர் நீளமான வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேலாக எந்தவிதமான திருத்த வேலைகளும் மேற்கொள்ளப் படாமல் உள்ளது.

இவ் வீதியால் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

போக்குவரத்து மேற்கொள்ள முடியாமல் மிகவும் சேதமடைந்து காணப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைவில் வீதியைப் புனரமைத்து தருமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-10)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




கச்சாய் வினோபா நூலக சமூகப்பணித் தொடரில் 2019 க.பொ.த. (உ/த) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானத் துறையில் (பழைய பாடத் திட்டம்) அகில இலங்கையில் முதலாமிடத்தைப் பெற்ற வேம்படி மகளிர் கல்லூரி மாணவி. சண்டிலிப்பாய் மேற்கு கருணாகரன் தம்பதியினரின் மகள் "அர்ணா" விற்கு மட்டுவில் தெற்கு ஆசிரியை திருமதி கௌசிகா மயூரன் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதோடு இன்னும் பல சாதனைகள் புரிய பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(4364)

**வினோபா நூலகம், வினோபா நகர், நண்பர் குழாம், கச்சாய்.**

# Canada VISA

**நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்**

## STUDENT VISA

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்
- Diploma, Undergraduate & Postgraduate Studies

விசா பெற்றுக் கொண்ட சிலர்



## VISIT VISA

பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்



## REFUSED VISA

உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

**Sponsor Letters**
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

வயதெல்லை இன்றி Visa கிடைப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு
**0777-761 346**

flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
Flex Institute

**10 வருட கால நம்பிக்கையான சேவை**

# UNIVERSITY OF CAMBRIDGE English Courses

## IELTS

**OUR TARGET IS BAND : 09**

ACADEMIC
GENERAL
LIFE SKILLS - A1/ B1

- வகுப்புக்கள் BRITISH COUNCIL லில் பயிற்சி பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளரினால் நடாத்தப்படுகின்றன.
- நாங்கள் IELTS - Registration Centre for British Council

## TEACHER TRAINING
## The Teaching Knowledge Test (TKT)

**TKT is aimed at:**
- Experienced teachers who want to keep their skills up to date and obtain a recognised teaching qualification.
- Teachers with less experience who want to improve their understanding of core English teaching principles and enhance their career opportunities.

December, 4ஆம் திகதி நடைபெற இருக்கும் பரீட்சைகளுக்கான வகுப்புக்களில் இப்பொழுது இணைந்து கொள்ளலாம். அடிப்படையில் இருந்து English போதிக்கப்பட்டு, சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழை நீங்கள் பெற வசதி செய்து தரப்படும்.

## CAMBRIDGE - PRELIMINARY ENGLISH TEST (PET)

இது ஓர் Intermediate B1 Level பரீட்சையாகும்.
UK இல் பல கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் இதனை பல்கலைக்கழக அனுமதிக்காக ஏற்றுக்கொள்ளுகின்றன.

## FCE Cambridge First Certificate in English

FCE ஓர் Upper Intermediate B2, Level சோதனையாகும்.
ஆங்கிலத்தில் அதிக தேர்ச்சி பெற்று நல்லதோர் தொழில் வாய்ப்பினைப் பெற இது ஓர் அதி உயர் ஆங்கிலப்பாடநெறியாகும்.

## BRITISH COLLEGE OF ENGLISH

Palay Road, Urumpirai. (உரும்பிராய் பெற்றோல் செற்றிற்கு முன்னால்)
**Tel: 021 222 0384, 077 880 3887**

# வாடகைக்கு

உடுப்பிட்டி சந்தியிலிருந்து 1km தூரத்தில் அட்சயா முதியோர் இல்லத்திற்கு எதிரே வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு: (4343)
**0778030331, 0774973708**

# தரமான முறையில் மாபிள் பதித்து கொடுக்கப்படும்.

**077 187 6805**
A.ஜீவா
(4318)

# கணக்கீட்டு உதவியாளர் (Accounts Assistant)

யாழில் இயங்கும் தனியார் கம்பனி ஒன்றிற்கு மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வித்தகைமை:** குறைந்தது கணக்கியல் டிப்ளோமா

**அனுபவம்:** குறித்த துறையில் 1 வருட அனுபவம்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் CV உடன் 07.10.2020 புதன்கிழமை மு.ப.9.30 முதல் பி.ப. 4.30 வரை இடம்பெறும் நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளவும்.

**120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.** (4366) **தொடர்பு: 0778267800**

# கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் வது மூளாய் பதவி வெற்றிடங்கள்

எமது வைத்தியசாலைக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1.தாதிய உத்தியோகத்தர் (Nursing officer)
2.தாதிய உதவியாளர் (Nursing Aid)

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலமோ அன்றேல் நேரிலோ கையளிக்க முடியும். இதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 11.10.2020 ஞாயிறு மு.ப. 10.00 மணிக்கு வைத்தியசாலையில் நடைபெறும்.

**தலைவர்,**
**கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம், மூளாய்.**
(C-466)

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 57 ¼ செவ் 2 இல்
உயரம்: 175cm
தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11261

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: 16 செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில் A.A.T. Management வேலை உதவியாளர் (அரச)
எதிர்பார்ப்பு அரச உத்தியோகமுள்ளபெண்
தொ.இ: B/11262

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: பட்டதாரி அரச உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு அரச உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11263

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: ரேவதி 1
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 176cm
தகைமை/தொழில்: பட்டதாரி பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: அரச, தகுந்த தனியார் உத்தியோகம் உள்ள பெண்
தொ.இ: B/11264

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா: 7 ¾ சூரி,செவ் 3 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: பல் வைத்தியர், (அவுஸ்திரேலியா)
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர் அவுஸ்திரேலியாவில் வசிப்பவர் மட்டும்
தொ.இ: G/263

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தரம்1
கி.பா: 56 செவ் 6 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில் MBBS,Doctor. Swiss PR
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர் ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் மணமகன் மட்டும்
தொ.இ: G/267

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: 68 ¼ செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: பட்டதாரி
எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகத்தர் உள்நாடு மட்டும்
தொ.இ: G/278

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: 9 ½ சூரி,செவ் 11 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. மொழி பெயர்ப்பாளர் (அரச)
எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன் காரை நகரில் வசிப்பவர் மட்டும்
தொ.இ: G/282

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சர்வதேச விமான நிலையங்களை இந்த ஆண்டு திறக்க வேண்டாம்-உலக சுகாதார அமைப்புஎச்சரிக்கை

(கொழும்பு)


**நாட்டில் உள்ள அனைத்து சர்வதேச விமான நிலையங்களை திறப்பதை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வரை ஒத்திவைக்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.**

வரும் குளிர்காலத்தில் கொவிட் -19 தொற்று நோய் உலகளவில் பரவக்கூடும் என்பதால் தற்போது விமான நிலையங்களை திறக்காது அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வரை ஒத்தி வைக்குமாறு அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகளவில் தொற்றுநோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுவதை உலக சுகாதார அமைப்பு அறிவித்தால் மட்டுமே, விமான நிலையங்கள் ஜனவரி மாதத்திற்கு முன்பு திறக்கப்படும் என்று COVID-19 தடுப்பு பணிக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை ஐரோப்பிய நாடுகளில் குளிர் காலத்தில் கொரோனாவின் பரவல் அதிகமாக இருக்கும் என முன்னதாக எச்சரிக்கை விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (நி-4)

## பொதுமக்கள் தினம் மீண்டும் புதன்கிழமைக்கு



(கொழும்பு)

அரச நிறுவனங்களில் பல்வேறு சேவைகளை பெறுவதற்காக மக்களுக்கு இலகுவான வகையில் பொதுமக்கள் தினத்தை மீண்டும் புதன்கிழமைக்கு மாற்றவுள்ளதாக நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவரது உத்தியோகபூர்வ பேஸ்புக் தளத்தில் குறித்த விடயத்தை குறிப்பிட்டார். எவ்வாறாயினும் புதன்கிழமை பொதுமக்கள் தினமாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அமைச்சரவைக் கூட்டத்தின் போது மீண்டும் அது திங்கட்கிழமையாக மாற்றப்பட்டிருந்தது. புதன்கிழமைகளில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வருகை மிக குறைவடைந்துள்ளதன் காரணமாக குறித்த தீர்மானத்தை மேற்கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## பிள்ளையானுக்கு சிக்கல்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரான சிவநேசதுரை சந்திரகாந்தன் அக் கூட்டத்தில் கலந்து கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ் அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ள நீதிமன்றத்தின் அனுமதி தேவைப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது காவலில் உள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன் நீதிமன்ற உத்தரவு இல்லாமல் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுகடகூட்டத்தில்கலந்து கொள்ள முடியாது என சிறைச்சாலை ஆணையர் சந்தன ஏகநாயக்க, தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஒகஸ்ட் 10 ஆம் திகதி பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியை பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## சிறுவனின் கோரிக்கையை ஏற்ற பிரதமர்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாரஹென்பிட்டி விகாரைக்கு சென்ற சந்தர்ப்பத்தில் சிறுவன் ஒருவர் அவருக்கு கடிதம் ஒன்றை வழங்கியுள்ளார்.

அந்த கடிதத்தில் தங்களுக்கு வீடு ஒன்று இல்லை. பெற்றுத் தருமாறு சிறுவன் குறிப்பிட்டுள்ளார். கடிதத்திற்கு உடனடியாக பதில் வழங்கிய பிரதமர் வீடு ஒன்றை பெற்றுத் தருவதாக வாக்குதியளித்துள்ளார். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 120-140 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 200 | 200 |
| தக்காளி | 180 | 180 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 120 | 140 | 120 | 120 |
| கரட் | 120 | 160 | 200 | 200 |
| பூசணி | 80 | 120 | 90 | 80 |
| புடோல் | 100 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 100 |
| சின்னவெங்காயம் | 200 | 180 | 200-220 | 200 |
| பெரியவெங்காயம் | 180 | 180 | 180 | 160 |
| பாகற்காய் | 250 | 300 | 240 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 150 | 160 | 100 | 120 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 100 |
| கறிமிளகாய் | 280 | 260 | 260 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 120-150 | 80 |
| போஞ்சி | 300 | 260 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 80 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 250 | 240 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 80 | 70 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 100 | -- | -- |

## மகாத்மா காந்தியின் 151 ஆவது ஜனன தின நிகழ்வு

### பிரதமர் மகிந்த பங்கேற்பு

(கொழும்பு)

மகாத்மா காந்தியின் 151 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் கொழும்பு இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் நேற்று அலரி மாளிகையில் அவரது உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர்.



இந்தியாவின் தந்தை என போற்றப்படும் மகாத்மா காந்தி, இந்திய சுதந்திர போராட்டத்தின் முன்னோடியாகவும், அகிம்சையின் தந்தையாகவும் விளங்கியவராவார்.

அவர் அகிம்சைவாத கொள்கையை இந்தியாவில் மாத்திரமின்றி உலகம் பூராகவும் பரப்புவதற்கு பணியாற்றினார்.

1927ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்த மகாத்மா காந்தி, பல வாரங்கள் இலங்கையில் விஜயங்களை மேற்கொண்டிருந்ததுடன், கொழும்பு ஆனந்தா கல்லூரியில் பௌத்த சமயம் குறித்த உபதேசமொன்றையும் நிகழ்த்தியுள்ளார்.

காலி மகிந்த கல்லூரி உள்ளிட்ட இலங்கையின் பல்வேறு இடங்களில் உபதேசங்களை நிகழ்த்தியுள்ள அவர், கொழும்பு, கண்டி, மாத்தளை, குருநாகல், சிலாபம், பதுளை, நுவரெலியா, மொரட்டுவ, பாணந்துறை, ஹொரண, களுத்துறை, பலபிட்டிய, காலி, மாத்தறை, அக்மீமன மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட நகரங்களுக்கும் விஜயம் செய்துள்ளார். (ஜ-4)

## இராசிபலன்

4.10.2020
புரட்டாதி 18, ஞாயிற்றுக்கிழமை
துதியை காலை 6.49 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 12.05 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சந்திராஷ்டமம் அத்தம், சித்திரை வளவன்

**மேஷம்** – வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**ரிஷபம்** – ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், இடமாற்றச் சிந்தனை மேலோங்கும் நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சயன சுகக் குறைவான நாள்.

**மிதுனம்** – பொதுவாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** – கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**சிம்மம்** – மறைமுக போட்டிகளை எளிதில் சமாளிப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், சிந்தித்து செயற்பட்டு சிறப்படையும் நாள்.

**கன்னி** – பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, திருடர் பயமுண்டு, எடுத்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம்.

**துலாம்** – கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பாலிய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய அனுபவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** – இல்லத்தில் உள்ளவர்களின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போட்டிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** – பொன்னான எதிர்காலத்தை அமைக்க புதிய வழி பிறக்கும், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பிறர் உதவியுண்டு.

**மகரம்** – பொதுப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**கும்பம்** – சுதந்திரமாகச் செயற்படுவீர்கள், சமுதாயப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், போசன சுகமுண்டு.

**மீனம்** – மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

எதையும் பொறுமையோடு தேடு, பொறாமையோடு தேடாதே.

# மணலால் புற்றுநோய் அபாயம்

(கொழும்பு)

**கனிம வளங்களை அகற்றிய பிறகு விற்கப்படும் மணலால் புற்றுநோய் ஏற்படும் ஆபத்துள்ளதாக தெரியவந்துள்ளது.**

பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை பேராசிரியர் அத்துல சேனாரத்ன நடத்திய ஆய்வில் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

புல்மோட்டை கனிம மணல் கூட்டுத்தாபனம் மற்றும் தம்புள்ள கனிம பிரித்தெடுப்பில் மீதமுள்ள மணலில் கதிரியக்கத்தன்மை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

ஜப்பானின் புகுஷிமா மலையிலிருந்து தற்போதைய கதிர் வீச்சின் அளவை விட மணல் நிமிடத்திற்கு 500 அலகுகளுக்கு மேல் கதிர்வீச்சை வெளியிடுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மணல் டெண்டர்கள் பெற்றுக் கொள்ளும் தம்புள்ள கனிம மணல் நிறுவனம் 7 - 8 மீற்றர் உயரத்தில் மணலை சேகரித்து வைத்துள்ளது.

இந்த மணல் காற்றில் அடித்து செல்லும் போது சுற்றியுள்ள பிரதேசங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதால் அப்பகுதிகளில் உள்ளவர்கள் புற்றுநோய் அபாயத்திலிருந்து தப்ப முடியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ-4)

# 300 அதிசொகுசு வாகனங்கள் தொடர்பில் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

கொரோனா தொற்று காலப் பகுதியில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட 300 அதிசொகுசு வாகனங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் BMW, பென்ஸ் உள்ளிட்ட அதிசொகுசு வாகனங்கள் உள அடங்குவதாக சுங்க திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.


கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களின் பின்னர் இந்த வாகனங்கள் நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவற்றில் அதிகமான வாகனங்கள் அரச சேவையாளர்களுக்கும் தீர்வை வரி இன்றி நிறுவன அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்துவோருக்கும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களில் சில அரசாங்கத்தினால் நிபந்தனைகள் விதிக்கப்படுவதற்கு முன்னர் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந் நிலையில் குறித்த வாகனங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# விடைபெறும் நியூடயமண்ட் கப்பல்



(கொழும்பு)

கடற்பரப்பில் தீப்பற்றிய நியூடயமண்ட் கப்பல் மத்திய கிழக்கு சமுத்திர பரப்புக்கு கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கப்பலில் உள்ள மசகு எண்ணெயை, வேறு கப்பலுக்கு மாற்றும் நோக்கில், வந்த மார்க்கத்தின் மூலமே அதனை மீள கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமுத்திர சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பான நடவடிக்கைகள் நிறைவடையும் வரையில், அந்தக் கப்பலை கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என, சட்டமா அதிபரின் இணைப்பு அதிகாரியான அரச சட்டவாதி நிஷாரா ஜயரட்ன, முன்னதாக சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையிடம் தெரிவித்திருந்தார்.

எனினும், நியூடயமண்ட் கப்பல், மத்திய கிழக்கு பிராந்தியத்தை நோக்கி கொண்டு செல்லப்படுகின்ற நிலையில், கடற்படைக்கு சொந்தமான சமுதுர மற்றும் சசுறு என்ற இரண்டு கப்பல்கள் அந்தப் பணியில் இணைந்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (ஜ-4)

# உணவு பாதுகாப்பு நகரமாகும் பத்தரமுல்ல

(கொழும்பு)

பத்தரமுல்லை நகரத்தை உணவு பாதுகாப்பு நகரமாக மாற்றுவதற்கு விசேட வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பத்தரமுல்லை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் கடுவெல நகர சபை இணைந்து இந்த வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதாக அலுவலக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் வர்த்தக நிலையங்களை பரிசோதிக்கும் நடவடிக்கையை இந்த வருடம் முழுவதும் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரையில் 150 இற்கும் அதிகமான வர்த்தக நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 70 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பத்தரமுல்லை சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் மூலம் நகரத்தில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் தரப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (ஜ-4)

## ஜனாதிபதியின் உயிர் எங்கள் கையில்

## பாதாள உலகக்குழுவின் அச்சுறுத்தலால்

# பூஸாவிற்கு விரைந்த இரகசியப் பொலிஸார்

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் சிலர் நேற்று மாலை பூஸா சிறைச்சாலைக்கு விஜயம் செய்துள்ளனர்.

குறித்த சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல பாதாள உலகத் தலைவர்களில் ஒருவரான பொடி லெஸி என்பவர் அண்மையில் ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர் உட்பட பலரை படுகொலை செய்யப்போவதாக எச்சரித்திருப்பதாக தெரியவந்தது.

இந்த நிலையில், குறித்த நபருடன் சிறை வைக்கப்பட்டிருந்த ஏனைய கைதிகளிடம் இதுபற்றி விசாரணை செய்வதற்காகவே மேற்படி அதிகாரிகள் விரைந்திருப்பதாக கூறப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தங்களுக்கு சுதந்திரம் அளிக்காவிட்டால் சிறையிலிருந்து தப்பிச் செல்லவுள்ளதாகவும் தங்களது குழுவினர் எந்த வேளையிலும் தற்கொலைத் தாக்குதலுக்குத் தயாராக இருப்பதாகவும் பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல பாதாள உலகத் தலைவர்களான பொடி லெஸி மற்றும் கொஸ்கொட தாரக்க ஆகிய இரண்டு பாதாள உலகத் தலைவர்கள் அச்சுறுத்தல் வெளியிட்டிருப்பதாக காலி நீதவான் நீதிமன்றில் நடந்த வழக்கு விசாரணையில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப்ப பீரிஸ் அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், சிறைச்சாலை ஆணையாளர் உள்ளிட்டவர்களின் உயிர்கள் தங்கள் கைகளிலேயே இருப்பதாகவும் எந்த நேரத்திலும் தங்களால் அவர்களைக் கொலை செய்ய முடியும் என்றும் குறித்த இருவரும் தெரிவித்திருக்கின்றனர்.

தாங்கள் சிறையில் இருந்தாலும் இரண்டே மணித்தியாலங்களில் வெளியே உள்ளவர்களை சுடுப் படுகொலை செய்ய முடியும் என்றும் அவர்கள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளுக்காகவே குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் சிலர் நேற்று மாலை பூஸா சிறைச்சாலைக்கு விஜயம் செய்துள்ளனர். (நி)

# கட்டுத்துவக்கு வெடித்து குடும்பப் பெண் மரணம்

(கொழும்பு)

கரும்பு செய்கையை மிருகங்களிலிருந்து பாதுகாக்கப் புதைக்கப்பட்ட கட்டுத் துவக்கு தவறுதலாக வெடித்ததில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

சியம்பலாண்டுவ புறநகர் பிரதேசமான ஹெலமுல்ல பிரதேசத்தில் கரும்பு தோட்டத்தினை காட்டு மிருகங்களிடமிருந்து பாதுகாப்பதற்காக கரும்புத் தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு தவறுதலாக காலில் மிதிபட்டு வெடித்ததில் அவர் உயிரிழந்துள்ளார்.

அவர் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் சியம்பலாண்டுவ,ஹெலமுல்ல பகுதியியைச் சேர்ந்த ஆர்.எம்.பிரேமாவதி (வயது-52) எனும் நான்கு பிள்ளைகளின் தாயாவர். (ஜ-4)

# சிறுத்தைகள் நடமாட்டம் அதிகரிப்பு மக்கள் பெரும் அச்சத்தில்



(கொழும்பு)

திம்புள்ள-பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை கிறிலஸ்பாம் பகுதியில் மக்கள் வாழும் பகுதியில் கடந்த சில காலமாக சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதனால் மக்கள் பெரும் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

கொட்டகலை கிறிலஸ்பாம் பகுதியில் கடந்த காலங்களில் சிறுத்தைகள் இரவு வேளைகளில் மக்கள் நடமாடும் பகுதிகளுக்கு வந்து கால்நடைகளை பிடித்துச் சென்றுள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு வீடுகள் நிறைந்த பகுதியில் சிறுத்தை ஒன்று வீட்டினுள் நுழைந்து வீட்டில் வளர்க்கப்பட்டு வந்த நாய் ஒன்றினை கவ்விச் செல்வது அந்த வீட்டில் உள்ள சி.சி.ரி.வி.கமராவில் பதிவாகியுள்ளது. (ஜ-4)

# புலமைப்பரிசில் திட்டங்களுக்கு

## ஆதரவளிக்குமாறு அமெரிக்காவிடம் கோரிக்கை

(கொழும்பு)

மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டங்களுக்கு ஆதரவளிக்குமாறு அமெரிக்க அரசாங்கத்திடம் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன வலியுறுத்தினார்.

இலங்கையில் உள்ள அமெரிக்க தூதர் அலைனா பி டெப்லிஸ்ஃடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.



இதன்போது உயர் கல்வி மற்றும் வணிக வாய்ப்புகள் குறித்து இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிக்க அமைச்சர் முன்மொழிந்தார்.

அத்துடன் நாட்டில் மென்பொருள் பொறியியல் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை நாட்டில் இருந்து அமெரிக்காவுக்கான ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான சாத்தியம் குறித்து அமெரிக்க தூதுவர் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# குணமடைந்தோர் 3254

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் 9 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, இதுவரை 3 ஆயிரத்து 254 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. தொடர்ந்தும் 121 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஜ-4)

# கோணேஸ்வரர் ஆலயத்திலிருந்து விழுந்து ஒருவர் உயிரிழப்பு



(கொழும்பு)

திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்திலிருந்து விழுந்து நபரொருவர் உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் கோணேஸ்வரர் ஆலயத்தில் இருந்து கற்பாறையில் விழுந்து சிக்குண்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபரின் சடலத்தை திருகோணமலை நீதிமன்ற நீதவான் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்ட பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தலைமை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# 371 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இந்தியாவில் தங்கியிருந்த 371 பேர் நாட்டை வந்தடைந்தனர். அவர்கள் நேற்று சனிக்கிழமை அதிகாலை வந்தடைந்தனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு பணிக்கு சென்றிருந்த 362 பேரும் இந்தியாவிலிருந்து 9 பேரும் நாட்டை வந்தடைந்தனர்.

குறித்த அனைத்து புயணிகளும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன் தனிமைப்படுத்தப்பட்டனர்.(ஜ-4)

# சட்டவிரோத மீன்பிடியில் வெளியூர் மீனவர்கள்

## மட்டு.மீனவர்கள் பாதிப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு வாகரை பிரதேச காயான்கேணி கடற்பிரதேசத்தில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் வெளியூர் பிரதேச மீனவர்கள் ஈடுபடுவதனால் தங்களது நாளாந்த மீன்பிடி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அப் பிரதேச மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த பல நாட்களாக இந் நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரத் தொழிலான கரையோர மீன்பிடி நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

டைனமைட் எனும் வெடிப்பொருட்களை பயன்படுத்தி மீன் கூட்டமாக செறிந்து வாழும் கடற்பிரதேசத்தில் வெடிக்கச் செய்து, மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதனால் தமக்கு இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ்வாறான நடவடிக்கையினை தடுத்து நிறுத்த உதவுமாறு பிரதேச மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-4)

# ஹெரோயினுடன் எழுவர் கைது

(கொழும்பு)

15 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 15 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, 7 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

புத்தளம் - தங்கொடுவ கொஸ்வத்த பகுதியிலேயே இவ்வாறு போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய குறித்த சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையிலேயே ஹெரோயின் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு, 7 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# அரசியலமைப்பு சீர்திருத்தத்தை விட கல்விச் சீர்திருத்தமே எதிர்காலத்தை தீர்மானிக்கிறது

## சிறுவர்தின நிகழ்வில் பிரதமர்

**(கொழும்பு) ■■■■■■■■■■■■■■■ அரசியலமைப்பு சீர்திருத்தத்தைவிட கல்வி சீர்திருத்தம் இந்நாட்டின் எதிர்காலத்தில் தாக்கம் செலுத்துகிறது. நாம் கல்விக்கு தேசிய வருவாயிலிருந்து எவ்வளவு தொகையை ஒதுக்கினாலும் பிள்ளைகளுக்கு கல்வி சுதந்திரம் இன்றேல் அதனால் பயனற்று போகும்.**



பிள்ளைகள் சுதந்திரமாக மன மகிழ்வுடன் கல்வி கற்கக் கூடிய கல்வி சீர்திருத்தமொன்று இந்த நாட்டிற்கு உடனடியாக தேவைப்படுவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

"அபே கம" வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வதேச சிறுவர் தின தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து விடயங்களையும் மீண்டும் கட்டியெழுப்பும் நிலை உருவாகியுள்ளது. வீட்டின் பின்புறத்தில் விளையும் மஞ்சள் செடி முதல், நீங்கள் பாடசாலைக்கு அணியும் சீருடை வரை நாமே உற்பத்தி செய்து கொள்ளும் யுகமொன்று தோற்றம் பெற்றுள்ளது.

15 ஆண்டுகளுக்கு முன்பு நாம் முகம்கொடுத்து வந்த பிரச்சினைகளை எதிர்கால தலைமுறையினர் அனுபவிக்க இடமளிக்க மாட்டோம்.

இன்று அந்த எதிர்காலம் உதயமாகியுள்ளது. அன்றைய தலைமுறையினர் முகங்கொடுத்த பிரச்சினைகள் இன்று என் முன்னிலையிலுள்ள பிள்ளைகள் முகம்கொடுக்க வேண்டியதில்லை. அன்று நாட்டின் ஒரு பகுதியினருக்கு மாத்திரமே மின்சாரம் கிடைத்தது. காபட் செய்யப்பட்ட வீதிகள் இந்நாட்டில் மிக சொற்பமே காணப்பட்டன. மக்கள் தொகையில் 5 வீதத்திற்கு மாத்திரமே கணனி கல்வி காணப்பட்டது.

அவற்றினால் ஏற்பட்ட பிரச்சினைகளை இன்றைய தலைமுறையினர் முகம்கொடுக்காத நாட்டை நாம் உருவாக்கியுள்ளோம். நாம் அன்று நாட்டில் நவீன தொழில்நுட்பத்தை மேம்படுத்தியமையால் கொவிட் - 19 தொற்று ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் இந்நாட்டில் இலட்சக்கணக்கான பிள்ளைகளுக்கு கணனி பயன்பாட்டின் மூலம் பாடசாலை நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடியதாயிற்று.

எதிர்கால தலைமுறையினர் வரலாற்றை திரும்பி பார்க்கும் போது இக்காலத்தில் வாழ்ந்திருந்தால் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும் என்று எண்ணத் தோன்றும் வகையிலான ஒரு நாட்டை நிர்மாணிப்பதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என தனது திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை 2020 சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு இதன்போது நினைவு முத்திரையொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 19ல் நீக்கப்பட்ட உட்பிரிவுகள் 20ல் அறிமுகப்படுத்தப்படும்

(கொழும்பு)

19 ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் நீக்கப்பட்ட உட்பிரிவுகள் மீண்டும் 20 ஆவது திருத்தத்தால் அறிமுகப்படுத்தப்படுகின்றன என சட்டமா அதிபர் தப்புல லிவேரா தெரிவித்தார்.

20 ஆவது திருத்தத்தை சவாலுக்கு உட்படுத்திய மனுக்கள், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிகார, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் சிசிர த ஆப்ரோ ஆகிய ஐவரடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது அவர் இந்த சமர்ப்பிப்புகளை முன்வைத்தார்.

மனுக்களின் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள சட்டமா அதிபர், அந்த விதிமுறைகளில் பெரும்பாலானவை கடந்த காலங்களில் உயர் நீதிமன்றத்தால் விரிவாக ஆராயப்பட்டதாகவும் ஆகவே முன்மொழியப்பட்ட 20 ஆவது திருத்தமும் அந்த தீர்மானங்களுக்குக் கட்டுப்படுவதால் அந்த விதிகளின் சட்ட பூர்வமான தன்மை குறித்து எந்தக் கேள்வியும் இருக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் மனுதாரர்கள் அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளை மீறுகிறார்கள் என்றும் அதேசமயம் அவை 1978 அரசியலமைப்பு மற்றும் கடந்த திருத்தங்களில் வேறு எங்கும் காணப்படலாம் என்ற அடிப்படையில் பல கருதுகோள்கள் மற்றும் பல்வேறு கூற்றுக்களின் இணைப்புகளைக் கொண்டு வந்துள்ளனர் என்றும் குற்றம்சாட்டினார்.

சுமார் 12 தலையீட்டு மனுதாரர்களுடன் இந்த 20 ஆவது திருத்தச் சட்டமூல வரைபினை எதிர்த்து 39 மனுக்கள் தாக்கல் 



செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் மீதான சமர்ப்பிப்பு அனைத்தும் வெள்ளிக்கிழமையுடன் முடிவடையவிருந்தாலும், மேலதிக சமர்ப்பிப்புகளை முன்வைக்க சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியது. அதன்படி நாளை திங்கட்கிழமை அவர் மேலதிக சமர்ப்பிப்புகளை முன்வைப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

நகரகுடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உதவி பணிப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், தரவு திட்ட உதவியாளர், சமுதாய அபிவிருத்தி உதவியாளர், தொழில்நுட்ப உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர் (தொழில் நுட்பமல்லாதது), சமூக அபிவிருத்தி உதவியாளர், அலுவலக பணி உதவியாளர் மற்றும் சுவடிகள் பொறுப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலும் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாதது) பதவிக்கு க.பொ.த.சாதரணப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தமிழ்மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் திறமைச்சித்தியுடன் க.பொ.த. உயர்தர பரீட்சையில் பொது அறிவு தவிர்ந்த 3 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் 18 வயதிற்கு குறையாத மற்றும் 30 வயதிற்கு மேற்படாத விண்ணப்பதாரிகள் இம்மாதம் 16ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 02 ஆம் திகதி வர்த்தமானி பார்வையிடலாம். (நி-6-10)

# திறம்பட செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராளுமன்ற செயற்பாடுகளை கண்காணிக்கின்ற இணையத்தளமான **www.manthri.lk** புதிய பாராளுமன்றத்தின் முதல் மாத நிறைவில் வினைத்திறன் மிக்க முறையில் திறமையாக செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் விபரங்களை வெளியிட்டுள்ளது.

இதன்படி, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க முதல் இடத்திலும், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இரண்டாம் இடத்திலும் உள்ளனர்.

அமைச்சர்களான பந்துல குணவர்த்தன மற்றும் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் முறையே மூன்றாம், நான்காம் இடங்களிலும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா ஐந்தாம் இடத்திலும் உள்ளனர்.

இதேவேளை, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன் 11வது இடத்திலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் 14வது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பாடசாலைகளில் இருந்து அரசியலை விலக்கி வைக்க வேண்டும்



(கொழும்பு)

பாடசாலைகளில் இருந்து அரசியலை விலக்கி வைக்க வேண்டும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்தியுள்ளார்.


பாடசாலை நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளில் ஏற்பாடு செய்யப்படும் விழாக்களில் அரசியல்வாதிகள் அல்லது அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள்கலந்து கொள்ள முடியும்என்றாலும், பாடசாலைகளின் சுதந்திரத்தில் தலையிடுவது நல்லதல்ல.

பாடசாலை ஒரு புனிதமான இடம். ஒரு குழந்தையின் வாழ்க்கையை வடிவமைக்கும் இடம். குழந்தைகள் ஒரு நாளைக்கு 7-8 மணி நேரம் செலவழிக்கும் இடமாகும்.

ஆகவே, குழந்தைகள் சமுதாயத்தைப் பற்றி அக்கறை கொண்டவர்களாகவும், தேசத்திற்கு நன்மை செய்வோராகவும் ஆக்கவேண்டியது ஒரு புனிதமான பொறுப்பு பெற்றோருக்கும், பெரியவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# அமைச்சரவை பேச்சாளருக்கு தனிச்சிங்களத்தில் வரவேற்பு பதாகை





(நெளுக்குளம்)

நேற்றுக் காலை வவுனியா மாவட்ட செயலகத்திற்கு ஊடகத் துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெலவும் அவருடைய குழுவினரும் வருகை தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

மாவட்ட செயலகத்தில் அமைச்சரை வரவேற்கும் பதாகையில் தனிச்சிங்களத்தில் அமைக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்ந்து வரும் வடக்கு பகுதியில் தனிச்சிங்களத்தில் அரச நிகழ்வுகள் அண்மைய காலங்களாக இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4-299)

# கட்டுப்பாட்டை இழந்து பேருந்து விபத்து

## இருவர் காயம்





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம் சந்தி பகுதியில் அரசு பேருந்து நேற்று விபத்துக்குள்ளாகியது.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த அரச பேருந்து வீதியைவிட்டு விலகிச்சென்றதனாலேயே குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பேருந்தானது கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி, வீதியின் அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறிய கார் மற்றும் ஆட்டோ என்பவற்றுடன் மோதி அதன் பின் அருகிலிருந்த பாலத்துடனும் மோதி விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்தில் பேருந்தில் பயணம் செய்த பயணி ஒருவர் காயமடைந்ததுடன், பேருந்து மற்றும் வீதியின் அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறிய கார், ஆட்டோ என்பனவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் விபத்தில் காயமடைந்தவர்கள் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-4-299)

# பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 22 பேர் கைது

(குருமன்காடு)

வவுனியா பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது 3 மணி நேரத்தில் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் மாலை 3 மணிநேரம் குறித்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குற்றச்செயல்கள் அற்ற வவுனியாவை உருவாக்குவோம்" என்ற தொனிப்பொருளில் வவுனியா பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கமைய வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸார் விசேட நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது பல்வேறு குற்றச்சாட்டுகளில் தொடர்புடைய 22 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் வவுனியா பொலிஸ் நிலைய தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் அவர்களிடம் விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (நி-4-250)

# 902 கிலோ மஞ்சளுடன் இருவர் கைது

(மன்னார்)

மன்னார் தாழ்வுப்பாடு பகுதியில் இந்தியாவிலிருந்து கடல் வழியாகக் கொண்டு வரப்பட்ட 902 கிலோ கிராம் மஞ்சளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இந்தியாவிலிருந்து கடல் வழியாக மன்னார் தாழ்வுப்பாடு பகுதிக்குக் கொண்டு வரப்பட்ட 902 கிலோ கிராம் மஞ்சளுடன் மன்னார் மற்றும் புதுக்குடியிருப்பினைச் சேர்ந்த 22 மற்றும் 48 வயதுடைய இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் சுங்க அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டதுடன் கைது செய்யப்பட்ட நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு தனிமைப்படுத்தல் நிறைவுற்ற பின்னர் அவர்கள் சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவிருப்பதாக கடற்படை ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (நி-6)

# அங்குரார்ப்பண நிகழ்வு

(நெளுக்குளம்)

அருள்மிகு ஸ்ரீலஷ்மி சமேத நரசிங்கர் ஆலய பரிபாலன சபையின் ஆதரவின் கீழ் "கல்வி சமூக அபிவிருத்தி நிதியம்" அங்குரார்ப்பண நிகழ்வு பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை 2.30 மணியளவில் இடம்பெறும்.

ஆலயத்தின் தலைவர் கோ. சிறிஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் எம்.சாள்ஸ் கலந்துகொள்வார். (நி-4-299)



# பிரதேச ஊடகவியலாளர்களின் நலன்களில் கவனம் செலுத்தப்படும்

(அக்கராயன்)

பிராந்திய ஊடகவியலாளர்களின் நெருக்கடிகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த தீர்மானித்துள்ளோம் என ஊடகத்துறை மற்றும் தபால் துறை இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் தகவல் திணைக்கள மாவட்ட அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிராந்திய ஊடகவியலாளர்களின் நிலைமைகள் மோசமானது. அவர்களுக்கு கிடைக்கின்ற வருமானம் அவர்களது வாழ்க்கையை கொண்டு செல்ல போதுமானது அன்று. பல பிராந்திய ஊடகவியலாளர்கள் தங்களது கையடக்க தொலைபேசிமூலமே ஊடகத் தொழிலை மேற்கொள்கின்றனர்.

பலருக்கு காணியில்லை. காணியிருந்தால் வீடு இல்லை. இப்படி ஏராளமான பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனவே தான் நாம் பிராந்திய ஊடகவியலாளர்களின் நலன்கள் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4-350)





அரசாங்க தகவல் திணைக்களம் மற்றும் மாவட்ட ஊடக பிரிவின் கிளிநொச்சி அலுவலகம் நேற்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவினால் திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் அமைச்சர், இராஜாங்க அமைச்சர், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், அமைச்சின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- சப்த சங்கரி)

துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்து விடாதே. - அப்துல் கலாம்.

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிக்கலான இடங்களில் பொலிஸ் காவலரண்கள் தேவை

வடபகுதியில் கொலை, கொள்ளை, வழிப்பறி, வாள்வெட்டு என்பன தலைவிரித்தாடுகிறது.

எனினும் இதனை எவரும் கண்டுகொள்வதாக இல்லை.

யாழ்ப்பாணத்தில் மிகப்பெரிய பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

தவிர, பிரதேச ரீதியிலும் பொலிஸ் நிலையங்கள் உள்ளன. இருந்தும் குற்றச்செயல்கள் இம்மியும் குறைந்ததாகத் தெரியவில்லை.

வடபகுதி முழுவதிலும் நிறைந்த பொலிஸார் சேவையில் உள்ளனராயினும் அவர்கள் பொலிஸ் நிலையங்களில் இருப்பதை அவதானிக்க முடிகிறதே தவிர, தேவையான இடங்களில் பொலிஸ் காவலரண்கள் (Police Post) அமைக்கப்படவில்லை.

உதாரணத்துக்கு யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடை வெளியில் பொதுமக்கள் பயணிக்க முடியாத அளவில் கொள்ளை மற்றும் வாள்வெட்டுச் சம்பவங்கள் சதா நடந்தாகின்றன.

இருந்தும் அப்பகுதியில் பொலிஸ் காவலரண்களை அமைப்பதற்கான எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இதுபோல வடபகுதியில் பொதுமக்கள் அச்சமின்றிப் பயணிக்க முடியாது என இனங்காணப்பட்ட இடங்களில் பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்படுவது அவசியம்.

ஆனால் அதுபற்றிய நினைப்பு எவரிடமும் இல்லை.

குறிப்பாக தென்பகுதியில் ஒரு பொலிஸ் நிலையத்தின் கீழ் ஏகப்பட்ட காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால் வடபகுதியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவலரண்கள் மிகமிகச் சொற்பம் எனலாம்.

இந்த நிலைமை எதற்கானது எனக் கேள்வி எழுப்பினால், பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் தங்கியிருப்பது அவர்களுக்குச் சுகமானது என்ற வகையிலும் தமிழர் பிரதேசத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்ற ஆபத்துக்களைத் தடுக்க வேண்டியதில்லை என்ற மனநிலையிலுமே பொலிஸ் காவலரண்களை அமைக்கின்ற எண்ணம் இல்லாமல் போயிற்று எனலாம்.

எனவே இந்தக் குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட வேண்டும். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் மாநகர, பிரதேச சபைகளின் கூட்டங்களிலும் இதுபற்றிப் பிரஸ்தாபிப்பது அவசியம்.

ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளுக்குட்பட்ட இடங்களில் எங்கெங்கு பொலிஸ் காவலரண்கள் தேவையோ அவற்றை அமைப்பதற்கான கோரிக்கைகளை குறித்த உள்ளூராட்சி அமைப்புகள் தத்தம் சபைக் கூட்டங்களில் தீர்மானமாக நிறைவேற்றி அதனை அமுலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையேல் சட்டம், ஒழுங்கு நிலை குலைந்து வடபகுதி முழுவதும் அச்சம் நிறைந்ததான சூழமைவு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

# வீடில்லா பிரச்சினைகளை தீர்க்க தொடர் மாடி வீடுகள் அமைக்க யோசனை

## வவுனியாவில் அமைச்சர் ஹெகலிய

(வவுனியா)

வீடில்லா பிரச்சினைகளை தீர்க்க அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போன்று தொடர்மாடி வீடுகளை அமைக்கும் யோசனையை முன்வைக்கவுள்ளதாக வெகுசன ஊடக அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்களை வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து, உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடக அமைச்சினைப் பொறுப்பேற்றுக் கொண்டபின் வட பகுதிக்கு வருகை தந்து ஊடகவியலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து கொண்டுள்ளோம். வினைத்திறன் மிக்க ஒரு சேவையை வழங்க நாம் திட்டமிட்டுள்ளோம். நாம் முன்னெடுக்கும் செயற்பாடுகளை தொடர்ந்து முன்கொண்டு செல்ல உங்களுடைய பங்களிப்பு அவசியம். கடந்த காலங்களில் பார்க்கின்ற போது ஊடகத்துறையில் ஒரே பாங்கான பிரச்சினைகளே உள்ளன. ஜனாதிபதி அவர்கள் அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகளை வழங்கும் போது இராஜாங்க அமைச்சுக்களுக்கும் ஒதுக்கீடுகளை வழங்கி அதனூடகவும் விரைவாக வேலைத்திட்டங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளார். தெற்கு ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்து வரப்பிரசாதங்களும் எங்களுக்கும் கிட்ட வேண்டும் என வடக்கு ஊடகவியலாளர்கள் கோருகின்றனர். வடக்காக இருக்கட்டும், தெற்காக இருக்கட்டும், மேற்காக இருக்கட்டும், கிழக்காக இருக்கட்டும் ஊடகவியலாளர்கள் பொதுவாகவே நோக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளும் பொதுவாகவே காணப்படுகின்றன.

கொழும்பில் பணியாற்றும் ஊடகவியலாளர்களின் தகவல் பரிமாற்ற உபகரணங்களுக்கும், பிராந்திய ஊடகவியலாளர்களின் உபகரணங்களுக்கும் வேறுபாடுகள் இருக்க கூடும். பிரதேச ரீதியிலான ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து ஒரு சங்கமாக தமது பிரச்சினைகளை எழுத்து மூலம் முன்வைக்கலாம் என்கின்ற ஒரு யோசனையை நான் முன் வைக்கின்றேன். பிரதேச ரீதியிலான ஊடகவியலர்களுக்கு பிரச்சினைகள் பல இருப்பதை நான் காண்கின்றேன். ஊடகவியலாளர்கள் யார்? என்ன தன்மையை கொண்டிருப்பார்கள் என்ற கேள்வி எங்களிடமும் இருக்கின்றது. எங்களால்முடிந்த சேவைகளையும், சலுகைகளையும் வழங்குவதற்கு நாங்கள் முயல்வோம்.

பல்வேறு துறையினருக்கும் காணி கள் வழங்குவது தொடர்பாக நான் கொண்டிருக்கும் கருத்து சற்று வேறுபாடானது. எமது நாட்டின் சனத்தொகை பெருக்கத்திற்கு ஏற்ப காணிகள் பெருகுவதில்லை. ஆகவே ஒவ்வொரு துறையினரும் கேட்கின்ற காணிகளை வழங்குவது சாத்தியமான விடயமல்ல. அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் பார்க்க வேண்டும். அங்கு குடியிருப்புக்களுக்காக தொடர் மாடி வீடுகளை அமைத்துள்ளார்கள். அவ்வாறானதொரு முன்மொழிவுகளை முன்வைக்க விரும்புகின்றேன். ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி பல மக்களும் வீடின்றி காணப்படுகின்றார்கள். இதனால் இதனை ஒரு பொதுப் பிரச்சினையாக காண்கின்றேன். ஆகவே ஊடகவிய்லாளர் பிரச்சினைகளை தீர்க்க திட்மிடப்பட்ட செயன்முறை ஒன்றை முன்னெடுக்க யோசித்துள்ளோம் எனத் தெரிவித்தார். (ம-03.250.299)

## பருத்தித்துறை வீதியில் மோ. சைக்கிள் விபத்து

### ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சரசாலை - பருத்தித்துறை வீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரி பகுதியில் இருந்து வடமராட்சி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதில் கரவெட்டி பகுதியைச் சேர்ந்த 34வயதான ம.சதீசன் என்பவரே விபத்தில் படுகாயம் அடைந்தவராவார். (ம-3.30)

முல்லையில் வேலை தேடுவோருக்கான

## தொழிற்திறன் விருத்தி இலவச பயிற்சி நெறி


(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்டதில் வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் மனித வலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொழில் திறன் விருத்தி இலவச பயிற்சி நெறியானது நாளை திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி தொழிற்திறன் விருத்தி இலவச பயிற்சி நெறியில் வேலை வாய்ப்புத் தேடும் இளைஞர் யுவதிகளை கலந்து கொண்டு பயன்பெறுமாறு முல்லைத்தீவு மாவட்ட செயலக மனித வலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.


(ம-03.281)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ காணப்படுகிறவைகள் அநித்தியமானவை. காணப்படாதவைகளோ நித்தியமானவை.
❖ அழிவுள்ளதாய் விதைக்கப்படுவது அழிவில்லாததாய் எழுந்திருக்கும்.
❖ முன்போலவே, மண் மண்ணுக்குத் திரும்பி போகும். கடவுள் கொடுத்த ஆவி அவரிடமே திரும்பிப் போகும்.
❖ அழுகிறவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவார்கள்.
❖ நான் விரும்புவது பலியை அல்ல. அன்பு நிறைந்த தயாளத்தை! ஏனெனில் நான் அழைக்க வந்தது நீதிமான்களையல்ல. பாவிகள் மனந்திருந்தவே.
❖ நீங்கள் எந்த அளவினால் அளப்பீர்களோ, அந்த அளவு உங்களுக்குத் திரும்ப அளிக்கப்படுவதுமின்றி கூடவும் கொடுக்கப்படும்.
❖ வானத்தின் உயரம், பூமியின் ஆழம், ராஜாக்களின் அந்தரங்கம் இவைகள் ஆராய்ந்து அறிய முடியாதன.
❖ அறம் தான் ஒரு தேசத்தை உயர்த்துகிறது. ஆனால், பாவமோ எந்த ஜனங்களுக்கும் இழிவாகும்.
❖ கத்தி எடுத்தவன் அந்த கத்தியாலேயே அழிந்து போவான்.

# தொடர்ந்து பின்வாங்கும் சென்னை வெற்றி நடைபோடும் ஐதராபாத்



சென்னை சுப்பர் கிங்ஸ் - சன்ரைசர்ஸ் ஐதராபாத் இடையிலான ஐபிஎல் தொடரின் 14-வது ஆட்டம் டுபாயில் நடைபெற்றது. டொஸ் வென்ற வோர்னர் பட்டிங் தேர்வு செய்தார்.

அதன்படி டேவிட் வோர்னர், பேர்ஸ் டோவ் சன்ரைசர்ஸ் அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கினர். 3 பந்துகளை மட்டுமே சந்தித்த பேர்ஸ்டோவ் ரன் எதுவும் எடுக்காமல் சாஹர் பந்து வீச்சில் வெளியேறினார்.

அடுத்துவந்த மணிஷ் பாண்டே, வோர்னருடன் ஜோடி சேர்ந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மணிஷ் பாண்டே 29 ரன்னிலும், வோர்னர் 28 ரன்னிலும் அடுத்தடுத்து வெளியேறினர்.

அடுத்துவந்த வில்லியம்சன் 9 ரன்னில் வெளியேறினார். அடுத்து களமிறங்கிய இளம் வீரர்களான அபிஷேக் சர்மா - பிரியம் கார்க் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

24 பந்துகளை சந்தித்த அபிஷேக் சர்மா 4 பவுண்டரிகள், 1 சிக்சர் உட்பட 31 ரன்கள் குவித்தார். அதேபோல் மற்றொரு வீரரான பிரியம் கார்க் 26 பந்துகளில் 6 பவுண்டரிகள் ,1 சிக்சர் உட்பட 51 ரன்கள் குவித்து இறுதிவரை களத்தில் இருந்தார்.

இதனால், 20 ஓவர் முடிவில் ஐதராபாத் அணி 5 விக்கெட் இழப்புக்கு 164 ரன்கள் குவித்தது. சென்னை அணியில் தீபக் சாஹர் அதிகபட்சமாக 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து, 165 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் வோட்சன் மற்றும் டு பிளசிஸ் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

ஆரம்பத்திலேயே தடுமாறிய வாட்சன் 6 பந்துகளை சந்தித்து 1 ரன் மட்டுமே எடுத்து வெளியேறினார். அடுத்துவந்த அம்பதி ராயுடுவும் 8 ரன்னில் வெளியேறினார். தொடக்க வீரரான டு பிளசிஸ் 19 பந்தில் 22 ரன் எடுத்து வெளியேறினார். பின்னர் களமிறங்கிய ஜாதவ் 3 ரன்னில் அவுட் ஆனார்.

அடுத்து களமிறங்கிய கப்டன் டோனி மற்றும் ஜடேஜா ஜோடி சென்னை அணியின் ஸ்கோரை மெல்ல உயர்த்தினர். ஆட்டத்தின் இறுதி கட்டத்தில் அதிரடியாக ஆடிய ஜடேஜா 35 பந்துகளில் 5 பவுண்டரிகள் , 2 சிக்சர்கள் உட்பட 50 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

ஆனாலும், வெற்றி பெற 8 பந்துகளில் 35 ரன்கள் தேவை என்ற கடினமான இலக்குடன் கப்டன் டோனி களத்தில் இருந்தார். பின்னர் கடைசி ஓவரில் 28 ரன்கள் தேவைப்பட்டது.


ஆனால், சென்னை அணியால் கடைசி ஓவரில் 20 ரன்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதனால், சென்னை சுப்பர் கிங்ஸ் 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 157 ரன்கள் மட்டுமே எடுத்தது.

இதனால், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை 7 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி வெற்றி பெற்றது. சென்னை அணியின் கப்டன் டோனி 47 ரன்களுடனும், சாம் கரன் 15 ரன்னிலும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

ஐதராபாத் அணியின் நடராஜன் அதிகபட்சமாக 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். (4)

# ஐ.பி.எல்.-2020

## பார்வையாளர்களின் எண்ணிக்கை 15 வீதமாக அதிகரிப்பு



ஐ.பி.எல். தொடரின் பார்வையாளர்கள் எண்ணிக்கை இந்த வருடம் 15 சதவீதமாக உயர்வடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வரும் 13 ஆவது ஐ.பி.எல். தொடர் நவம்பர் 10 ஆம் திகதியுடன் நிறைவு பெறுகிறது. டுபாய், அபுதாபி, ஷார்ஜாவில் உள்ள கிரிக்கெட் மைதானங்களில் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் ஐ.பி.எல். போட்டியின் முதல் வார தொலைக்காட்சி ரேட்டிங் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

செப்டெம்பர் 19 முதல் 25 வரையிலான ஆட்டங்களை 26.9 கோடி பேர் பார்த்துள்ளார்கள்.

இதை 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது பார்வையாளர்கள் எண்ணிக்கை 15 சதவீதம் அதிகமாகியுள்ளது.

இந்தக் கணக்கு தொலைக்காட்சி வழியாகப் பார்த்தவர்களை வைத்து மதிப்பிடப்பட்டது ஆகும்.

இணையம் வழியாக ஐ.பி.எல் ஆட்டத்தை நேரலையாகப் பார்த்தவர்களின் எண்ணிக்கை இதில் இணைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# கே.சி.சி.சி வெற்றி கிண்ணம் - 2020

## விக்ரோறியன்ஸ் அரையிறுதிக்கு தகுதி

கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணம் 2020 தொடரின் முதலாவது கால் இறுதிப் போட்டி கடந்த 26ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் விக்ரோறியன்ஸ் அணி டிறைற்றேன் அணியை 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று முதலாவது அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டிறைற்றேன் அணி 23.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களை பெற்றது. போட்டியில் ரவிராஜ் 17, மதுசாந் 18, உதயசாந் 15, நந்தகுமார் 11 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் விக்ரோறியன்ஸ் அணியின் பிரதீஸ் 5, பிரசாந் 3, கிருசாந்,கிரிதரன் 1 விக்கெட் டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விக்ரோறியன்ஸ் அணி 22.2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களில் 111 ஓட்டங்களை பெற்றது. போட்டியில் சங்கர் 22, கிரிதரன் 13, கிரிசாந் 18 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் டிறைற்றேன் அணியின் உதயசாந் 3, மதுசாந் 2, செந்தூரன், அஜன் 1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


இப் போட்டி மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்விற்கு விக்ரோறியன்ஸ் அணிக்கு 5.41, றைற்றேன் அணிக்கு 1.80 புள்ளிகளும் கிடைக்கப்பெற்றுள்ளது. (4)

# நொதேன் பிறீமியர் லீக் - 2K20

## கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டிகள்



- நோர்த் சுப்பீரியர்ஸ் எதிர் கொக்குவில் ஸ்ரார்ஸ்
- கொக்குவில் ஸ்ரார்ஸ் - 57/9
- நோர்த் சுப்பீரியர்ஸ் - 58/9
- ஆட்ட நாயகன் - யதுசன் - 3 விக்கெட்டுக்கள்



- நோர்த் சுப்பீரியர்ஸ்எதிர் ஊரெழு றோயல்ஸ்
- நோர்த் சுப்பீரியர்ஸ் - 57/6
- ஊரெழு றோயல்ஸ் - 58/6
- ஆட்ட நாயகன் - அருண் - 3 விக்கெட்டுக்கள்



- கிங்கோப்றாஸ் ஜப்னா எதிர் நோநேம் கிளப்
- கிங்கோப்றாஸ் - 83/10
- நோ நேம் - 71/6
- கிங்கோப்றாஸ் ஆட்ட நாயகன் - வனிதன் - 18 ஓட்டம், 1 விக்கெட்டுக்கள்

## மகன் தாக்கி...

கான தந்தை ஒருவர் பரிதாபமாக மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு மகனின் தாக்குதலுக்கு இலக்காகி இரண்டு கைகளும் முறிந்த நிலையில் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த 56 வயதான ச.சந்திரசேகரம் என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று சனிக்கிழமை காலை சிகிச்சை பலனின்றி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

தாக்குதல் நடத்திய 28 வயதான மகன் தலைமறைவாகியுள்ள நிலையில் சாவகச்சேரி பொலிஸார் அவரைத் தேடி வருகின்றனர். (ம-3,30)

## பருத்தித்துறை...

மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை நகரை அண்டிய பகுதியில் இரு குழுக்களுக்கு இடையே மோதல் சம்பவம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்து பொலிஸாராக கடமையாற்றும் 52 வயதுடைய ஜெயக்கொடி என்பவர் அப்பகுதிக்குச் சென்றபோது அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து அவர் முகப்பகுதியில் காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3,60)

## இந்திய மீனவர்...

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பகுதியினர் தெரிவித்தனர்.

குடாரப்பு கடற்கரை பகுதியில், மன்னார் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் வாடி அமைத்து கடலட்டை பிடிக்கும் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களில் ஒன்பது பேர் இந்திய மீனவர்களின் படகுகளிற்கு சென்று அவர்களுடன் தங்கியிருந்ததுடன் அவர்களின் உணவுகளையும் உட்கொண்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றதையடுத்து பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் மற்றும் பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து நேற்று சனிக்கிழமை அங்கு தங்கியிருந்து கடலட்டை பிடிப்பவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டதுடன்பி.சி.ஆர். பரிசோதனைகளையும் மேற்கொண்டனர்.

இதன்போது 9 மீனவர்கள் தனிமைப் படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 70 வரையான மீனவர்கள் சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (ம-3,60)

## புங்குடுதீவில்...

இதில் கிளிநொச்சியைச் சேர்ந்த இராசையா இராசரூப சர்மா (வயது-32) என்ற ஊரதீவு பாணாவிடை சிவன் கோயில் சிவாச்சாரியாரே கொலை செய்யப்பட்டவராவார்.

நேற்று அதிகாலை அடித்துக் கொலை செய்யப்பட்ட பூசகரின் சடலம், குளக்கரையில் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாரும் யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்தில் ஊர்காவற்றுறை நீதவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி மயூரன் ஆகியோர் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சிவாச்சாரியாரின் தலையின் பின்பக்கத்தில் இரும்புக் கம்பியால் தாக்கியே அவர் கொலை செய்யப்பட்டார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொலையில் ஈடுபட்டவர்கள் சி.சி.ரி.வி. கமெராக்களை கழற்றி எடுத்துச் சென்றுள்ளனர்.

சிவாச்சாரியாரின் உதவியாளரான விசுவமடுவைச் சேர்ந்த விதுஷன் என்பவர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் சுழிபுரம் பாணாவெட்டையைச் சேர்ந்த மேலும் இரண்டு ஆலய உதவியாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், குறித்த மூவரும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் "மூவரும் மதுபோதையில் இருந்ததால் சிவாச்சாரியாரை இரும்புக் கம்பியால் தாக்கிவிட்டோம். அதனால் அவர் மயங்கிச் சரிந்துவிட்டார்.

சம்பவம் சிசிரிவியில் பதிவாகியிருக்கும் என்ற காரணத்தால் அதன் சேமிப்பகத்தை (Hard Disk) எடுத்துச் சென்று மறைத்தோம்" என்று சந்தேகநபர்கள் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

அத்துடன், சிவாச்சாரியாரின் உடைமையிலிருந்து எடுக்கப்பட்ட 15 ஆயிரம் ரூபாய் பணத்தை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் பெண்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெண் ஒருவரை அழைத்து வந்து கலாசார சீரழிவில் ஈடுபட்டமையை அனுமதிக்காது கண்டித்தமையை அடுத்தே பூசகரை அவரது உதவியாளரும் ஏனைய இருவரும் சேர்ந்து கொலை செய்துள்ளனர்.

அத்துடன், பெண் ஒருவரைக் காதலித்தமைக்காக சிவாச்சாரியார் தன்னைத் தாக்கினார் என்று உதவியாளர் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து நேற்று முன்தினமிரவு மது அருந்திவிட்டு சிவாச்சாரியாரை தாம் தாக்கியதாக சந்தேகநபர்கள் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

தலையின் பின் பிடரியில் கம்பியால் தாக்கியதால் சிவாச்சாரியார் அந்த இடத்திலேயே சரிந்தார் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தையடுத்து சிவாச்சாரியாரின் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவின் சேமிப்பகத்தை பிடுங்கிச் சென்று சந்தேகநபர்கள் மறைத்துள்ளனர். அந்த சேமிப்பகம் சந்தேகநபர்களின் தகவலின் அடிப்படையில் பொலிஸாரால் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன், சிவாச்சாரியாரின் உடைமையிலிருந்த 15 ஆயிரம் ரூபாய் பணத்தை எடுத்த சந்தேகநபர்கள் அதனை யாழ்ப்பாணம் நகருக்குச் சென்று பொருட்கள் வாங்கி வரும்படி பெண்கள் இருவரிடம் வழங்கியுள்ளனர்.

அதனால் அந்த பணத்தை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் நிறைவில் சந்தேகநபர்கள் 5 பேரும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ம-3,18)

## முல்...

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாத்தளன் பகுதியில் மாத்தளன் கடற்கரைப் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கின்ற இரு வாடிகளுக்கு நேற்று மாலை 3 மணியளவில் இனந் தெரியாத விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது. (ம-3,281)

## இல...

கள் உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இறந்தவர்களில் ஒரு பெண் மற்றும் நான்கு குழந்தைகள் அடங்குவர். மேலும் ஐந்து பேர் கத்தி வெட்டு காயத்திற்குள்ளாகியுள்ளனர். அதில் மூன்று பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (ம-3)

## நெற்செய்கை...

என்று குற்றம்சாட்டியே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இருந்தபோதிலும் நீண்டகாலமாக தாம் தொடர்ந்தும் அந்தப் பகுதிகளில் நெற்செய்கையில் ஈடுபட்டு வருவதாகவும் குறித்த காணிகளுக்கான உறுதிகள் தம்மிடம் உள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தபோதிலும் அதனைச் செவிமடுக்காமலேயே கைது இடம்பெற்றிருப்பதாக தெரியவருகிறது. (ம-3)

## எதிர்க்கட்சியில்...

அரசாங்கம் கொண்டுவந்துள்ள 20ஆவது திருத்தச் சட்டமானது நிறைவேற்றப்படும் என்று அரச தரப்பினர் நம்பிக்கையில் இருக்கின்றனர்.

எனினும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவும் இதற்கு தேவை என்கிற கோணத்தில் அரசாங்கம் இதனை அணுகுவதாக தெரிவிக்கப்படுகின்றன. (ம-3)

## நாட்டுக்குப்...

எனவே, அதனை நிச்சயம் செய்வோம். அதற்கு முன்னர் தற்காலிக ஏற்பாடாக 20ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படும்.

ஏனெனில், 19ஆவது திருத்தச் சட்டத்தால் இந்த நாடு அழிவை நோக்கிப் பயணித்தது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரால் இணைந்து செயற்பட முடியாத நிலை ஏற்பட்டது. சுயாதீனம் என்ற போர்வையில் பழிவாங்கல்களுக்காக ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன என்றார் (ம-3)


மெகா பவர்
திகதி 03/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0631
Q 08 46 63 72 77

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 03-10-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1060
0 2 2 5 9 4 1

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 03-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2559
I 26 40 57 58

மஹஜன சம்பத
திகதி 2020/10/03
சீட்டிழுப்பு இலக்கம் 4264
F 3 5 5 7 6 3

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/10/03
சீட்டிழுப்பு இலக்கம் 1540
சுப்பர் இலக்கம் 10
வெற்றி இலக்கங்கள் 36 53 54 55

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1234 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 03.10.2020 தினம் சனிக்கிழமை
V 30 38 50 54
51,836,467.20
SUPER 500 5 9 5 0

ராசி
திகதி 03/10/2020 வெற்றி வாரம் 2941
சுப்பர் ஜக்பொட் ரூ. 34,56,958
வர்ணம் இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 08 46 47 52
மேடம்
ரூ.500 பரிசுக்குரிய 6243
ரூ.100 பரிசுக்குரிய 160
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,963,600

அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1060
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2020.10.03
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 75,181,245/-
வெற்றி இலக்கங்கள் 10 18 45 62 B
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 7136
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 177
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.10.03
சீட்டிழுப்பு இல.: 3390
வர்ணம் : பச்சை
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 43,908,903.40
வெற்றி இலக்கங்கள் 21 22 41 42 P
ரூ 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 5844
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சங்வர்தன வாசனா
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 372 திகதி 03.10.2020 வர்ணம் சிவப்பு
W 22 69 70 7
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,553,720
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

## வேலையாட்கள் தேவை

K.M.V.R. ஆயுர்வேத மருந்துக் கடைக்கு, கடை அனுபவம் மற்றும் கணனி அறிவுடைய வேலையாட்கள் உடன் தேவை.

கடையை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

நேரடியாக தொடர்பு கொள்ளவும்

தொடர்பு : 076 913 2049

K.M.V.R. ஆயுர்வேத மருந்துக்கடை, கே.கே.எஸ் வீதி, மாவிட்டபுரம். (C-471)

## கனடாவில் வேலைவாய்ப்பு/கல்வி கருத்தரங்கு

குறைந்த செலவில் ஒரு பராமரிப்பாளராக குடும்பத்துடன் கனடாவில் நிரந்தர பிரஜை ஆகுவதற்கான வாய்ப்புக்கள்

- செலவு குறைத்து கனடா செல்வதற்கான வழிமுறைகள்
- பல்வேறு விசா நடைமுறைகள்
- புதிய குடிவரவு திட்டங்கள்
- பிற நாடுகளுடன் ஒப்பிடும்போது கனடிய குடிவரவு அனுகூலங்கள்
- O/L உடன் கனடாவில் கல்வியினை தொடரக்கூடிய வாய்ப்புக்கள்

கனடாவில் கல்விகற்க/வேலைசெய்ய நிரந்தரமாக குடிபெயர விரும்பும் அனைவரும் தவறவிடக்கூடாத அரிய சந்தர்ப்பம்

வயதெல்லை :- 19 முதல் 50 வரை

அனுமதி இலவசம்

Saaruban Sivaratnam
Regulated Canadian Immigration Consultant
(MBA,B.Eng) - RCIC # 519684

இன்று மட்டும் 04-10-2020

CANADA MIGRATION PILOT
CIMS

CIMS COLLEGE, 49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
0777069777/0777068777 (C-308)

## AUTO CAD (2D AND 3D) CLASSES

Auto Cad வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்பு : 077 139 6895

(இடம் - நல்லூர்) (4365)

## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலண்ட் ஸ்பெயின் 1250/=

மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

லண்டன்-1050/= , பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலண்ட்- 1150/=
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
வெளிநாட்டில் வரி அறவிடப்படும் சாத்தியம் உள்ளது (C-423)

இந்தியா – டுபாய் – சைனா போன்ற நாடுகளில் இருந்து பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

| | | | | |
|---|---|---|---|---|
| 976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | 355, A9 வீதி கந்தசுவாமிகோவிலடி கிளிநொச்சி | சங்கானை நெல்லியடி சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கனகராயன்குளம் மல்லாவி /துணுக்காய் மன்னார்/வவுனியா |

## வீடு விற்பனைக்கு

கொழும்பு நாவல பகுதியில் அமைதியான சூழலில் கார் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

(3 கோடி 65 இலட்சம்)

விலை பேசித் தீர்த்துக்கொள்ளலாம். (C-462)

தொடர்பு : 071 543 1864

## கட்டடம் வாடகைக்கு

வங்கிகள், தனியார் நிறுவனங்கள், காப்புறுதி மற்றும் நிதி நிறுவனங்கள், Super Market போன்றன நடாத்துவதற்குரிய வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய கட்டடம் வாடகைக்கு உண்டு.

பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.
(ராஜா பிளாசாவுக்கு முன்பாக) (C-458)

தொடர்பு : 077 459 8499

## அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பம் 08-10-2020

நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் விசா அதிஸ்டசாலி ஆகலாம்.

இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட

உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள் (C-308)

என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS

0768226244

## விரைவு பொதிகள் சேவை




வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 -5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன

Lanka Cargo Worldwide Express

315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 221 1995
076 283 2397 (4073)

## அன்பொளி கல்வியகம்

யாழ். இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

2021 இல் தரம் 5இல் புலமைப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. அனுமதிகளை 09.10.2020 வெள்ளிக்கிழமைக்கு முன் 2.00 மணி தொடக்கம் பி.ப 6.00 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை
மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.

இயக்குநர் (C-455)

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK- 1025/=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மாங்குளம்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-308)

# மணிவிழா வாழ்த்துக்கள்



### சேவையாற்றிய பாடசாலைகள்

கிளி / கனிஷ்ட மகா வித்தியாலயம்
26.12.1985 - 30.12.1991

யா/விக்னேஸ்வராக் கல்லூரி
01.01.1992 - 25.09.2012

யா / வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
26.09.2012 - 24.04.2020

### மணி விழா நாயகியை வாழ்த்துகின்றோம்.

செந்தமிழ்த்தாயே திருவுருவின் பேரழகே
வந்தனை செய்து வாழ்த்துகின்றோம் - எம் சிந்தனையில்
நீங்கா இடம்பிடித்த தீந்தமிழே
எம் கல்லூரியின் தமிழரசே
தயாளகுணம் கொண்ட தமிழ் மணிவிளக்கே
அகவை அறுபதில் ஆனந்தமாய் வாழ்த்துகின்றோம்.

எமது கல்லூரியின் தமிழ் ஆசிரியையாகவும் பகுதித் தலைவராகவும் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி நாளினி கணபதிப்பிள்ளை ஆசிரியை அவர்களை நலன்கள் பல பெற்று மகிழ்வுடன் வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

திருமதி
**நாளினி கணபதிப்பிள்ளை**
B.A (Hons), M.A (Tamil), M.Phil (Education)
பிரதீபா பிரபா விருது (2012)

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
க.பொ.த.உயர்தர பழைய மாணவிகள் (2014 - 2019),
யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,
வதிரி, கரவெட்டி.

(4353)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 278

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 04.10.2020 தொலைபேசி : 021 222 3378




## ஆற்றலையும் உறவுகள்



## சமூக நீதிக்காக குரல் கொடுத்த சிவாச்சாரியார் கொல்லப்பட்ட மர்மம் துலங்குமா?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

எல்லாரும் மாஸ்க்கைப் போடுங்க. கொரோனாத் தொற்று ஆபத்து இன்னமும் நீங்கவில்லை என்று சுகாதாரத்துறையினர் எச்சரிக்கினம். கங்காணி கார்த்திகேயன் அறிவுறுத்தினார்.

உங்க சனங்களெல்லாம் மாஸ்க் அணியாமல் திரியினம். நாங்கள் மட்டும் மாஸ்க் போட்டு என்ன ஆகப் போகிறது. சாத்திரியார் முணுமுணுக்க,

சாத்திரியார் மற்றவர்கள் என்ன செய்யினம் எண்டதை விட்டிட்டு எங்கட பாதுகாப்பை நாங்கள் உறுதிசெய்ய வேணும். கங்காணி கார்த்திகேயன் உறுதிபடக் கூற, ஆலடியில் இருந்த அனைவரும் மாஸ்க்கை அணிந்து கொண்டனர்.

இந்தத் துண்டை முகத்தில போட்டுக் கொண்டு இருக்கிறதெண்டால் என்னால முடியாது. மூப்பர் முணுமுணுத்துக் கொண்டார்.

விதானையார்: அதுசரி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொழும்பில உள்ள அரச அலுவலகங்களுக்குத் திடீர் விஜயம் செய்கிறார். அதிலும் ஆட்டோவிலயெல்லோ போகிறாராம்.

பண்டிதர்: உண்மைதான். அண்டைக்கு வீடமைப்பு அதிகார சபைக்குப் போன ஜனாதிபதி ஒரு பாடசாலைக்கும் சென்றிருக்கிறார்.

வாத்தியார்: பாடசாலைக்குச் சென்ற ஜனாதிபதி, அங்க ஓர் ஆசிரியை படிப்பித்தது பிழை என்று சொன்னவர் எண்டால் பாருங்களன்.

விதானையார்: அரச அலுவலகங்கள், பாடசாலைகளுக்கு ஜனாதிபதி கோட்டா திடீர் விஜயம் செய்யிறதால தென்பகுதி அரச அலுவலகங்கள் வலு உசாரா இருக்குதாம்.

சிறாப்பர்: அப்ப வகுப்பறையில ஆசிரியர்கள் தொடர் கற்பித்தலில் ஈடுபடுகினம் எண்டு சொல்லுறியள்.

பண்டிதர்: நான் அறிந்த மட்டில் யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் ஜனாதிபதி திடீர் விஜயம் செய்வாரென்றும் இங்கயும் சில திணைக்களங்கள், பாடசாலைகளுக்குப் போவார் என்றும் அறிஞ்சனான்.

பண்டிதர் இவ்வாறு கூறியதும் பதறியடித்த சாத்திரியார் என்ர பேரப்பிள்ளை ரீச்சரல்லோ. ஒருக்கா இந்தத் தகவலைச் சொல்ல வேணும் என்று கூறியபடி மடியில் செருகி வைத்திருந்த கான்போனை எடுத்து தன் பேரப்பிள்ளைக்கு ஜனாதிபதி கோட்டா யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கும் வரலாமாம் என்பதை அறிவித்தார். சாத்திரியார் இவ்வாறு அறிவிக்க, ஆலடியில்



**சிவசேனை அமைப்புடன் வலுவான உறவை ஏற்படுத்த வேண்டும்**

இருந்தவர்கள் மெல்லச் சிரித்துக் கொண்டனர்.

எனினும் விதானையார் மட்டும் முகத்தை இறுக்கமாக வைத்திருந்தார். இதனை அவதானித்த சிறாப்பர் கனகசபை என்ன விதானையார் ஒரு மாதிரியாக இருக்கிறியள்.

விதானையார்: சிறாப்பர் ஜனாதிபதி அரச அமைப்புக்களுக்குத் திடீர் விஜயம் செய்வதும் ஆட்டோவில போவதும் ஒரு நல்ல விடயம். எந்த ஜனாதிபதியும் செய்ய முடியாத வேலை. ஆனால் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் உணர்ந்து கொண்ட அவர், தமிழ் மக்களின் அவலங்களையும் தீர்த்து வைக்கத்தானே வேணும்.

விதானையார் இவ்வாறு கூறியதும் ஆலடியில் சில நிமிடம் மௌனம் நிலவியது.

மௌனத்தைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

வாத்தியார்: விதானையார் சொல்லுறது உண்மைதான். சிறைகளில வாடுகிற தமிழ் அரசியல் கைதிகள், காணாமல் போனவர்களின் உறவுகள் படும் பாடுகள், இராணுவ ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டுள்ள காணிகளின் சொந்தக்காரர்கள் படும் கஷ்டங்கள் இவற்றையெல்லாம் ஜனாதிபதி நேரில் அவதானித்து அதற்குப் பரிகாரம் தேடவல்லோ வேணும். கோட்டாபய ராஜபக்ஷ சிங்கள மக்களுக்கு மட்டும் ஜனாதிபதியில்லைத்தானே. அவர்தான் தமிழ்மக்களுக்கும் ஜனாதிபதி.

ஆகையால தமிழ்மக்களின்ர பிரச்சினைகளையும் தீர்க்கிற பொறுப்பு அவருக்கு உண்டு.

கங்காணி: என்ன செய்யிறது. ஆட்சி அதிகாரம் எங்களுக்குக் கிடைக்காதவரை எங்கட அவலம் நீண்டு செல்லத்தான் போகுது.

சாத்திரியார்: எதுக்கும் அவசரப்படாதீங்க. இந்தாப் பாருங்க அமெரிக்க ஜனாதிபதிக்கும் கொரோனா வந்திட்டுது. கொரோனாவுக்கு நஞ்சு மருந்தைக் கொடுக் கச் சொன்னவர். தனக்கு அந்த நோய் வராதெண்டுதானே.

ஆகையால இறைவனுக்கு இன, மத, நிற, மொழி பேதம் எதுவும் கிடையாது. 1500 கோடி ரூபா மதிப்புள்ள சொத்து எஸ்.பி. பாலசுப்பிரமணியத்திட்ட இருந்தது. ஆனால் அவற்ற இறுதி நிகழ்வில நூறு பேர் மட்டும்தான் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதில இருந்து வகுத்தான் வகுத்தபடிதான் எல்லாம் நடக்கும் என்பது தெரியுதுதானே. சாத்திரியார் சதாசிவம் இவ்வாறு கூறியதும் ஆலடியில் நிசப்தம் நிலவியது.நிசப்தத்தைக் கலைக்க மாநாட்டுத் தலைவர் முற்பட்டார்.

வாத்தியார்: முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்து இந்து அமைப்புக்கள் வவுனியாவில் பேரணி ஒன்றை நடத்தினவியள். இப்படியான பேரணிகள் நடத்தப்படுவது இந்து அமைப்புக்களிட்ட விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதென்பதைத் தான் காட்டுது.

விதானையார்: வாத்தியார் சொல்லுறது உண்மையாக இருந்தாலும் இலங்கையில சைவசமயம் காப்பாற்றப்படவேண்டுமாயின், அதற்கான வழி ஒன்றுதான். விதானையார் மேற்கொண்டு சொல்வதற்கு எத்தனிப்பதற்கு முன்னதாக அவசரப்பட்ட சிறாப்பர் என்ன? விதானையார் சொல்லுறியள் என வினவினார்.

விதானையார்: இந்தியாவில இருக்கிற சிவசேனை அமைப்பை இலங்கையில வலுப்படுத்துறதும் அவர்களோட நல்லதொரு தொடர்பை ஏற்படுத்துறதும் தான் ஒரேவழி.

பண்டிதர்: இதைத் தானே நான் பலமுறை சொல்லி வந்திருக்கிறன். எங்கட மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா சிவசேனை அமைப்பை இலங்கையில பலப்படுத்த வேணும். என்னைப்பொறுத்தவரை சிவசேனை அமைப்போட நாங்கள் நல்லதொரு தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைவதும் சுலபமாக இருக்கும்.

கங்காணி: என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

பண்டிதர்: சிவசேனை தான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின்ர மிகப் பெரிய பக்கபலம். சிவசேனையோட நாங்கள் இணைந்து கொண்டால் சிவசேனை இந்திய மத்திய அரசை எங்கட பிரச்சினையில தலையிட வைக்க முடியும். இதுதெரியாமல்தான் நாங்கள் காலம் கடத்துறம்.

வாத்தியார்: உண்மைதான். இராமர் பிறந்த அயோத்தியில திரும்பவும் இராமர் கோயில் கட்டப்படுகுது என்றால், சிவசேனையின்ர பலம் எவ்வளவு என்பதைப் புரிந்துகொள்ள முடியும்தானே.

மூப்பர்: சரி... சரி... எதுவாக இருந்தாலும் அவற்றை மிக அவதானமாகச் செய்யவேணும். இந்தியாவின்ர உதவியில்லாமல் எங்கட பிரச்சினை தீராது என்பது மட்டும் நிறுதிட்டமான உண்மை.

இவ்வாறு மூப்பர் கூறியதும் உடனடியாக எழுந்த பண்டிதர்; எங்கட யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் ஒரு பெரும் சாதனை நடந்திருக்குது.

துண்டிக்கப்பட்ட கையை வெற்றிகரமாகப் பொருத்தியிருக்கினம். இந்த சாதனையைச் செய்த சம்பந்தப்பட்ட மருத்துவக்குழுவுக்கு எங்கட பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறம்.

இவ்வாறு பண்டிதர்கூற, அதற்கு தனது ஆசியும் உண்டென்பதுபோல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டும்





தியாகி திலீபனின் 33 ஆம் ஆண்டு நினைவேந்தல், தமிழ் அரசியல் தரப்புகளிடையே ஒரு பலமான ஒற்றுமையை ஏற்படுத்தியுள்ளது.

தியாகி திலீபனின் நினைவேந்தலுக்குத் தடை விதிக்கப்பட்ட நிலையில், தங்கள் அரசியல் பகைமைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, ஒற்றுமையுடன் ஒன்றுகூடி தமிழ் அரசியல் கட்சிகள் தியாகி திலீபனின் நினைவேந்தலுக்கு அனுமதி வழங்க வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடமும் கூட்டாகக் கோரிக்கை விடுத்தனர்.

தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டாக விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் எந்தப் பதிலையும் வழங்காதிருக்க, நீதிமன்றத் தீர்ப்புகளில் ஜனாதிபதி தலையிடமாட்டார் என அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல கருத்துரைத்தார்.

இந்நிலையில் தமிழ் அரசியல் கட்சிகள் மீண்டும் கூடி நிலைமையை ஆராய்ந்தன. முடிவு திலீபனின் நினைவேந்தல் தினத்தில் சாவகச்சேரி சிவன் ஆலய முன்றலில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடந்தாயிற்று.

இதனைத் தொடர்ந்து செப்டெம்பர் 28 ஆம் திகதி திங்கட்கிழமை தமிழர்களின் உரிமையை வலியுறுத்தி வடக்கு-கிழக்கு தமிழர் தாயகமெங்கும் பூரண கதவடைப்புப் போராட்டம் நடக்க, தமிழர் தாயகம் முடங்கியது.

தமிழர்களின் கதவடைப்புப் போராட்டத்தை முடக்குவதற்கான எத்தனங்களில் படைத்தரப்பினர் ஈடுபட்டனராயினும் அவை அனைத்தையும் கடந்து கதவடைப்புப் போராட்டம் முழு வெற்றி பெற்றது.

இங்கு தமிழ் மக்கள் நடத்திய கதவடைப்புப் போராட்டத்திற்கு முஸ்லிம் சகோதரர்கள் வழங்கிய ஒத்துழைப்பு சிறுபான்மை இன மக்களிடையே ஒற்றுமை ஏற்படுவதற்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

ஆக, தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டதால்- ஒற்றுமைப்பட்டதால் ஒரு பெரும் கதவடைப்புப் போராட்டம் மிகப்பெரும் வெற்றி கண்டது.

தமிழ்த் தேசியத்தின்பால் கரிசனை கொண்ட தமிழ் அரசியல் கட்சிகள் கதவடைப்புப் போராட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு மக்களிடம் கேட்க, நீங்கள் ஒற்றுமைப்பட்டு நின்றால், உங்களுக்குப் பின்னால் பயணிக்க நாங்கள் தயார் என்பதை நிரூபிப்பது போல அனைத்து மக்களும் ஒன்றுபட்டு கதவடைப்புப் போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்க, இலங்கையின் அரசியல் எல்லைகளுக்குள் தமிழர் தாயகம் முடங்கிப் போயிற்று.

ஆம், செப்டெம்பர் 28 ஆம் திகதி நடந்த கதவடைப்புப் போராட்டம் தமிழ் மக்கள் தங்கள் உரிமை தொடர்பில் மிகவும் உறுதியாக உள்ளனர். அவர்கள் எதை இழந்தாலும் தங்கள் உரிமையை இழக்கவோ, விட்டுக்கொடுக்கவோ தயாரில்லை என்பதை மீண்டும் இலங்கை ஆட்சியாளர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளனர்.

ஆக, தமிழர்களின் உரிமைக்கான நகர்வு என்பது தமிழ் அரசியல் தரப்புகளின் ஒற்றுமையில் தங்கியுள்ளதென்பதும் இங்கு நிரூபணமாகியுள்ளது.

தியாகி திலீபனின் நினைவேந்தலுக்காக ஒன்றுபடுங்கள் என இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா அழைப்புவிட, அந்த அழைப்பை தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ஏற்றுக்கொள்ள, அதனூடு தமிழ் மக்கள் தேசிய கூட்டணியினர் ஒன்றுபட, தமிழ் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்படுகின்ற அரியவாய்ப்புக் கிட்டியது.

இங்கு இன்னொரு விடயம் ஈண்டு கவனிக்கப்பட வேண்டும். அதாவது, கடந்த பொதுத் தேர்தலில் மாவை சேனாதிராஜாவுக்கு ஏற்பட்ட பின்னடைவும் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்குக் கிடைத்த வெற்றியும் ஒற்றுமைக்கான களத்தை உருவாக்கியதெனலாம்.

எதுவாயினும் கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராஜா துணிச்சலோடு செயற்பட்டமை பாராட்டப்பட வேண்டும்.

உண்மையில் கடந்த பொதுத் தேர்தலில் மாவை சேனாதி ராஜா வெற்றி பெற்றிருந்தால், அவர் தனது கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் எடுக்கின்ற முடிவுகளுக்குள்ளேயே முடங்கியிருந்திருப்பார்.

ஆனால், தேர்தல் தோல்விக்குப் பின்னர் மாவை சேனாதிராஜா தமிழரசுக் கட்சியின் தலைமைக்குரியவராகத் தீர்மானங்களைத் துணிந்து எடுக்க, சீ.வீ.கே. சிவஞானம் போன்ற மூத்த தலைவர்கள் அவரோடு பக்கபலமாக நிற்க, தமிழர் வரலாற்றில் மீண்டும் அரசியல் கட்சிகள் ஒன்றுபடுகின்ற வாய்ப்புக் கிட்டியது.

இப்போது தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டமை தொடர்பில் தென்பகுதி அரசியல் களத்தில் அதிருப்தியும் அதிர்ச்சியும் ஏற்பட்டுள்ள நிலையில், தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்ட ஒற்றுமையைப் பாதுகாப்பது, அதனை முன்னகர்த்திச் செல்வது, அடுத்தகட்டத் தீர்மானங்களை எடுப்பது என்ற விடயங்கள் முதன்மை பெறுகின்றன.

இங்குதான் நாம் அனைவரும் ஒரு விடயத்தை ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

அதாவது, தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையிலான ஒற்றுமையைத் தனித்த ஒரு அரசியல் கட்சியோ அன்றி ஒருசில அரசியல் கட்சிகளோ பொறுப்பேற்பதென்பது ஒற்றுமைக்கு ஆரோக்கியமாக அமையாது.

ஆக, தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையேயான ஒற்றுமையைப் பலப்படுத்தி அதனை முன்னகர்த்திச் செல்லுகின்ற பொறுப்பை தமிழ் மக்கள் பேரவை போன்ற மக்கள் இயக்கம் எடுத்தாக வேண்டும். அப்போது தான் தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையிலான ஒற்றுமை நீடித்துச் செல்லவும் ஒருமித்த தீர்மானங்களை எடுக்கவும் முடியும்

இது விடயத்தில் ஒன்றுபட்டுள்ள அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் சாதகமாகச் சிந்திப்பது அவசியமானது.

இந்தச் சிந்தனைகள் எதிர்வரும் தேர்தல்களின் போது, தமிழ் அரசியல் தரப்புகளிடையே ஒன்றுபட்ட தீர்மானங்களை எடுத்து, தேர்தல்களை எதிர்கொள்வதற்கும் நல்லதொரு சூழமைவைத் தரும்.

விதுரன்

வாசிப்பு மாதம் ஒக்டோபர்-2020

# இயற்கை வளங்களை பேணும் வகையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச தினங்கள்

| | |
|---|---|
| ❖சர்வதேச புவி தினம் | ஏப்ரல் 22 |
| ❖சர்வதேச சமுத்திரங்கள் தினம் | ஜூன் 08 |
| ❖சர்வதேச உணவு தினம் | ஒக்டோபர் 16 |
| ❖சர்வதேச குடிநீர் தினம் | மார்ச் 22 |
| ❖சர்வதேச சுற்றாடல் தினம் | ஜூன் 05 |
| ❖சர்வதேச பிராணிகள் தினம் | ஒக்டோபர் 04 |
| ❖உலக வன தினம் | மார்ச் 21 |
| ❖உலக சமாதான தினம் | செப்டெம்பர் 21 |
| ❖உலக சைவ உணவு தினம் | ஒக்டோபர் 01 |
| ❖சர்வதேச உயிரின பல்வகைமை தினம் | மே 22 |

ச.கதீசன்

# மருத்துவப் பழமொழிகள்

❖என்ன தின்றாலும் அதற்கு மேலே நான்கு பேரீச்சம்பழம், தின்ன எல்லாம் அடிபடும் (செரிக்கும்)
❖விடாச்சுரத்திற்கு விஷ்ணுகரந்தை
❖வெள்ளெருக்குக்கும் வெள்ளாட்டுப் பாலுக்கும் கள்ளக் கருமேகம் காணாமற் போம்
❖வேலம்பட்டை மேகத்தை நீக்கும்; ஆலம் பட்டை பித்தத்தைப் போக்கும்
❖வில்வப்பழம் தின்பார் பித்தம் போக
❖பனம் பழம் தின்பார் பசி போக
❖முருங்கைக்காய் என்றதும் முறிந்ததாம் வைத்தியம்

தொகுப்பு: புத்தூர் பொது நூல் நிலையம்




## உதைத்த காலுக்கு முத்தம்



ஓர்நாள் அக்பரின் ராஜ சபை கூடியது. அக்பர் சபையோர்களைப் பார்த்து நேற்று நள்ளிரவில் யாரோ ஒருவன் என் படுக்கையில் ஏறி, எனது மார்பில் எட்டி உதைத்துவிட்டு ஓடிவிட்டான். அவன் யார் எனத் தெரிந்தால் என்ன தண்டனை கொடுக்கலாம் என்று கேட்டார்.

சபையோர் அனைவரும் அதிர்ச்சியடைந்து ஒவ்வொருவரும் கூறிய தண்டனைகள் எல்லாமே மரண தண்டனையில் தான் முடிந்தது.

பீர்பால் மட்டும் சக்கரவர்த்தி அவர்களே உங்களை உதைத்த கால்களுக்கு தங்கம், வைடூரிய கொலுசு செய்து போட்டு முத்தமழை பொழியுங்கள் என்றார்.

கொலுசும், முத்தமுமா? என்ன கூறுகிறார் பீர்பால் என்று சபையோர் அனைவரும் திகைப்புடன் பீர்பாலைப் பார்த்தனர்.

ஏன் அப்படி சொல்கிறீர்கள்? என்று அக்பர் கேட்டார்.

பீர்பால் மன்னா தங்கள் படுக்கை அறைக்கு அரண்மனைக் காவலை மீறி நள்ளிரவில் நுழைந்து மார்பில் ஏறி உதைத்துவிட்டு ஓடி இருக்கிறார் என்றால், அது நமது குழந்தை இளவரசனால் மட்டும்தான் முடியும் என்றார். ஆதலால் அவருக்கு கொலுசும் முத்தமும் தானே சிறந்த பரிசாக இருக்க முடியும் என்றார்.

பீர்பாலின் மதியூகத்தை எண்ணி அக்பரும் சபையில் இருந்த அனைவரும் வியந்தனர்.

**நீதி: நடந்த நிகழ்வை நன்கு ஆராய்ந்து பார்த்து பிறகு முடிவு எடுக்க வேண்டும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## குடி உயரக் கோன் உயரும்



காஞ்சிபுரத்திலுள்ள துர்க்கை அம்மன் கோயில்

ஒரு காசுக்கு ஒன்பது பெண் ஆடுகள் வரை விற்கப்பட்டிருக்கிறது. ஒரு பசுவின் விலை 15 காசு. காய்க்கும் தென்னை மரம் 150 காசு விலைக்கு விற்கப்பட்டுள்ளது.

உலோகங்களில் வெண்கலம் ஒரு காசுக்கு 35 பலம் விற்கப்பட்டது. அதே ஒரு காசுக்குச் செம்பு 30 பலமும் வெள்ளீயம் 26 பலமும் உலோகக் கலவை 70 பலமும் விற்கப்பட்டுள்ளன.

ராஜ்ராஜன் காலத்தில் பஞ்சம் ஒருபோதும் ஏற்பட்டதில்லை என்பதால் விலைவாசியும் கட்டுக்கோப்பாக இருந்திருக்கிறது. (ஆனால் 1131 இல் விக்கிரமசோழன் ஆட்சியில் பஞ்சம் நிலவியிருக்கிறது)

நிலத்தின் விலையும் சாதாரண மக்கள் வாங்கும் விலையில்தான் இருந்திருக்கிறது. கி.பி. 1006 இல் தஞ்சை மாவட்டத்தில் ஒரு வேலி நிலத்தின் விலை 200 காசுக்கு (2 ரூபாய்) விற்கப்பட்டுள்ளது.

### கால்நடை

விவசாயத்திற்கு அடுத்ததாகக் கால்நடை வளர்ப்பு இக்கால கட்டத்தில் அமோகமாக இருந்திருக்கிறது.

சோழர் காலத்தில் ஆடுகள் வளர்ப்பது ஒரு கலையாக முக்கிய கடமையாக இருந்திருக்கிறது. சாவா மூவா பேராடுகள் என்ற வாக்கியம் வழக்கத்தில் இருந்திருக்கிறது. ஆடுகள் நல்ல விலைக்கு விற்பனையாயின.

சீப்புலி, பாகி ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிய ராஜராஜன் அங்கு கிடைத்த தொள்ளாயிரம் ஆடுகளைக் காஞ்சிபுரத்தில் உள்ள துர்க்கை கோயிலுக்குத் தானமாகக் கொடுத்தார்.

பால் பண்ணை பராமரிப்புத் தொழிலிலும் ஏராளமான பேர் ஈடுபட்டிருந்தார்கள். கோயில்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட ஆடு, மாடுகள் மக்களுக்குத் தானமாக வழங்கப்பட்டன.

இவற்றை வாங்கிக் கொண்டவர்கள் பெரிய கோயிலுக்குப் பால், தயிர், நெய் ஆகியவற்றை வழங்கினார்கள். பசு, ஆடு போன்ற கால்நடைகள் ராஜராஜன் காலத்துக் கல்வெட்டுக்களில் அதிகமாக இடம் பிடித்துள்ளன.

### உணவு

சோழர்களின் உணவுப் பழக்கத்தில் இன்று நம்மிடையே சமைக்கப்படும் மசாலாப் பொருட்கள் கலந்த உணவுகள் இருக்கவில்லை. அப்போது அரிசிச்சோறு முதன்மை உணவாக அமைந்தது.

தஞ்சை பூமி அல்லவா. பால்சோறு, அக்கார அடிசில், புளிங்கறி என்று பலவகையான சோறுகள் இருந்தன.

சோற்றுடன் தயிர் கலந்து சாப்பிடும் பழக்கம் இருந்திருக்கிறது. அரிசி மட்டுமல்லாமல் பயறு வகைகள், சோளம், தினை, அவரை, மலையரிசி, வரகு, கம்பு, எள், உளுந்து ஆகியவை உணவில் சேர்க்கப்பட்டன.

(தொடரும்)

United Nations






சர்வதேசத்திடமிருந்து நமக்கு தீர்வு கிடைக்குமா?

சுடு சொல் வீசும் ஆசாமிகள் திருந்த மாட்டார்களா?

காணாமல் போனவர்கள் கிடைப்பார் களா?

**பரா — இணுவில்**

**அடிமை வாழ்வு என்பது தமிழனுக்கு எழுதப்பட்ட விதிபோலும்?**

விதி என்று விதியை நொந்து கிடப்பதிலும் அதை மதியாமல் வெல்வது எப்படி என சிந்திக்க வேண்டும்.

அடிமையில் இருந்து உடைத்தெழுவது தானே புரட்சி. அந்தப் புரட்சியைச் செய்யா மல் அடிமைக்கு அடங்கிக் கிடந்து கொண்டு அடிமை பற்றிப் பேசிப் பயனேதும் இருக் காது என்பதே எமது கருத்து.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**காணாமல் போனவர்கள் கிடைப்பார் களா?**

காணாமல் போன தமது பிள்ளை வருவான் என்று ஏங்கித் தவிக்கும் ஒவ்வொரு பெற் றோருக்கும் அதற்கான பதில் வழங்கப் படவேண்டும்.

இல்லையேல் அது நீதியாக இருக்கமுடி யாது.

வருடங்கள் பல கடந்தும் வீதிகளில் தமது பிள்ளைகளுக்காக ஏங்கி இருக்கும் பெற்றோர் களின் நிலையை ஆட்சியாளர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

காணாமல் போன பிள்ளை வேண்டும் என்பதிலும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதையே கேட்டு நிற்கிறார்கள்.

அதற்குப் பதில் கூறினாலே போதுமானது.

**சுணா — யாழ்ப்பாணம்**

**அறிவுள்ளவர்கள் எப்படி இருப்பார்கள் வியாசரே?**

எனக்குத்தான் எல்லாம் தெரியும் என்று முந்திரிக் கொட்டையாய் முந்தமாட்டார், அமைதியும் அடக்கமும் நிறைய இருக்கும், எதையும் நின்று நிதானமாகச் செயற்படுத் துவர்.

கோபத்தைக் கட்டுப்படுத்தி எதையும் இலகு வாய் கையாளக் கூடியவராக இருப்பார்.

மற்றவர் கூறும் வார்த்தைக்கு மதிப்பளித்து அதில் உள்ள நன்மை, தீமைகளை கலந்து பேசி அடுத்தவர் மனம் கோணாமல் நடந்து கொள்பவராக இருப்பது மிக முக்கியமா னதாகும்.

**கோகிலன் — மன்னார்**

**போதையின் பிடியில் எமது இளை ஞர்கள். இது எதனைக் குறிக்கிறது வியாசரே?**

பாதாளத்தை நோக்கிய பயணம் போல இருக்கிறது.

எம் இளைஞர்களின் சிந்தனை, ஆற்றல், சமூகப்பற்று, இனப்பற்று என்பவற்றை அழிக்க எங்கோ இருந்து போடப்பட்ட திட்டம் மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஒரு காலத்தில் கல்வியில் உச்சத்தில் இரு ந்த வடக்கு மாகாணம் இன்று கடை நிலை யில் இருக்கிறது.

இதற்கு இந்த போதை மிக முக்கியமா னதாக அமைகின்றது.

இளைஞரை போராட்டம் பற்றி சிந்திக்காது செய்தல், வடக்கு மாகாணத்தை கல்வி யில் கீழ் நிலைப்படுத்தல் என்ற இரு மாங்காய்கள் ஒரு கல்லில் வீழ்ந்து விட்டன.

**வியாசர் பதில்கள்**

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை**

**021 567 1532**

**என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

**நேதாஜி — வதிரி**

**சர்வதேசத்திடமிருந்து நமக்கு தீர்வு கிடைக்குமா?**

ஒருவன் ஒரு உதவியைச் செய்கிறானாக இருந்தால் அவன் அதற்கு பிரதிபலன் ஏதும் எதிர்பார்ப்பான்.

அந்த பிரதிபலன் எதிர்பார்க்கப்படும் ஒருவன் தான் சர்வதேசம். அப்பேர்ப்பட்ட சர்வதேசத் திற்கு தமிழர் பிரச்சினை தீர்ப்பதிலும் இலங்கை அரசைக் காப்பாற்றினால் பிரதிபலன் கிடைக்கும்.

ஆகையால் தீர்வு என்பதை எதிர்பார்க்காமல் தீர்வுக்கு என்ன செய்யலாம் என்று யோசிக் கிறார்கள்.

**ஜனா — வடமராட்சி**

**தமிழ்க் கட்சிகளின் ஒன்றுபடுகையி னைப் பார்க்கும் போது மிகவும் சந் தோசமாக இருக்கிறதே?**

இந்த ஒற்றுமை 2009 இல் ஏற்பட்டிருக் குமாக இருந்தால் இப்போது எல்லாம் முடிந்திருக்கும்.

ஒன்று சேருங்கள் என்று எத்தனையோ தரம் எழுதியிருந்தும் பயன் ஏதும் இல்லை.

வந்த அரசுகளை மெல்ல அனுசரித்து அவருக்கு கால அவகாசம் வழங்கியதன் விளைவை இப்போது உணர்ந்திருக்கி றார்கள்.

அதன் விளைவே இப்போதைய ஒற்றுமை.

இந்த ஒற்றுமையை அரசியல் செயற் பாடன்றி தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க என்று நினைத்து நடந்தால் எல்லாம் சிறப்பாக நடைபெறும்.

**தேவன் — மானிப்பாய்**

**முதியோர், சிறுவர் தினங்கள் மிக மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளதே?**

முதியோர், சிறுவர் தினங்கள் மிகச் சிறப் பாகக் கொண்டாடப்பட்டதே தவிர முதியோர், சிறுவர் மிகச் சிறப்பாக இருப்பதாகத் தெரி யவில்லை.

முதியோர் தினத்தன்று ஓர் அன்பரின் முகப் புத்தகப் பதிவு. தாய் முதியோர் இல்லத்தில். மகன் கோவில் கட்டுகிறான்.
இது தான் இன்றைய நிலை.

முதியவர்கள் இந்த உலகின் முதுசம் என் பதை மறந்து அவர்களை இல்லங்களில் விட்டு விட்டு மாதாமாதம் இல்லத்திற்கு பணம் அனுப்பும் மகனை பெற்றதற்கு இர ண்டு நாயை வளர்த்திருந்தால் இறுதிக் காலம்வரை கூட இருக்கும் என்பதே பல பெற்றோரின் மனநிலை.

**சிவன் — வதிரி**

**சுடு சொல் வீசும் ஆசாமிகள் திருந்த மாட்டார்களா?**

சிலருக்கு அது ஒரு மேனியாகிவிடும். எதற்கும் திருப்தி கொள்ள மாட்டார்கள். எந்த விடயத்திற் கும் நொட்டை சொல்லி மற்றவரை காயப்படுத்திக் கொண்டு இருப்பார்கள். தாங்கள் ஒருவிடயம் செய்தால் அதுமட்டும் தான் சரி என்று வாதிடுவார்கள். இவர்களுக்கு இது வருத் தம் என்று நினைத்து பாவப்பட்டு விட்டு விட்டால் ஏதோ தனக்குள்ள திறமைக்கான அங்கீகா ரம் என மனதில் பூரித்துக் கொள்வார்கள்.

## சுடலை ஞானம்

பூங்காற்றுக்களின்
சுவாசம் மறந்து
புழுதி குடித்து உயிர்
கருகிக் கிடக்கிறது
உச்சி முதல் உள்ளங்கால் வரை
விஞ்ஞான ரோபோவாய்
உடல் உஷ்ணமாகிப் போச்சு
சித்த அறிவுரை
சின்னாபின்னமாகி
செத்துப் போயுமாயிச்சே
நூறு என்ற ஆயுள்
ஐம்பதுக்கும் நாற்பதுக்கும்
அருகிக்கிடக்கிறது
பருகிக்கொண்ட நஞ்சுகள்
பாடை ஏறிய மூலிகையால்
பாவப்பட்டுக் கிடக்கிறது மனிதம்
சுடலை ஞானத்தின்
அடை மழை காப்பாய்
ஆங்காங்கே அறிவுரை ஞானம்
தோற்றுப்போன கண்டுபிடிப்புகள்
விழித்துக்கொண்டு விம்மி அழுகிறது
தொட்டுப் பேசவும்
கட்டி அணைத்து
ஆறுதல் சொல்லவும்
மனித கையாலாகாத்தனம்
கைங்கரியமாகிப் போகிறது
மனிதனை மனிதன் பார்த்து
ஒளிந்து கொள்ள
மமதை அறிவு மல்லுக்கட்டி
மண்ணில் மானிடம் அழிய
போட்டி போட்டு
புழுதி குடிக்கிறது- மனிதா

**யாழ்வாகீஷ்**

## கயிற்றில் முடிந்த காதல்



கயிறு ஒன்று உடல்கள் இரண்டு
காற்றோடு கலந்த சேதி...
கனத்துப் போன இதயம்
கதியிழந்த பறவைகள் போலும்...
ஆறுதல் இல்லை
ஆதரவு இல்லை
கொடுமையான பயணம்....
வீரக்கொடிகளுடன்
சங்கு ஊதி முழங்கிய
வீரம் விளைந்த மண்ணில்
பரிதாபப் போக்கு...
வாழ்க்கையின் வழி
இதுதானோ?
மஞ்சள் கயிறு என்று
மனமுவந்து வாழ்த்தும் நேரம்
தூக்குக் கயிறு
திடம் கொண்டு விட்டதுவே!
மரணக் கதைகள்
மலிந்து விட்டன போலும்!
கனதியான வாழ்வின்
எண்ணங்கள் சிதைந்து
தூக்குக் கயிற்றிலே
முடிந்து போகின்றன...

**த.ஐங்கரதீபன்**
**கிளி/ பூநகரி**
**ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தி**

## முதுமையில் ஓர் வாழ்க்கை

வயது போனதால் வாழ்க்கை
வெறுத்துப் போனதோ
வருங்காலம் நல்ல பொழுதாய்
அமைந்திடவே
வயதை எண்ணி வருந்துவதால்
என்ன பயன்
வருவது வரட்டுமென
வாழ்ந்து பார்க்கணும்
காவோலை சரிய
குருத்தோலை சிரிக்குமாம்
காலச்சக்கரத்தில்
குருத்தோலை சரியுமல்லவா
இதனை அறியவா போகிறது
இளம் தளிர்கள்
இருக்கும் காலம்வரை
முதுமை சுமையல்லவே
முதியோர் அறிவுரைகளைக் கேட்டு
முணுமுணுக்கும்
இளசுகளின் உள்ளங்கள்
மூத்தமகன் நீ
முடிவாக சொல்வதென்ன
முதியோர் இல்லம்தான்
முடிவாகிப் போகுமா?
முன்னோரின் முதுமொழியால்
வாழ்க்கை செழித்ததே
முன்னேறிப் போனதாக
வரலாறு சொல்கிறதே
முடியுமானால் நீ
திரும்பிப்பார்- உனக்கும்
முதுமை வந்த பின்
சிந்திப்பதால் பயனேது

**பெ.தனா**
**தெல்லிப்பழை**

## சமூகத்தின் பின்னால்

வேதனங்களுக்காய்
முதலாளிகள் முன் கைகட்டி நின்று
மறுக்கப்பட
நடைபிணமாய்
நகர்ந்து செல்கிறது மனிதம்

ஆறுதல் வார்த்தை பேசி
அரிக்கும் செல்களாய்
இரத்தம் குடிக்கும் அட்டையாய்
உறிஞ்சி எடுத்துவிட்டு
வெறும் சக்கையாய்-அவன்
வெளியே எறியப்பட
எழுந்து நடக்கிறான்
இயக்கமின்றி

இழைக்கப்பட்டவை
துரோகங்கள்தான் என்பது
அவனுக்கு நன்றாகத் தெரியும்
ஆனாலும் தூரநோக்கோடு
ஓடி ஓடி உழைத்தவனுக்கு
துரோகிப் பட்டம்
துச்சமாய்த் தெரிந்தது

மௌனங்களை விதைத்து
வெறும் புன்முறுவலை உதிர்த்தபடி
அவன் நடந்து செல்கிறான்
அவன் பாதம் பட்ட புற்கள்
மீண்டும் நிமிர்கிறது
பாவம் அவன் மட்டும்
கூனிக்குறுகியபடி...

**மாவை. நா.கஜேந்திரன்**

## மௌனத்தின் தேடல்- 497



## பரிமாற்றப்பட்டேன்

சித்திரவதைகள் மத்தியில்
சிதறடிக்கப்பட்ட நிலையில்
உயிர்கள் ஊசலாடுகையில்
அன்பிலோர் அல்லல்படுகையில்
மாற்றமொன்றின் ஏக்கத்துடன்
தாயன்பின் பரிசத்துடன்
குடிமக்கள் குழி மாய்கையில்
பரிமாற்றப்பட்டேன் நான்
பகைவரின் பழிதீர்ப்பினிடத்து

**வி.டிலக்ஸன்**
**யா/ தும்பளை**
**சிவப்பிரகாச ம.வி.**

## மௌனத்தின் தேடல் -498



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
/ ஈனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## மனிதனின் சோதனை

போதும் இறைவா- நிறுத்து
உன் மனிதப் படைப்பினை
நீ படைக்கும்
ஒவ்வொருவனும்- அழிப்பது
தன்னை மட்டுமல்ல அனைவரையுமே
படுக்கும்போதுகூட
சில நிமிடம் உன்னை
நினைக்கின்றேன்
அதைக்கூட குழப்புவது
உன் படைப்பில் ஒருவன்தான்
நீர் ஆவியாகி மீண்டும்- எமை
மழையாக வந்துசேர்வது போல்
உன் படைப்பும் கூட- உன்னை
அழிப்பதற்காய் திரும்பி வரும்

**அ.துணிவரன்**
**மகாதேவா சுவாமிகள்**
**சிறுவர் இல்லம்**

## நீ வரவேண்டும்

பல வதனம் பார்த்து நிற்கும்
பல கரங்கள் ஏற்றி வைக்கும்
மீண்டும் நீ வரவேண்டும்
விடுதலையும் தரவேண்டும்
உலகத்தில் பல பிறப்பு
அதில் சாதிக்க உன் பிறப்பு
பிறக்கையிலே புகழ் உனக்கு
என்றும் உனக்காக காத்திருக்கு
கண்ணீரோடு அனுப்புகிறோம்
பலர் கண்ணீர் துடைக்க
வரணும் என்று
முள்வேலி தாண்டி
அனுப்புகிறோம்
தைத்த முள் எடுக்க
நீ வருவாய் என்று

**ச.புகழ்பிரியன்**
**மகாதேவா சுவாமிகள்**
**சிறுவர் இல்லம்**

## துரத்தும் துன்பங்கள்

சோதனைகள் பல தாண்டி
சாதனைகள் படைத்துவிடு
மேடு வரும் பள்ளமும் வரும்
முள்வேலி அதுவும் வரும்
துன்பங்கள் பலகோடி
துரத்தியே வந்தாலும்
ஏற்றிவிட காத்துவிட
பல கரங்கள் கூட வரும்
எதிர்காலம் உன் கையில்
உனக்காக காத்திருக்கு
சோதனையைப் படியாக்கி
வெற்றிநடை போட்டு வா

**ச.பவன்ராஜ்**
**மகாதேவா சுவாமிகள்**
**சிறுவர் இல்லம்**

## தாலியை இழந்த தாயின்

தாயிடம்
சேயைப் பிரிக்கும்
தருமமே இல்லாப் பாதை
காலிடம் மாறின் காயம்
கட்டாயம்
குருதி கொட்டும்
வேலிடும் கூர்மைக் கம்பி
விதிவலி காணும் மழலை
தாலியை இழந்த தாயின்
தளிரெனில்
கொடுமைதாமே

**த.சிவகாமி,**
**நல்லூர்.**

## ஈழ மழலை எதிர்காலமோ

எறிந்து ஏந்தும்
பொம்மையா
ஈழமழலை
எதிர்காலமோ
அறிவிழந்த அரச படையின்
அராஜகத்தின் உச்சமோ இது
நெறி பிறழ்ந்த நீதி காட்டும்
நீசர் வெறியை நீக்கவே
குறிதவறா
அம்புபோல இனி
கொடியோர்
செயலறுப்போம்

**வைகதன்**
**கொக்குவில்**

# கடல் புறா

## பயங்கர ஓலை!

காலத்தின் பதிவு

உண்மையில் உங்கள் தந்தை இன்னார் என்று நீங்கள் தெரிவித்ததும் திக்பிரமையே அடைந்தேன்" என்றான்.

அரசகுமாரி ஒரு விநாடி யோசித்து விட்டுக் கேட்டாள். "திக்பிரமை அடைய அதில் என்ன இருக்கிறது? என் தந்தையின் பெயர் குணவர்மன் என்றேன். கடாரத்தின் இளவரசர் ஒருவருக்குத் தான் அந்தப் பெயர் இருக்க வேண்டுமா?

"இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் இத்தகைய பெரும் மாளிகைகள் பாலூரில் மூன்று வீதிகளில் தான் உண்டு. ராஜவீதி, வணிகர்வீதி, வெளிநாட்டுப் பிரமுகர்கள் தங்கும் வீதி ஆகிய இம்மூன்று வீதிகளைத் தவிர இந்தக் கோட்டைக்குள் பெரும் மாளி கைகள் எங்கும் கிடையாது. "வர்மர்" என்ற பிற்பகுதியுடைய பெயர்கள் கலிங்க அரச பரம்பரைக்கு உண்டு. கடலுக் கப்பாலுள்ள உங்கள் ஸ்ரீவிஜய சாம் ராச்சியத்தின் சைலேந்திர பரம்பரைக்கும் உண்டு. ஆகையால் கலிங்கத்தின் பீமவர்மன், அனந்தவர்மன் என்ற பெயர்களையும், சொர்ணம் கொழிக்கும் தீவுகளை ஆளும் சைலேந்திர பரம் பரையில் சூடாமணிவர்மன் ஸ்ரீமார விஜயதுங்கவர்மன் என்ற பெயர்களையும் கேட்கிறோம். அரசியலில் பழக்க முடையவர்களுக்கு உங்கள் தந்தை யாரென்பதை நிர்ணயிப்பது கஷ்ட மல்ல. நீங்கள் தங்கியிருப்பது வெளிநாட்டுப் பிரமுகர் தங்கும் வீதி. உங்கள் தந்தையின் பெயர் குணவர்மர். இரண்டையும் இணைத்துப் பாருங்கள்" என்று விளக்கினான் கருணாகர பல்லவன்.

"அதனால் அவர் கடாரத்தின் இளவரசராயிருக்க வேண்டுமென்று தீர்மானித்துவிட்டீர்களா?" என்று கேட்டாள் அரசகுமாரி.

"அதனால் மட்டுமல்ல அரசகுமாரி. நீங்கள் என்னை வரவேற்ற தோரணை, வாளைப் பிடித்த முறை, இவற்றிலிருந்து நீங்கள் ஏதோ ஓர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்று தீர்மானித்தேன். உங்கள் தந்தை பெயரைக் கேட்டதும் என் கற்பனை நிச்சயப்பட்டது" என்றான் இளைய பல்லவன்.

இதற்கு அரசகுமாரி பதிலேதும் சொல்லவில்லை. சற்று நேரம் மௌனமே சாதித்தாள். பிறகு, "என்ன விசித்திரமான இரவு இது. இளையபல்லவரே! உங்கள் உதவியை நாடி நாங்கள் கலிங்கம் வருகிறோம். எங்களை நாடி நீங்களும் வருகிறீர்கள். இப்படி எதிர்பாராத விதமாகத் திடீரென இந்த இரவில் இந்த அறையில் சந்திக்கிறோம். அதுமட்டுமல்ல, ஒருவரையொருவர் சந்திக்க வந்த நாமிருவரும் பெரும் ஆபத்திலும் சிக்கியிருக்கிறோம்" என்று மெள்ளச் சொன்னாள்.




கருணாகரப் பல்லவனின் புருவங்கள் சந்தேகம் கேட்பன போல் சற்றே எழுந்தன. "நான் ஆபத்திலிருப்பது உனக்குத் தெரியும், அரசகுமாரி. ஆனால் உங்களுக்கு என்ன ஆபத்து இருக்க முடியும்? மாறு பெயரிலேதானே இங்கு வசிக்கிறீர்கள்?" என்று கேட்டான் அவன்.

"ஆம், மாறு பெயரில்தான் இங்கு வசிக்கிறோம். ஆனால் இந்த ஊர் அதிகாரிகளுக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டிருக்க வேண்டும், இளைய பல்லவரே! இரண்டு நாள்களாக இந்த மாளிகையின் மீது கண்காணிப்பு பலமாக இருக்கிறது" என்று பதில் சொன்னாள் அவள்.

இதைக் கேட்டதும், தீவிர சிந்தனையில் ஆழ்ந்துவிட்ட கருணாகரன் நீண்ட நேரம் பேசாமலே அறையில் அங்குமிங்கும் உலாவினான். பிறகு சட்டென்று அறை நடுவே நின்று அவளை நோக்கி, "நீங்கள் இங்கு வந்து எத்தனை நாள்களாகின்றன?" என்று வினவினான்.

"கிட்டத்தட்ட பதினைந்து நாள்களாகின்றன."

"உங்களைத் துறைமுகத்தில் யார் சந்தித்தது?"

"யாரோ கோட்டைக்கரைக் கூல வாணிகனாம்."

"அவன்தான் இந்த மாளிகையை அமர்த்திக் கொடுத்தானா?"

"ஆமாம்"

"அவன் இங்கு நாளைக் காலையில் வருவானா?" "தெரியாது!"

"தெரியாதா?"

"பத்து நாள்களாக அவன் இந்தப் பக்கமே நாடவில்லை."

இந்தப் பதிலைக் கேட்டதும் சில விநாடிகள் அசைவற்று நின்றுவிட்ட கருணாகர பல்லவன், மேலே ஏதோ பேச முற்படுமுன் அந்த அறைக் கதவு பலமாகத் தட்டப்பட்டது. "காஞ்சனா, காஞ்சனா, உனக்காக எத்தனை நேரம் காத்திருப்பது? ஆடை புனைய இத்தனை நேரமா?" என்று அடுத்தடுத்துக் கேட்கப்பட்ட கேள்விகளின் காரணமாகச் சட்டென்று அரசகுமாரி கதவைத் திறக்கவே, உள்ளே நுழைந்த சைலேந்திர குலத் தோன்றலான குணவர்மன் அந்த அறை அளித்த காட்சியைக் கண்டு, வாயிற்படியைத் தாண்டி வைத்த ஒருகால் அப்படியே இருக்க, உள்ளே முழுவதும் நுழையாமலும், ஏதும் புரியாமலும் தன் கண்களை அறையிலிருந்த இருவர் மீதும் மாறிமாறி நிலைக்க விட்டான்.

அந்த நிலைமை அங்கிருந்த மூவருக்குமே பெரும் சங்கடத்தை விளைவித்தது. ஆடையைச் சரியாகப் புனையாமல் அரைகுறையாகச் சுற்றிக்கொண்டு தன் புதல்வி நிற்பதையும், அவளை விழுங்கி விடுபவன்போல் ஒரு வாலிப வீரன் கண்களை அவள் மீது செலுத்திக் கொண்டிருப்பதையும் கண்ட குணவர்மனுக்கு, என்ன பேசுவது, என்ன செய்வது என்று தெரியாததால், சற்றே குழம்பினான். அரைகுறையாகச் சுற்றப்பட்ட ஆடையுடன் தான் நிற்பதைத் தந்தை கண்டு மலைத்ததைக் கவனித்த அரசகுமாரி, நாணம் உணர்ச்சிகளைக் கௌவிக் கொள்ளவே குழப்ப மிகுதியால் தரையில் கண்களை ஓட்டினாள். மற்ற இருவரை விடக் கருணாகர பல்லவனின் நிலை அதிக சங்கடமாயிருந்த போதிலும் அரசகுமாரியின் பெயர் "காஞ்சனாதேவி" என்பதை அவள் தந்தையின் அழைப்பிலிருந்து அறிந்துகொண்ட காரணத்தால், அவன், "காஞ்சனா தேவி! என்ன அழகான பெயர்!" என்று தனக்குள்ளேயே திரும்பத்திரும்பச் சொல்லிகொண்டதன்றி, "இவள் அழகுக்குப் பெயர் விளக்கம் கூறுகிறது. இவளும் சொர்ண விக்ரகம் போலத் தானே இருக்கிறாள்" என்று விவரித்து மனத்தை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தான்.

இப்படி மூவரும் மூன்றுவித மார்க்கத்தில் சிந்தனைகளை ஓட்டியதால் ஏற்பட்ட மௌனத்தை, சங்கடத்திலிருந்து முதலில் தன்னை மீட்டுக்கொண்ட காஞ்சனா தேவியே கலைக்கத் தொடங்கி, "ஆடை புனையத்தான் அறைக்கு வந்தேன்..." என்று இழுத்தாள்.

"அப்படியானால் ஏன் புனையவில்லை?" என்று எழுந்தது குணவர்மனின் கேள்வி, சற்றுக் கோபத்துடன்.

"அதற்குள் இவர் வந்து விட்டார்" என்றாள் காஞ்சனாதேவி, இளைய பல்லவனைக்கையால் சுட்டிக் காட்டி.

குணவர்மனின் குழப்பமும் கோபமும் அதிகமாகிக் கொண்டிருந்தன. தன் பெண் பாதி ஆடை உடுக்கும் போது ஊர் பேர் தெரியாத ஆடவன் ஒருவன் அறைக்குள் வந்ததை நினைத்தபோதே கோபம் அவன் முகத்தில் தாண்டவமாடியது. அதைப்பற்றித் தன் பெண் வெட்கமில்லாமல் பேசுகிறாளே என்பதை நினைக்க அந்தக் கோபம் எல்லையைத் தொட்டது. ஆனால் திடீரென ஏற்பட்ட அந்தச் சூழ்நிலையில் சிறிது குழப்பத்துக்கும் உள்ளான குணவர்மன், "இவர் வந்துவிட்டாரா!" என்று முதலில் சிறிது வியப்பைக் காட்டி, பிறகு, "இவர் யார்? முன்பே தெரியுமா உனக்கு?" என்று புதல்வியைக் கேட்டான்.

"தெரியாது. சற்று முன்புதான் அறிந்தேன்" என்றாள் காஞ்சனா தேவி.

"அப்படியா!" என்று எழுந்தது குணவர்மனின் இரண்டாவது கேள்வி. அவன் குரலில் ஒலித்தது இகழ்ச்சியா கோபமா என்பது விளங்கவில்லை காஞ்சனாதேவிக்கு. இருந்த போதிலும் மறுபடியும் சொன்னாள், "அறிந்ததும் வியப்படைந்தேன்," என்று.

(தொடரும்...)

# “கண்ணீரின் வீரியம் பொல்லாதது” இதிகாசங்களிலும் எம் வாழ்க்கையிலும்

> “ தான் இறந்தபின்பு தன்மகன் தனக்குகொள்ளி யிடுவான் என்ற நினைப்பில் வாழ்ந்த அந்த ஜீவன்கள் கடைசி மூச்சை விடும்போது என்ன நினைத்தார்களோ? ”

இராமாயணத்தில் வேட்டைக்குச் சென்ற தசரத மன்னன் மான் என நினைத்து ஏவிவிட்ட அம்பு குளத்தில் நீர் எடுத்துக்கொண்டிருந்த அந்தக முனிவரின் மகன் சிரவணனின் உயிரைப் பறிக்கிறது.

பிறவியிலேயே கண்கள் தெரியாத அங்கத முனிவருக்கும் அவரது மன்னைவிக்கும் ஒரே ஒரு புத்திரனே சிரவணன். தம் பிள்ளையை அநியாயமாகக் கொன்றுவிட்ட தசரதனுக்கு சாபங் கொடுக்கிறார் முனிவர்.

தான் செய்தது பிழை என தசரதன் உணர்ந்து கொண்டாலும் அந்த கண் பார்வையற்ற பெற்றோருக்கு மகனை அவனால் கொடுக்க முடியவில்லை. தாளாத சோகத்துடன் அரண்மனை திரும்புகிறான். தசரதன்.

இறுதியில் கைகேயின் சூழ்ச்சியால் இராமன் 14 ஆண்டுகள் வனவாசம் செல்கிறான்.

நாட்டின் அரசனாக முடிசூடி ஆட்சி செய்ய வேண்டிய தன் மகன் 14 ஆண்டுகள் வனவாசம் செல்ல தன் வாயாலேயே பணிக்கப்பட்டதையும் புத்திர சோகத்தாலும் வாடுகிறான் தசரதன்.

அன்று அந்தப் பார்வையிழந்த அந்தக முனிவரின் புதல்வனை அம்பெய்து கொன்றதற்கு அவர்களால் கொடுக்கப்பட்ட சாபம் இன்று எனக்கு பலித்துவிட்டது. நான் என் மகனை இழந்து தவிக்கிறேன் என தசரதன் உணர்ந்து கொண்டு தன்னுயிரை இழக்கிறான்.

இதிகாசங்கள், புராணங்கள் என்பவை எமக்கு அறத்துடன் நடக்கவே கற்றுத் தருகின்றன.

எம்மிடம் இருக்கும் அதிகார பலத்தைக் கொண்டு எதுவும் செய்யலாம் எனும் மனநிலையில் நாம் இருப்போமானால் விளைவுகள் மோசமானதாக அமைந்துவிடும் என்பதை இதிகாச புராணங்களினூடே நாம் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் பல வருடங்களைக் கடந்து நடந்து கொண்டே இருக்கிறது.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது எனும் கேள்வியுடன் வருடக்கணக்காக காணாமல் போனோரின் உறவுகள் வீதியில் இருந்து போராட்டம் நடத்துகிறார்கள்.

ஆனால் அதற்குப் பதில் கூற வேண்டிய அரசுகளோ அதைப்பற்றி எதுவும் பேசாமல் அமைதியாய் இருக்க, அரசு சார்ந்த சிலர், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



காணாமல்போன தன் உறவுக்கு என்ன நடந்தது. அவன் இருக்கிறானா? இல்லையா? என்பதை அறிவதற்கு அந்த உறவுகளுக்கு உரிமையுண்டு.

அந்த உரிமையை முடக்கும் வகையில் செயற்படுவது மனித உரிமை மீறல் செயற்பாடாகும்.

கடந்த முதலாம் திகதி உலக சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அந்த நிகழ்வை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கறுப்புப் போராட்டமாக மாற்றி ஒரு பாரிய போராட்டத்தை யாழ்.நகரில் மேற்கொண்டிருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு என்ன நடந்தது என ஐ.நா. விசாரணை செய்ய வேண்டும் எனும் தொனியில் இவ் அறவளிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

‘காணாமல்போன எம் சிறுவர்களுக்கு என்ன நடந்தது? கோட்டா அரசே பதில் சொல்’ என பதாகைகளை ஏந்தி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

காணாமல்போன தன் பிள்ளை க்கு என்ன நடந்தது என்பதைக் கேட்க ஒரு தாய்க்கு உரிமை உண்டு. காணாமல் போன தன் கணவனை தேடிக்கண்டு பிடிக்க மனைவிக்கு உரித்துண்டு. காணாமல்போன என் அப்பாவைத் தாருங்கள் என்று கேட்க பிள்ளைக்கு அதிகாரம் உண்டு. இவற்றிற்குப் பதில் சொல்ல வேண்டிய கடமை அரசுக்கு உண்டு.

சொல்ல வேண்டிய பதிலைச் சொல்லாமல் காணாமல் போனவர்கள் இறந்திருக்கலாம், வெளிநாட்டிற்குத் தப்பிச் சென்றிருக்கலாம், புலிகள் கொன்றிருக்கலாம், அவர்களை மண்ணுக்குள் தேடிப்பாருங்கள், காணாமல் போனவர்கள் பற்றி எமக்கு எதுவும் தெரியாது என்ற பதிலைக் கூறுவ தால் காணாமல் போன உறவுகளின் கண்ணீர் நிற்கும் என எவரும் நினை த்துவிட முடியாது.

மாறாக அவர்களின் வேதனையை இன்னும் தூண்டும் வகையிலேயே இக்கருத்துக்கள் அமையும்.

தன் மகனைக் கொண்டு வந்து படையினரின் கைகளில் கொடுத்த தாய் தன் மகன் வருவான், வருவாள் என எதிர்பார்த்திருக்க உன் மகனை மண்ணுக்குள் தேடிப்பார் எனக் கூறினால் அந்த மனம் படும் பாட்டை உணராதவர்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை எப்படிக் கூறுவார்கள் என்பதும் இங்கு கவனிக்க வேண்டிய விடயம்.

அண்மையில் சர்வதேச காணாமல் போனோர் தினத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தன் மகனைத் தேடும் தாய் ஒருவர் முகத்திற்குக் கட்டும் துணியினால் தன் கழுத்தை நெரித்த சம்பவம் ஊடகங்களில் வெளிவந்தன.

இந்த விடயத்தை சர்வசாதாரணமாகக் கடந்து செல்ல முடியாது.

தன் மகனுக்காக ஏங்கும் தாயின் மனநிலை இனி இருந்தென்ன எனும் நிலைக்கு வந்து விட்டதையே காட்டுகிறது. காணாமல்போன மகன்களைத் தேடிய எத்தனை பெற்றோர் இதுவரை இறந்து விட்டனர்.

தான் இறந்த பின்பு தனக்குத் தன் மகன் கொள்ளி போடுவான் என்ற நம்பிக்கையில் இருந்த அந்த ஜீவன்கள் கடைசி மூச்சை விடும்வரை தன் மகன் வரமாட்டானா? என்ற ஏக்கத்துடனேயே மூச்செறிந்து இறுதி மூச்சை விட்டிருப்பார்கள்.

அந்த. இறுதி மூச்சின் வீரியத்தை யாரும் சாதாரணமாகப் பார்த்து விட முடியாது.

ஒருவர் காணாமல் போவது என்பது அவர்களின் உறவினர்களின் மனநிலையில் எப்பேற்பட்ட தாக்கங்களைச் செலுத்தும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இறந்தவர்களுக்கு நாம் பல கிரியைகளைச் செய்கிறோம். இவை எதற்காக என்ற கேள்வி எம்மிடம் எழும்.

இறந்தவர் இனி மீண்டும் நம்முடன் வரமாட்டார். இனி அவரை பார்க்க இயலாது. அவர் எம்முடன் பேசமாட்டார். பழக மாட்டார். அவருக்கான இடம் என்பது வெற்றிடமே.

அந்த மனநிலையில் இருந்து மீள்வதற்கே அவருக்கான கிரியைகள், பிரார்த்தனைகளை மேற்கொள்கின்றோம்.

அவருக்கு விரும்பிய உணவைப் படைத்தால் அவர் வந்து சாப்பிடப்போவதில்லை என்பது தெரிந்த விடயமே. ஆனாலும் அவருக்காக அவர் விரும்பிய உணவைப் படைத்தோம் எனும் மனத்திருப்தி அவர் இனி எம்மிடையே வரமாட்டார் என்பதை எம்மனதிற்கு ஆழமாய்ச் சொல்லி எம்மைத் தேற்றிவிடும்.

ஆனால் காணாமல் போனவர்கள் இருக்கிறார்களா? இல்லையா? எப்படி இருப்பார்கள்? எங்கு இருப்பார்கள்? சாப்பிட்டார்களா? இல்லையா? தண்ணீர் குடித்தாரா? இல்லையா? என்று எண்ணி எண்ணி ஏங்கித் தவிக்கும் உறவுகளின் வலியை எந்த மருந்தாலும் ஆற்றி விட முடியாது.


அவ்வாறு எண்ணி எண்ணி இறுதி மூச்சை விட்ட அந்த ஆத்மாக்களின் சாபம் என்பது சாதாரணமானதன்று.

தண்ணீர் எடுக்க வந்த பார்வையிழந்த அங்கத முனிவரின் மகனை அம்பெய்தி கொன்ற தசரதனுக்கு நீயும் புத்திர சோகத்தால் வாடுவாய் என சாபமிட, நாடாள வேண்டிய தன் மகனை காடாள கட்டளையிட்ட தசரதன் தான் செய்த பிழையை பட்டுணர்ந்து புத்திர சோகத்தால் வாடி மரணித்துப் போகிறான்.

இந்த விடயம் எமக்கு ஏதோ ஒரு செய்தியை தந்து நிற்கிறது என்பதே உண்மையானது.

அபிமன்யு

# ஐ.நா. விடயத்தில் இலங்கையின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கும்?




**உலகம் ஒரு பொதுவான மற்றும் முன்னொரு போதும் இல்லாத அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள நேரத்தில், அரசுகளின் இறைமை சமத்துவத்திற்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கும், பிராந்திய ஒருமைப்பாட்டை மதிக்கும், அவற்றின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாத, ஐக்கிய நாடுகள் சபையே எங்களுக்குத் தேவை என்பதில் நான் உறுதியாக உள்ளேன்" என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருக்கிறார்**

-சுபத்திரா-

ஐ.நா.75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நடந்த உயர்மட்டக் கூட்டத்தில் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்று காரணமாக, ஜனாதிபதி கோட்டாபய இந்தக் கூட்டத் தொடரில் பங்கேற்க முடியாது போனது. முன்கூட்டியே பதிவு செய்யப்பட்ட அவரது உரையே, ஐ.நா. பொதுச்சபையில் வெளியிடப்பட்டது.

ஜனாதிபதியின் இந்த உரையில், ஐ.நாவைப் பகைத்து கொள்ளக்கூடிய தொனி தென்படாவிடினும், தூர நிற்க வேண்டும் என்று விநயமான முறையில் கேட்டுக் கொள்ளும் வகையில், அமைந்திருக்கிறது.

நாடுகளின் உள்விவகாரங்களில் ஐ.நா. தலையிடாமல் இருக்க வேண்டும் என்று அதிகாரத் தொனியில் கூறாமல், அவ்வாறு தலையிடாத ஒரு ஐ.நா. சபையையே எதிர்பார்ப்பதாக அவர் கூறியிருக்கிறார்.

நாங்கள் எதைச் செய்தாலும், கண்டு கொள்ளாத ஒரு ஐ.நா. சபையாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பை ஜனாதிபதி வெளிப்படையாக சொல்லியிருக்கிறார்.

இந்த விவகாரத்தை ஜனாதிபதி கோட்டாபய ஐ.நாவின் முன்பாக கொண்டு சென்றிருப்பதற்கு காரணம் இருக்கிறது.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவைக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான உறவுகளின் எதிர்காலம் எவ்வாறானதாக இருக்கப் போகிறது என்பது இன்னமும் கேள்விக்குரியதாகவே இருக்கிறது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில், முன்வைக்கப்பட்ட 30/1 தீர்மானம் மற்றும் அதன் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் இப்போது முடிவுக் கட்டத்தை நெருங்கியிருக்கிறது.

முன்னைய அரசாங்கம் இந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்த போதும், அதனைச் சரியாகச் செய்யவில்லை.

அண்மையில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பசெலெட் அம்மையாரும் சரி, ஐ.நாவின் சிறப்பு அறிக்கையயாளர்களும் சரி, வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்பு டன் செயற்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள்.

இனி உள்நாட்டுப் பொறிமுறைகளை நம்பிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்பதையும் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

வரும் பெப்ரவரியில் தொடங்கப் போகும் பேரவையின், அடுத்த கூட்டத் தொடரில், இலங்கைக்கு மிகப்பெரிய சிக்கல் காத்திருக்கிறது.

30/1 தீர்மானத்தில் உறுதியளிக்கப்பட்ட கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாது என்றும், அதனை நிறைவேற்றுவது நாட்டின் அரசியலமைப்பை மீறுவதாக இருக்கும் என்றும் இலங்கை அரசாங்கம் ஏற்கனவே ஜெனிவாவில் அறிவித்து விட்டது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த தீர்மானம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளையும், அனுசரணை நாடுகளையும் ஏமாற்றத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

இந்த நாடுகள் அடுத்த கட்டம் குறித்து தீர்மானிக்க வேண்டிய கட்டத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்றன.

இலங்கை அரசாங்கம் 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்று கூறிவிட்ட பின்னர், அந்த தீர்மானத்தின் உள்ளடக்கத்தை செயற்படுத்துவதில் எவ்வாறு செயலாற்றுவது என்று முடிவெடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றன.

இது அனுசரணை நாடுகளைப் பொறுத்தவரையில் கடினமானதொரு சூழல் தான். ஆனால், அதனை விட சிக்கலான சூழலை இலங்கை அரசாங்கம் எதிர் கொள்கிறது.

ஐ.நாவுடன் விட்டுக் கொடுக்காத ஒரு போக்கைக் கடைப்பிடிப்பதற்கான வியூகத்தை அரசாங்கம் வகுக்கத் தொடங்கியிருக்கிறது.

ஐ.நாவில் இலங்கையைக் காப்பாற்றக்கூடிய வகையிலான ஒரு புறக்கவசத்தை ஏற்படுத்திக் கொள்வதில் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

அதற்காகவே, மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் சட்டமா அதிபராகவும் பின்னர் உயர்நீதிமன்ற தலைமை நீதியரசராகவும் இருந்த, மொகான் பீரிஸ் நியூயோர்க்கில் உள்ள ஐ.நாவுக்கான நிரந்தர பிரதிநிதியாக அனுப்பப்படவுள்ளார். இவர் ஏற்கனவே, சட்டமா அதிபராக இருந்த காலகட்டத்தில், ஜெனிவாவில் பலமுறை இலங்கை மீதான குற்றச் சாட்டுகளை நிராகரிப்பதற்கான பயண ங்களை மேற்கொண்டிருந்தவர்.

சர்வதேச அரங்கில் இலங்கையைக் காப்பாற்றுகின்ற வகையில் செயற்படக் கூடியவர்.

இன்னொரு பக்கத்தில் ஜெனிவாவில் உள்ள ஐ.நாவுக்கான தூதுவராக மூத்த ஊடகவியலாளர் சந்திரபிரேம நியமிக்கப்படவுள்ளார்.

போரில் மனித உரிமைகள் மீறப்படவில்லை, பயங்கரவாதத்துக்கு எதிரான போரே நடத்தப்பட்டது, என்று எழுத்துக்களின் மூலம் போர் நடத்திக் கொண்டிருந்தவர் சந்திரபிரேம.

போர்க்குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதிலும், இலங்கைப் படையினரைக் காப்பாற்றுவதிலும், 'கோட்டாவின் போர்' என்ற நூலை வெளியிட்டு, இலங்கையின் நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்தக் கூடிய ஒருவர் என்பதால் அவர் ஜெனிவாவுக்கு அனுப்பப்படுகிறார்.

கடந்த ஜூன் மாதம் இலங்கை ஐ.நா மனித உரிமைகள் பேரவை தீர்மானத்துக்கு வழங்கிய இணை அனுசரணையில் இருந்து விலகி விட்டது.

இந்த நிலையில், அடுத்த போருக்கு தயார்படுத்தும் காலமாக தான் இதனை கருத வேண்டும். அடுத்த ஆண்டு தொடக்கத்தில், இலங்கை ஜெனிவாவில் கடும் சவாலை எதிர்கொள்ளப் போகிறது.

அங்கு கடும் அழுத்தங்கள் கொடுக்கப்படும் அல்லது புதிய தீர்மானம் கடுமையானதாக முன்வைக்கப்படும். அவ்வாறான நிலையில் இலங்கை எத்தகைய முடிவை எடுக்கும் என்பது தான் கேள்வி.

அண்மையில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், அமைச்சரவைப் பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெலவிடம், இதுகுறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நியாயமற்ற முறையில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன என்றும், அதனால் பேரவையில் இருந்து இலங்கை வெளியேறப் போகிறது என்றும் கூறியிருந்தார்.

ஜெனிவா தீர்மான இணை அனுசரணையில் இருந்து விலகிக் கொண்டது அதற்கான முதற்படி தான் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அடுத்த நாள் நாளிதழ்களில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து இலங்கை வெளியேறப் போகிறது என்ற செய்தி வெளியானதும், அரசாங்க தகவல் திணைக்களம் ஒரு அவசர அறிக்கையை வெளியிட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து வெளியேறும் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை, அமைச்சர் ரம்புக்வெல கூறியதை ஊடகங்கள் தவறாகப் புரிந்து கொண்டு விட்டன என்று அதில் கூறப்பட்டிருந்தது.

உண்மையில் அந்தக் கருத்தை வெளியிட்ட அமைச்சர் தான், அதனை நிராகரித்திருக்க வேண்டும். அவர் அதனைச் செய்யாமல், தகவல் திணைக்கள பணிப்பாளரைக் கொண்டு மறுப்பை வெளியிட்டிருந்தார்.

அதாவது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அதிகளவு அழுத்தங்களைக் கொடுத்தால் வெளியேறும் நிலையில் தான் இலங்கை இருப்பதாக தெரிகிறது.

அதற்கான முன்னோட்டமாக இந்த செய்தி பகிரப்பட்டிருக்கலாம். அல்லது ஒரு முன்னெச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கலாம். எது எவ்வாறாயினும், ஐ.நாவைக் கையாளும் விடயம் என்பது இலங்கைக்கு சிக்கலானதாகவே இருக்கப் போகிறது.

தற்போதைய அரசாங்கம், வெளிநாடுகளுடனான உறவுகளைக் கையாளும் விடயத்தில் தடுமாற்றங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது.

அதுவும் ஐ.நா.விடயத்தில் அதன் போக்கு எவ்வாறானதாக இருக்கும் என்பதை இன்னும் சில மாதங்களிலேயே தெரிந்து கொள்ள முடியும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐ.நாவை தூர விலகி நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டது, இதனை அடிப்படையாக வைத்து தான்.

ஆனால், அதனை அவர் அமெரிக்க ஜனாதிபதியைப் போல உறுதியாக சொல்ல முடியவில்லை. பணிவாகத் தான் கூறியிருக்கிறார். இதுவே இலங்கையின் பலவீனத்தைக் காட்டிக் கொடுத்திருக்கிறது.

# இலங்கை - இந்தியா திடீர் நெருக்கம் ஏன்!

இந்திய, இலங்கை பிரதமர்கள் இடையிலான காணொளி வாயிலான பேச்சுவார்த்தை, முன்னெப்போதும் இல்லாத வகையில் அமைந்துள்ளது என்றாலும், அது நடத்தப்பட்ட காலமும், நேரமும் விவாதிக்கப்பட்ட விடயங்களும் இரு தரப்பிலும் அரசியல் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

இந்தியா, இலங்கை இடையே, பௌத்த தொடர்புகளை மேம்படுத்துவதற்காக 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவியை இலங்கைக்கு வழங்குவதாக அறிவித்த அதே வேளை, இலங்கையில் வாழும் சிறுபான்மை தமிழ் சமூகத்திற்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்துமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

இலங்கை பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பிறகு, இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் முதல் முறையாக இரு நாட்டு நல்லுறவு தொடர்பான அதிகாரபூர்வ பேச்சுவார்த்தை காணொளி வாயிலாக நடத்தப்பட்டது.

இலங்கை தமிழர் உரிமைக்கு முன்னுரிமை, இந்த பேச்சுவார்ததையின் போது இரு தரப்பு பொருளாதாரம், இந்தியா உதவியுடன் செயற்படுத்தப்படும் திட்டங்கள் போன்றவை விவாதிக்கப்பட்டபோதும், இலங்கை தமிழர்கள் உரிமைகள் விவகாரத்துக்கும் இரு தலைவர்கள் அதிக முன்னு ரிமை கொடுத்தனர்.

இலங்கை பாராளுமன்றத்தில் ஆளும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கட்சி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை பெற்ற நிலையில், அடுத்த ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்துக்கு தேர்தல் நடைபெறவிருக்கிறது. இந்த நிலையில், இலங்கை தமிழர் விவகாரத்துக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி முக்கியத்துவம் கொடுத்து இலங்கை பிரதமருடன் பேசியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

"அமைதி மற்றும் நல்லிணக்க செயல்முறைகளை முன்னெடுக்க 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது அவசியமானது"

- இந்தியப் பிரதமர் மோடி -



### இந்தியா- இலங்கை கூட்டறிக்கை வெளியீடு

அமைதி மற்றும் நல்லிணக்க செயல் முறைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது அவசியம் என்று தனது உரையின் போது இந்திய பிரதமர் மோடி வலியுறுத்தினார். இந்த தகவலை டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவு அமைச்சக இணைச்செயலாளர் அமித் நரங் உறுதிப்படுத்தினார்.

"அரசியலமைப்பு விதிகளை அமுல்படுத்தி நல்லிணக்கத்தை அடைவதன் மூலம் ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கௌரவம் ஆகியவற்றுக்கான தமிழர்களின் எதிர்பார்ப்புகளை உணரும் வகையில் செயற்படுமாறு இலங்கையில் புதிய அரசாங்கத்துக்கு இந்திய பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார்" என்று இந்திய வெளியுறவு அதிகாரி தெரிவித்தார்.

மேலும், இந்த பேச்சுவார்த்தைக்கு பிறகு இரு நாட்டு அரசுகள் சார்பில் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில், மக்களின் தீர்ப்புப்படி பேணப்பட்ட நல்லிணக்கத்தை அடைவதன் மூலமும், அரசியலமைப்பு விதிகளை அமுல்படுத்துவதன் மூலமும் தமிழர்கள் உட்பட அனைத்து இனத்தவர்களின் எதிர்பார்ப்புகளை உணர்ந்து தமது நாடு செயற்படும் என்ற நம்பிக்கையை இலங்கை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெளிப்படுத்தினார் என்றும் அந்தக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 13ஆவது திருத்தம் என்றால் என்ன?

இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம், அங்கு வாழும் தமிழ் சமூகத்திற்கு அதிகாரப்பகிர்வு வழங்க வழிவகுக்கிறது.1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்குப் பிறகு கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தத்தை செயற்படுத்த இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறது.

இந்தத் திருத்தம், 1987ஆம் ஆண்டு, நவம்பர் 14ஆம் திகதி, இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதன்படி "ஐக்கியம், இறையாண்மை மற்றும் ஆட்புல உறுதிப்பாட்டைக் கட்டிக் காக்கும் அதேவேளை இலங்கை இனச்சிக்கலைத் தீர்த்து வைப்பதை இந்த திருத்தம் நோக்கமாகக் கொண்டது. தமிழர்கள் வாழும் மாகாண சபைகளுக்கு அரசியல் அதிகாரத்தை கொடுப்பதற்காகவே இந்த 13 ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

எனினும், 2009ஆம் ஆண்டுடன் விடுதலைப்புகளுக்கும் இலங்கை படையினருக்கும் இடையிலான உள்நாட்டு போர் முடிவுக்கு பிறகு அந்த திருத்தம் கள அளவில் அமுல்படுத்தப்பட வேண்டும் என ஒலிக்கப்பட்டு வந்தாலும், அது தேர் தல் காலங்களில் தமிழர்களின் கவனத் தையும் வாக்குகளையும் ஈர்க்கும் முழக்க மாகவே இருந்து வருகிறது.

இலங்கையில் குறிப்பாக தமிழர் பகுதிகளிலும், இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டிலும் இந்த முழக்கம், தேர்தல் காலங்களில் வாக்குகளை ஈர்க்கும் வகையில் அதிகமாகவே ஒலிப்பதை கேட்கலாம்.

அந்தத் திருத்தத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் அல்லது ரத்துச் செய்யப்பட வேண்டும் போன்ற குரல் இலங்கையில் சமீபகாலமாக ஒலிக்கப்படுகிறது. இருப்பினும், அதை அங்குள்ள தமிழ் கட்சிகளும் அமைப்புகளும் ஆட்சேபித்து வருகின்றன.

### மனிதாபிமானத்துடன் மீனவர்கள் விவகாரம்

இரு தரப்பிலும் நடுக்கடலில் சர்வதேச எல்லையை அறியாமல் கடக்கும் மீனவர்களை பிடிக்கும் நாடுகள் அவர்களை மனிதாபிமானத்தோடு நடத்தவும், தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் இரு தரப்பு அணுகுமுறையை ஆக்கபூர்வமாக கையாள்வது குறித்தும் இந்திய- இலங்கை பிரதமர்கள் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

இரு தரப்பு தலைவர்களின் பேச்சுவார்த்தை, நட்பார்ந்த, வெளிப்படையான மற்றும் நல்ல முறையில் நடந்தது என்றும் இந்திய வெளியுறவு அதிகாரி கூறினார்.

இது தவிர, பொருளாதாரம் மற்றும் வர்த்தகம், விவசாயம், கால்நடை வளர்ப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுகாதா ரப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் ஒத்து ழைப்பை மேலும் வலுப்படுத்த இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

"இரு தலைவர்களும் இலங்கையில் செயற்படுத்தப்பட்டு வரும் இந்திய வீட்டு வசதித் திட்டத்தைத் தொடர ஒப்புக் கொண்டதோடு, தோட்டத்துறையில் 10 ஆயிரம் வீடுகளை விரைவாகக் கட்டமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கினர்"

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்த பிறகு வெகு அருகே உள்ள நட்பு நாடு ஒன்றுடன் காணொளி வாயிலாக அலுவல்பூர்வ பேச்சுவார்த்தை நடத்து வது இதுவே முதல் முறை.

இதேபோல, இலங்கை பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்த பிறகு தனது அண்டை நாட்டுடன் இரு தரப்பு நல்லுறவு தொடர்பாக காணொளி வாயிலாக பேசுவதும் இதுவே முதல் முறை.

அண்மையில் இலங்கை கடல் பகுதியில் 2இலட்சத்து 70 ஆயிரம் மெற்றிக் டன் கச்சா எண்ணெய் ஏற்றி வந்த கப்பலில் ஏற்பட்ட தீயை கட்டுப்படுத்த இந்திய கடற்படையும், கடலோர காவல்படையும் துரிதமாக வழங்கிய உதவியை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பாராட்டினார்.

### திடீர் நெருக்கம் ஏன்?

இந்தியாவின் வடக்கு, கிழக்கு, வட கிழக்கு ஆகிய பகுதிகளில் ஏற்கனவே எல்லைக்கு அப்பால் சீன அத்துமீறல் அல்லது எல்லை தாண்டிய ஊடுருவல் நடக்கலாம் என்ற அச்சம் காரணமாக அங்கெல்லாம் இந்தியா படைகளை குவித்து வருகிறது.

இந்த நிலையில், இந்தியாவின் தென்கோடிக்கு கீழே இந்திய பெருங்கடல் பகுதியில் தனது நிலையை வலுப்படுத்திக் கொள்ள சீனாவுக்கு இருக்கும் ஒரே ஆதாரமாக இலங்கை திகழ்கிறது.

இலங்கையில் உள்நாட்டுப் போருக்குப் பிறகு இந்தியாவை விட அதிகமாகவே சீனா உட்கட்டமைப்பு திட்டங் களில் முதலீடு செய்து பல திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. இந்தப்பின்னணியில், சீனாவின் மறைமுக அச்சுறுத்தல் இந்தியாவுக்கு பாதகமாகி விடாமல் பாதுகாக்கும் வகையிலேயே பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடனான பேச்சுவார்த்தையை இந்தியா தற்போது நடத்தியிருப்பதாக தெற்காசிய விவகாரங்களை கவனிக்கும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

### ஊடலும் கூடலும்

2015 இல் நடந்த இலங்கை தேர்தலின்போது தமது கட்சியின் தோல்விக்கு இந்தியாவின் ரோ உளவுப்பிரிவே காரணம் என்று இலங்கை ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 2018 இல் இதே குற்றச்சாட்டை அப்போது இலங்கை ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவும் முன்வைத்தார். இந்த நிலையில், இந்திய வெளியுறவு அதிகாரிகள் மேற்கொண்ட இடைவிடாத ராஜீய உறவுகள் காரணமாக, ஊடலாக இருந்த இலங்கையுடனான உறவு, தற்போது கூடலாகியிருக்கிறது.

அந்த கூடலின் வெளிப்பாடுதான், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, முன்னெப்போதும் இல்லாத வகையில், மகிந்த ராஜபக்ஷவுடனான பேச்சுவார்த்தை விபரங்களை ஆங்கிலம் மட்டுமன்றி, தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளிலும் தமது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறார் என்பதையும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

நன்றி: பி. பி.சி

# இலங்கை அரசியலும் அரசியலமைப்புத் திருத்தங்களும்

கடந்த வாரங்களிலே 1978ம் ஆண்டின் 2வது குடியரசு அரசியல் திட்டத்திலே இதுவரை மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங்கள் பற்றி சுருக்கமாகப் பரர்த்தோம். அந்தவகையில் 19ஆவது திருத்தம் என்பது இரு பெரும் தேசிய கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐ.தே.கட்சியும் இணைந்து நடத்திய நல்லாட்சி அரசாங்கத்தின் தேனிலவுக் காலத்திலே கொண்டுவரப் பட்டதொன்றாகும். பின்னர் இந்தத் தேனிலவு கசந்து போய் இரு தரப்புகளுக்கும் முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கியமைக்கும் இந்த 19ஆவது அரசியல் திட்டமே அடிப்படையாக அமைந்தது என்பது சிலரின் கருத்தாகும். ஏனெனில் 19ஆவது அரசியல் திட்டமானது ஜனாதிபதியினது அதிகாரங்களை கணிசமானளவு குறைத்திருந்தது அல்லது இடமாற்றியிருந்தது. இந்தப் பின்னணியில் கடந்த பாராளுமன்றத் தேர்தலிலே பாரிய பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்திலே குறிப்பிட்டபடி 19வது திருத்தத்தை நீக்கி புதிய அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றை கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. இது தொடர்பாக 20வது அரசியல் திட்ட உத்தேச முன்வரைபு ஒன்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டது.

### 20வது அரசியல் திட்ட முன்வரைபு

20வது அரசியலமைப்புத் திருத்தம் என்பது இன்று பட்டிதொட்டியெல்லாம் பேசுபொருளாகியுள்ளது. அது நாட்டிற்கு அவசியமானதொன்று என்றும் அது நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஒருசாராரும் இல்லை இல்லை இது ஜனநாயகத்திற்கு ஒரு சாவுமணி என்று பிறிதொரு சாராரும் ஏட்டிக்குப் போட்டியாக கருத்துத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர். 20வது திருத்தத்தைத் கொண்டுவருவதற்குரிய ஆளும் தரப்பின் நியாயப்பாடு யாதெனில் 19வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலமே இந்த நாட்டிலே அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமற் போனது. அண்மைக்காலங்களில் ஜனாதிபதிக்கும் பிரதமர் மற்றும் பாராளுமன்றத்திற்கும் ஏற்பட்ட இழுபறி நிலைக்கும் இதுவே காரணமாக அமைந்தது. எனவே இது நீக்கப்பட வேண்டும். இதனைக் கூறியே நாம் மக்கள் ஆணையைப் பெற்றோம். எனவே இந்த 20வது திருத்தத்தைக் கொண்டு வருகிறோம் என்பதாகவுள்ளது.

உண்மையில் கடந்த மூன்று அரசியலமைப்புத் திருத்தங்களையும் நோக்குவோமானால் அவை மூன்றும் பாராளுமன்றத்திற்கும் நிறைவேற்று ஜனாதிபதிக்குமிடையிலான அதிகார இழுபறி நிலையின் காரணமாக தோற்றம் பெற்ற அரசியலமைப்புத் திருத்தங்களாகும். 20வது அரசியலமைப்புத் திருத்தமும் அவ்வாறானதொரு அதிகார இழுபறி நிலையின் தொடர்ச்சியாகும் எனக் கூறப்படுகின்றது. 17ம் மற்றும் 19ம் அரசியல்திட்ட திருத்தத்தைக் கொண்டு வந்தவர்களின் கோசம் ஜனாதிபதியின் உச்ச பட்ச அதிகாரங்கள் குறைக்கப்பட்டு அவை பாராளுமன்றத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்பதாகக் காணப்பட்டது. அதற்காக 17ம் 19ம் திருத்தங்களைக் கொண்டு வந்தவர்கள் ஜனநாயக விரும்பிகள் என்று எழுந்தமானத்தில் கூறிவிட முடியாது. சில நடுநிலை அரசியல் ஆய்வாளர்களின் கருத்துப்படி மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவு தேவைப்பட்டதால் தான் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தனக்கு இஷ்டமில்லாது விடினும் 17வது திருத்தத்தை நிறைவேற்றினார் என்பதாகும்.

20ம் அரசியல் திருத்தம் எவ்வாறு முன்னைய திருத்தங்களிலிருந்து வேறுபடுகின்றது அல்லது ஒத்திருக்கிறது?.

20வது அரசியலமைப்புச் சீர்திருத்தத்திலே எவ்வாறான புதிய விடயங்கள் இடம்பெறப் போகின்றன அல்லது பழைய ஏற்பாடுகளில் எவ்விடயங்கள் நீக்கப்படப் போகின்றன என்பன தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படாத ஒரு நிலையே காணப்படுகின்றது. ஆளும் கட்சியினர் 19வது அரசியலமைப்புத் திருத்தத்தில் காணப்படும் சில நல்ல அம்சங்கள் இருபதிலும் தொடரும் என்கின்றனர். அந்த வகையில் பின்வரும் விடயங்கள் 20 வது அரசியல் திட்டத் திருத்தத்தில் இடம் பெறலாம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

1)19 இல் காணப்பட்ட தகவலறியும் உரிமை 20இலும் தொடர்வதற்கு வாய்ப்புள்ளது.

2)ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் என 18இல் குறிப்பிடப்பட்டிருந்தது. 19இல் அது ஐந்து ஆண்டுகள் எனக்குறைக்கப்பட்டது. அது 20இலும் தொடர்கிறது.

3)ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யும் அதிகாரம்19 வது திருத்தத்தில் இருந்தது. 20இல் அது நீக்கப்படுகின்றது.

4)ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறவேண்டும் என்ற கட்டுப்பாடு 20 இல் இல்லாதாக்கப்படுகின்றது.

5)நீதிச் சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் சேவை ஆணைக்குழுக்கள், மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுக்கள் போன்ற 9 சுயாதீன ஆணைக்குழுக்களையும் பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், கணக்காய்வாளர் நாயகம் போன்ற உயர் பதவிகளுக்கு நியமனங்களைச் செய்யும் போதும் ஜனாதிபதியானவர் அரசியலமைப்பு பேரவையின் சிபார்சினை பெற வேண்டிய தேவை இல்லாமல் போகிறது. அதாவது ஆணைக்குழுக்களின் அதிகாரங்கள் குறைக்கப்படுகின்றன.

6)இரட்டைக் குடியுரிமையுடையவர் தேர்தல்களில் போட்டியிட முடியாது என்ற நிலை நீக்கப்படுகிறது.

7)ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான ஆகக்குறைந்த வயதெல்லை 35 இலிருந்து 30 ஆகக் குறைக்கப் படுகின்றது.

8)ஜனாதிபதியானவர் அமைச்சுப் பொறுப்புக்களை வைத்திருக்க முடியாது என்ற ஏற்பாடு நீக்கப்படுகின்றது.

9)19வது திருத்தத்தில் காணப்பட்ட ஜனாதிபதியானவர் பாராளுமன்றம் அதன் முதல் கூட்டத்திற்கு நியமித்த திகதியி லிருந்து 4 1/2 ஆண்டுகளுக்கு முன்னர் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாதென்ற ஏற்பாடு இல்லாமற் செய்யப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த 20வது அரசியலமைப்பு திருத்தத்திற்கெதிராக பல்வேறு தரப்புக்களால் 39 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்விடயத்தில் உயர் நீதிமன்றத் தீர்ப்பு இன்னும் வெளிவரவில்லை. மேலும் பாராளுமன்றத்தில் திருத்தம் தொடர்பில் 2ம் நிலை வாசிப்பு நடைபெற வேண்டும். இவ்வாறான வாசிப்புக்களின் போது பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டே திருத்தத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கப்படும். மேலும் இத்திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு 2/3 பாராளுமன்றப் பெரும்பான்மை போதுமானதா? அல்லது சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்பட வேண்டுமா ? என்பது தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே மேற்கூறிய விடயங்களால் எந்த விடயங்கள் இறுதி வடிவத்தில் உள்வாங்கப்படும் என அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது.

20வது அரசியல் திருத்தம் சிறுபான்மையினருக்கு பாதிப்பானதா?

20வது அரசியல் சீர்திருத்தம் என்பது உண்மையில் முழுக்க முழுக்க பாராளுமன்றத்திற்கும் ஜனாதிபதி பதவிக்குமிடையிலான அதிகார பங்கீட்டைப் பற்றியதாகும். எனவே சிறுபான்மையினரை நேரடியாகப் பாதிக்கக்கூடிய விடயங்கள் இத்திருத்தத்தில் பெருமளவு இல்லையென்றே கொள்ள வேண்டும். ஆனாலும் ஜனநாயக விழுமியங்கள் சில புறத்தொதுக்கப்பட்டுள்ளன என்ற ரீதியில் சட்ட வல்லுநர்களின் கருத்துரைகள் அமைந்திருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. எனினும் ஆளும் அரசு 19 வது அரசியற் திருத்தத்தில் காணப்படும் நல்ல விடயங்கள் 20 இலும் தொடரும் எனக் குறிப்பிட்டுள்ளமை ஆறுதலளிக்கக்கூடிய விடயமாகும். எது எவ்வாறாயினும் 20 வது திருத்தம் குறித்து இன்னும் இறுதி முடிவு இல்லாத நிலையில் அது தொடர்பில் கருத்துத் தெரிவிப்பது கடினமாகும்.



இலங்கைக்கு ஏன் ஒரு புதிய அரசியலமைப்பொன்று தேவைப்படுகின்றது?

அரசியலமைப்புவாத கோட்பாடு ஒரு அரசியல் அமைப்பின் குறிக்கோள்கள் என்னவாக இருக்க வேண்டும் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

1)அது சமூகத்திற்கான ஒரு அரசியல் சட்டகத்தை வழங்குதல் வேண்டும்.

2)தனிநபர் சுதந்திரம் மற்றும் சுயாதீனம் என்பவற்றையும் சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளை பாதுகாத்தல் வேண்டும்.

3)சமூகம் ஆளப்பட வேண்டிய விழுமியங்கள் மற்றும் கோட்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கியதாக அது இருத்தல் வேண்டும்.

சுதந்திரத்தின் பின் இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட 1972 மற்றும் 1978ம் ஆண்டு யாப்புக்கள் இரண்டும் இந்த நாட்டில் காணப்படுகின்ற இனப்பிரச்சினை உட்பட முக்கிய பிரச்சினைகளை தீர்த்து வைக்கவில்லை என்ற குற்றச்சாடடு இருந்து கொண்டேயிருக்கிறது. நாட்டின் மீயுயர் சட்டமான அரசியலமைப்புச் சட்டம் என்பது பரிபூரணமாக இருப்பதோடு அது நாட்டில் நடைமுறையில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்குரிய அடிப்படைகளை வழங்குவதாகவும் எதிர் காலப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்க்கக் கூடியவையாகவும் காணப் பட வேண்டும். அந்தவகையில் 1972 மற்றும் 1978 அரசியலமைப்புக்களில் காணப்படும் தவறுகளிலிருந்து படிப்பினைகளை பெற்றுக்கொள்ளும் ஒரு புதிய அரசியலமைப்பானது சர்வதேசத்தின் மிகச் சிறந்த நடைமுறைகளிலிருந்து அதற்குத் தேவையான கூறுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நல்லாட்சி, மனித உரிமைகளின் பாதுகாப்பு, தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை என்பவற்றை அறிமுகம் செய்து வைப்பதற்கு இத்தகைய ஓர் அரசியலமைப்பு நாட்டிற்குத் தேவைப்படுகின்றது.

இந்நாட்டின் பெரும்பான்மையின சிங்கள மக்கள் நாட்டிற்கு ஒரு புதிய அரசியலமைப்புத் தேவை என உணரத் தொடங்கி விட்டனர். சிங்கள அரசியல்வாதிகளின் அண்மைக்கால கூற்றுக்கள் அதனைக் கோடி காட்டுவதாகவுள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களின் பிரச்சினை சிங்கள மக்களின் பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டது. அது உரிமை சார்ந்த, அதிகாரம் சார்ந்த பிரச்சினைகளாகவுள்ளது. தற்போதைய அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13ஆவது அரசியற் சீர்திருத்தம் காரணமாக உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமையில் காணப்படும் முக்கிய குறைபாடாக தமிழர் தரப்பால் முன்வைக்கப்படும் முக்கிய விடயம் அதிகாரப்பகிர்வு தொடர்பானவையாகும். இங்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு, ஒற்றையாட்சி முறையிலான அதிகாரப்பகிர்வு என்று வெவ்வேறு வியாக்கியானங்களை பல்வேறு தரப்புக்கள் முன்வைக்கின்ற போதிலும் இவை யாவும்வெறும்சொற்பிரயோகங்களேயாகும்.

இந்திய அரசியலமைப்பை எடுத்துக் கொண்டால் அதில் எந்தவொரு இடத்திலும் இந்தியா ஒரு சமஷ்டி முறையை அடிப்படையாகக் கொண்ட நாடு எனக் குறிப்பிடப்படவில்லை. அதனை உரு வாக்கிய டாக்டர் அம்பேத்கர் இந்திய அரசியலமைப்பு சாதாரண காலங்களில் சமஷ்டிப் பண்புடனும் அவசர காலங்களில் ஒற்றையாட்சிப் பண்புடனும் செயற்படும் எனக் குறிப்பிடுகிறார். இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில் சமஷ்டி முறை நிலவுகின்ற இந்தியா போன்ற நாடுகள் சிலவற்றில் காணப்படும் அதிகாரப் பகிர்வு முறையை விட ஒற்றையாட்சி முறை நிலவும் பிரித்தானியாவில் உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மிக உயர்வானவை. அதற்காக சமஷ்டி அவசியமில்லை என்பதல்ல. இங்கு முக்கியமான விடயம் யாதெனில் வெறும் பெயர் சூட்டுதல்கள் (Label) முக்கியமல்ல. கணிசமானளவு அதிகாரப் பகிர்வு என்பதனையே தமிழர் தரப்புகளின் கோரிக்கையாக இருக்க வேண்டுமென தமிழ்த் தரப்பு அரசியலறிஞர்கள் சிலரின் கருத்தாக இருக்கின்றது.

1978ம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிற்கு கிடைத்த மிகப்பெரும் மக்கள் ஆணையின் பின்னர் ஒரு மிகப்பெரும் மக்கள் ஆணை இந்த அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கின்றது. எனவே இந்த ஆணையை வைத்துக்கொண்டு ஒரு புதிய அரசியலமைப்பொன்றை இந்த அரசாங்கம் உருவாக்கியே தீரும் என்று எதிர்வு கூறலாம். உண்மையில் ஒரு கிழிந்த சட்டையை அடிக்கடி தைத்து தைத்து போடுவதை விட அதற்குப் பதிலாக புதிய ஒரு சட்டையை வாங்கி விடுவதே நல்லது. எனவே அவ்வாறானதொரு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டால் அது இன்னும் பல ஆண்டுகள் அமுலில் இருக்கப்போகிறது. எனவே இந்த அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது பல தசாப்தங்களாக தொடர்ந்து கொண்டிருக்கும் தமிழர் தரப்புப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகள் எவ்வளவு தூரத்திற்கு உள்வாங்கப்படப் போகின்றன அல்லது தமிழர் பிரதிநிதிகள் உச்சபட்ச தீர்வுகளை புதிய அரசியலமைப்பில் உள்வாங்கப்பட எத்தகைய எத்தனங்களை மேற்கொள்ளப்போகின்றன. இவ்விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு எவ்வாறு இருக்கப் போகிறது. மேற்குலக நாடுகள் மற்றும் சர்வதேச ஸ்தாபனங்களின் பங்களிப்பு எத்தகையதாக இருக்கும் என்பதெல்லாம் மிகப் பெரிய வினாவாக தமிழ் மக்கள் முன்னிலையில் காட்சியளிக்கின்றது.

முற்றும்.

பிரணவன்

# எங்களுக்குப் பிடித்த எஸ்.பி.பி.

**கா**தல், பிரிவு, துயரம், மகிழ்ச்சி, விரக்தி, உற்சாகம் என எல்லா உணர்ச்சிகளுக்கும் ஆன்மாவாக இருந்தவை எஸ்.பி.பியின் பாடல்கள். "உங்களால் மறக்க முடியாத எஸ்.பி.பி. பாடல் எது?' என பிரபலங்கள் சிலரிடம் கேட்டோம்.

### கே.ஆர்.விஜயா

'நெஞ்சிருக்கும் வரை' ஷூட்டிங்ஸ் பாட்ல அவரை முதன் முதலாப் பார்த்திருக்கேன். இரண்டாவது தடவையா அவரைச் சந்திச்சது ஒரு விழா மேடையில். எனக்கும் அவருக்கும் டாக்டர் பட்டம் தந்தாங்க. 'அறிமுகமான கொஞ்ச நாட்களிலேயே அவருடைய குரலுக்கு அவ்வளவு வரவேற்பு கிடைச்சிருச்சே. இவர் மட்டும் பெண்ணாப் பிறந்திருந்தா நமக்குக் குரல் கொடுத்திருப்பாரே'ன்னு கூட நினைச்சிருக்கேன். நிறைய பாடல்களை திரும்பத் திரும்பக் கேட்டிருக்கேன். குறிப்பிட்டுச் சொல்லணும்னா, அவருடைய முதல் இரண்டு பாடல்களையே சொல்லலாம். 'ஆயிரம்நிலவேவா', 'இயற்கை எனும்இளைய கன்னி இரண்டு பாடல்களும் எல்லாத் தலைமுறைக்குமே பிடிக்கும்!"



### பாக்யராஜ்

"வானத்துல நட்சத்திரக் கூட்டத்தைக் காட்டி எது சிறந்த நட்சத்திரம் என்று கேட்கிற மாதிரி இருக்கு. 40 ஆயிரம் பாடல்களுக்கு மேல் பாடியிருக்கார். படம் ஓடுதா இல்லையாங்கிறது வேற விடயம். டைரக்டர், மியூசிக் டைரக்டர் என்ன எதிர்பார்க்கிறாங்களோ, புரிஞ்சு தன்னுடைய முழு உழைப்பைத் தருகிற ஒருத்தர்னு அவரைச் சொல்வேன். சரியான திறமைசாலி. வேற ஒண்ணும் வேணாம்... 'மாங்குயிலே பூங்குயிலே'வுல 'எம்மா'னு இழுப்பாரு பாருங்க, அதுதான் அவரோட டச்.

ஸ்பெஷலா சொல்லணும்னா என்னுடைய படத்துல இருந்தே 'சங்கீதம் பாட ஞானம் உள்ளவர்கள் வேண்டும்' புாடலைச் சொல்லலாம். ஏன்னா எம்.எஸ்.வி., ராஜாசார் மாதிரியான இசையமைப்பாளர்கள் கிட்டதான் அவர் பேப்பர் பேனா எடுத்து நோட் பண்ணி வச்சுக்கிட்டுப் பாடுவார். நான் ஏதோ "தத்தக்காபித்தக்கா' மியூசிக் பண்ணினா அப்பவும் நோட்பண்ணிக்கிட்டார்.

எனக்கு ஒரே சந்தோசம். ஆனால் அதைப்பற்றிக் கேட்டதுக்கு அவர் சொன்ன பதில்தான் ஹைலைட். 'குருநாதரே, நான் கரெக்ட்டான ஸ்வரம் பாடியே பழகியிருக்கேன். நீங்க தப்பா பாடச் சொல்றீங்க. அதனால எழுதி வச்சுப் பாடினாத்தான் சரியா வரும்னார். சத்தியமங்கலத்துல நடந்த அந்த ஷூட் நினைவுதான் இப்ப மனசுல வந்துட்டே இருக்கு!"

### ராதிகா

"எஸ்.பி.பி.சார் பாடல்களில எல்லாருக்கும் பிடிச்ச 'மண்ணில் இந்தக் காதலின்றி'தான் என் மனசுக்கும் நெருக்கமானது. அந்தப்பாடலின் காட்சியில நடிச்ச நடிகைங்கிறது எனக்கு இன்னும் பெருமை. மகாபலிபுரத்துல ஷூட்டிங் நடந்தது. எப்பவுமே ஜோக் அடிக்கறதும், கலாய்க்கிறதுமா ஷூட்டிங்ஸ் பாட்டையே கலகலன்னு வைச்சிருப்பார். அந்தத்தருணங்கள் பசுமையா அப்படியே நினைவிருக்கு!"

### குஷ்பு

"ஒண்ணு இல்ல, ரெண்டு பாட்டு என்னுடைய ஆல்டைம் பேவரிட். 'மௌனராக'த்துல 'மன்றம் வந்ததென்றலுக்கு', 'நிழல்கள்'ல 'இது ஒரு பொன் மாலைப்பொழுது'. 'மௌன ராகம்' சாங்ல ஓபனிங்ல வர்ற அந்த ஹம்மிங் போர்ஷன்... ஆஹா..! அவரை எங்காச்சும் நேர்ல பார்த்தேன்னா, 'சார் ப்ளீஸ்'னு கேட்பேன். உடனே பாடிடுவார். இனி லைவா கேட்க முடியாதுங்கிற நினைப்பே மனசை அழுத்துது!"

### சாருநிவேதிதா

'மலரே மௌனமா' பாடலை ஆயிரம் தடவைக்கு மேல கேட்டிருப்பேன். எப்பெல்லாம் மூடு 'டௌன்' ஆகிற மாதிரி தெரியுதோ அப்பெல்லாம் கேட்பேன். கர்வம் இல்லாத மனுஷன். கிரேட்ஹ்யூமன்!

### ஹரிஷ்கல்யாண்

'மறுபடியும்' படத்துல வர்ற 'நலம் வாழ' சாங் என் பேவரிட். வரிகளுமே ரொம்பப் பிடிக்கும். கார்ல கூட இந்தப் பாட்டைத் தான் அடிக்கடி கேட்பேன். மிஸ் யூஎஸ்.பி.பி.சார்!"

### தங்கம்தென்னரசு

"கல்லூரி நாட்களில் எனக்கு அறிமுகமான, 'பட்டுக்கன்னம் தொட்டுக்கொள்ள' பாட்டை இப்பவும் எப்பவாவ்து கேட்டா, எவ்ளோ அவசரத்துல இருந்தாலும் கொஞ்ச நேரம் அப்படியே நின்னுடுவேன். ஏன்னா, அதுல இடையில ஒரு சிரிப்பு வரும்பாருங்க... அந்தச் சிரிப்புக்காக வெயிட்பண்ணுவேன். அந்த செகன் டைமிஸ்பண்ணிடக் கூடாதுன்னு நினைப்பேன். அவருடைய நிறைய பாடல்களில் இந்த மாதிரிச்சிரிப்பு இருக்கும். ஆனால் எனக்கு இந்தப்பாட்டு ஸ்பெஷல்!"

### ரோகிணி

"எனக்கு ஒருபாட்டு இருக்குங்க. அந்தப் பாட்டு படத்துல இடம்பெறலை. பிக்சரைஸ் பண்ணாத பாட்டுங்கிறதாலேயே எனக்கு அந்தப்பாட்டு ரொம்பப் பிடிச்சுப்போச்சு. 'அன்பேசிவம்' படத்துக் காகப் பாடின'மௌனமே பார்வையாய்'ங்கிற பாட்டு கேக்கறப்ப பாலுசார் மட்டும் தான் நம்ம ஞாபகத்துக்கு வருவார்."

### சொர்ணமால்யா

"நினைவெல்லாம் நித்யா'வுல'ரோஜாவைத் தாலாட்டும் தென்றல்' பாட்டை அப்பா டேப் ரெக்கார்டர்ல அடிக்கடி கேட்பார். அப்ப எனக்கு சினிமாப்பாட்டை விரும்பிக்கேட்கிற வயசு இல்லைன்னாலும், இந்தப்பாட்டு என்னைக் கவனிக்க வைத்தது. ரொம்ப உருக்கமா பாடியிருப்பார். 'பந்து வராளி' ராகம். அடிக்கடி குடும்பத்துடன் கொடைக்கானல் போறவங்க நாங்க. அப்பெல்லாம் அந்த மலைச்சரிவுகளில் இந்தப்பாட்டை ஒலிக்க விட்டுக்கேட்போம். செமஃபீலிங்கா இருக்கும்."

### டிடி

"எஸ்.பி.பி.சேர் பாட்டில ஒன்று இரண்டு கேட்டீங்கள் என்றால் எதைச் சொல்லுறது? நிறையபாட்டு இருக்கு. உட்கார்ந்து லிஸ்ட் போட்டா, எதை முதலில் கேட்கிறது, எதைப் பிறகு கேட்கிறது என்றே முடிவு பண்ண முடியாது. தூங்குகிற போது, உற்சாகமா இருக்கிற போது, மனசு இலேசாக கவலையில இருந்தா கேட்கன்னு எல்லாத்துக்கும் பாடியிருக்கிறாரே! ஸ்பெஷலா சொல்லித் தான் ஆக வேண்டும் என்றால் ரஜினிசாருக்கு அவர் பாடின ஓப்பனிங் சோங்ஸ் அடிக்கடி கேட்பேன்."

### யுகபாரதி

'சிம்லா ஸ்பெஷல்' படத்துல வர்ற 'உனக்கென்ன மேலே நின்றாய் ஓநந்தலாலா' பாட்டு ரொம்பவே பிடிக்கும். காரணம், இந்தப் பாட்டுல 'ழ' அதிக இடத்தில வரும். அந்த உச்சரிப்பு ரொம்பவே நல்லா இருக்கும்!"

### மனுஷ்யபுத்திரன்

'சிப்பிக்குள் முத்து' படத்துல வகிற 'துள்ளித்துள்ளி நீ பாடம்மா' பாட்டை என் பதின்ம வயதில கேட்டேன். அந்தப் பருவத்துல ஒருவிதமன அழுத்தத்தில இருந்தேன்.

அதனால பின்னிரவு தொடங்கி மறுநாள் அதிகாலை வரை டேப்ரிக்கார்டர்ல திரும்பத்திரும்ப இந்த ஒரு பாட்டையே கேட்டுட்டு இரு ந்திருக்கேன். 'கண்ணீர்விட்டால் மனம் தாங்காதம்மா'ன்னு அவர் பாடுறபோது, யாரோ ஒருத்தர் வந்து என்னை அரவணைச்சுக்கொள்கிற மாதிரி ஒரு உணர்வு வந்திடும்.

அவர் குரல்ல இன்னொரு பாட்டையும் என்னால் மறக்க முடியாது. எம்.எஸ்.வி. இசையில அவர் பாடின 'வான்நிலா... நிலா அல்ல' பாட்டு என் வாழ்க்கையில ரொம்ப முக்கியமான ஒருகால கட்டத்தில ஒரு ரோல்ப்ளே பண்ணின ஒரு பெண் அறிமுகப்படுத்தி வச்ச பாட்டு இது!"

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : தங்கமலை இரகசியம்
இயற்றியவா் : கல்யாணசுந்தரம்
இசை : இளையராஜா
பாடியவா்: பி.சுசீலா



அமுதை பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ
அருகில் வராததேனோ?
அருகில் வராததேனோ?

அமுதை பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ
அருகில் வராததேனோ?

அமுதை பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ
அருகில் வராததேனோ?

இதயம் மேவிய காதலினாலே
ஏங்கிடும் அல்லியை பாராய்
ஆ ஆ.....
இதயம் மேவிய காதலினாலே
ஏங்கிடும் அல்லியை பாராய்

புது மலர் வீணே வாடிவிடாமல்
புது மலர் வீணே வாடிவிடாமல்
புன்னகை வீசி ஆறுதல் கூற
அருகில் வராததேனோ?
அருகில் வராததேனோ?

அமுதை பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ
அருகில் வராததேனோ?

மனதில் ஆசையை ஊட்டிய பெண்ணே
மறந்தே ஓடிடலாமா?
ஆ ஆ.......
மனதில் ஆசையை ஊட்டிய பெண்ணே
மறந்தே ஓடிடலாமா?

இனிமை நினைவும் இளமை வளமும்
இனிமை நினைவும் இளமை வளமும்
கனவாய் கதையாய் முடியும் முன்னே
அருகில் வராததேனோ
அருகில் வராததேனோ

அமுதை பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ
அருகில் வராதாதேனோ?

அமுதை பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ
அருகில் வராதாதேனோ?

அமுதை பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ
அருகில் வராதாதேனோ?

# O.T.T யில் வெளியாகிறது க/பெ. ரணசிங்கம்

கொரோனா அச்சத்தால் திரையரங்குகள் இதுவரை தமிழ்நாட்டில் திறக்கவில்லை. அதன் காரணமாகவே பல பெரிய படங்களே OTT தளத்தில் வெளிவருகிறது. அதில் தற்போது விரு மாண்டி என்பவரின் இயக்கத்தில் ஐஸ் வர்யா ராஜேஷ் மற்றும் விஜய் சேதுபதி நடித்துள்ள க.பெ. ரணசிங்கம் படமும் OTTயில் வெளிவந்துள்ளது.

ஐஸ்வர்யா ராஜேஷ் மற்றும் விஜய் சேதுபதி ஆகியோர் இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். நான்காவது முறையாக ரம்மி, தர்மதுரை, மற்றும் பண்ணையாரும் பத்மினியும் போன்ற படங்களுக்கு பிறகு அவர்கள் இப்படத்தில் இணைந்து நடித்துள்ளார்கள். விருமாண்டி இயக்கத்தில், கிப்ரான் இசையில், க.பெ. ரணசிங்கம் படத்தை கே.ஜே.ஆர் ஸ்டுடியோஸ் தயாரித்துள்ளது.பெரும் எதிர்பார்ப்பில் ழுவுவுயில் வெளியான க.பெ. ரணசிங்கம் ரசிகர்களை திருப்திப்படுத்தியதா? வாருங்கள் பார்ப்போம்.

**கதைக்களம் :**

தமிழ்நாட்டில் உள்ள ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தனது கிராமத்திற்கு எந்த ஒரு பிரச்சினை என்றாலும் தானாக முன் வந்து நின்று நீதிக்கு குரல் கொடுக்கிறார் விஜய் சேதுபதி. விறுவிறுப்பான கதைக்களமும் ஐஸ்வர்யா ராஜேசுடன் விஜய் சேதுபதிக்கு ஏற்படும் காதலும் மிகவும் எதார்த்தமாக எந்த ஒரு கமெர்ஷியல் விடயங்களும் சேர்க்காத ஒன்றாக இருக்கிறது. மேலும் தமிழ் நாட்டில் இருந்து டுபாய்க்கு வேலைக்காக செல்லும் இளைஞர்கள் அங்கு என்னென்ன பிரச்சினைகளை சந்திக்கிறார்கள் என்பதை மையக்கருவாக கொண்டிருக்கிறது க.பெ.ரணசிங்கம். விஜய் சேதுபதி டுபாய்க்கு சென்று பல விதமான பிரச்சினைகளை சந்திக்கிறார். டுபாயில் பிரச்சினையில் மாட்டிக்கொள்ளும் தனது கணவனுக்காக போராடும் மனைவியின் கதை தான் க.பெ. ரணசிங்கம்.




**படத்தை பற்றிய அலசல் :**

OTTயில் வெளிவந்தாலும் ரசிகர் கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. மேலும் விஜய் சேதுபதி நடிப்பு படத்தின் வெற்றிக்கு மிக முக்கிய காரணம்.தனது கணவருக்காக. பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கும் நடிகை ஐஸ்வர்யா ராஜேஷின் துணிச்சல் பாராட்டக்குரியது. அதே போல் ஒவ்வொரு அரசு அலுவலகங்களிலும் ஐஸ்வர்யா ராஜேஷ் படும் அவதி, தமிழக மக்களின் வாழ்வாதார பிரதிபலிப்பாக தெரிகிறது. ஐஸ்வர்யா ராஜேஷ்'க்கு இப்படத்தில் உதவும் கதாபாத்திரங்களாக ஜி.வி. பவானி, ரங்கராஜ் பாண்டே, அருண்ராஜா காமராஜ் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். ஒரு சோலோ கதாநாயகியாக இப்படத்தை தாங்கி, வெற்றிக்கு எடுத்து சென்றுள்ளார் நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ். OTT யில் வெளிவரும் படங்களில் க.பெ. ரணசிங்கம் பெரும் வெற்றியை கண்டுள்ளது.

**க்ளாப்ஸ் :**

ஐஸ்வர்யா ராஜேஷ் நடித்த வலுவான பெண் கதாபாத்திரம் படத்தின் பிளஸ் பொயிண்ட். ஜிப்ரானின் பாடல்கள் படத்திற்கு கூடுதல் பலம் சேர்த்துள்ளது.

இயக்குநரின் சமூக அக்கறை மற்றும் தரமான திரைக்கதை.இ.கே. ஏகாம்பரத்தின் ஒளிப்பதிவு நம்மை படத்தோடு ஒன்றிணைக்கிறது.

**பல்ப்ஸ் :**

படத்தின் ரன்னிங் டைம் குறைத்திருக்கலாம்.மொத்தத்தில் இந்த ஆண்டின் மிக சிறந்த படங்களில் ஒன்றாகும் கணவர் பெயர் ரணசிங்கம்.

# போருக்கு போவது போல் இருக்கிறது - மீனா



80களில் முன்னணி நடிகையாக வலம் வந்த மீனா, போருக்கு போற மாதிரி இருக்கு என்று சமூக வலைத்தளத்தில் பதிவு செய்திருக்கிறார்.

ஜீத்து ஜோசப் இயக்கத்தில் மோகன்லால் நடிப்பில் உருவாகி வரும் படம் "திருஷ்யம் 2". முதல் பாகத்தில் நாயகியாக நடித்த மீனாவே இதிலும் நடிக்கிறார். படப்பிடிப்புக்காக சென்னையிலிருந்து கேரளாவுக்கு விமானத்தில் பயணித்துள்ளார். விமானப் பயணத்தின் போது கொரோனா அச்சுறுத்தலிலிருந்து தற்காத்துக் கொள்ள பிபிஇ உடைகள் அணிந்துள்ளார் மீனா.

அந்தப் புகைப்படங்களைத் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்து மீனா கூறியிருப்பதாவது: "நான் விண்வெளிக்குச் செல்வதுபோல இருந்தாலும், நான் போருக்குச் செல்வதைப் போல உணர்கிறேன். 2 மாதங்களுக்குப் பிறகு பயணம் செய்கிறேன். விமான நிலையம் மிகவும் அமைதியாகவும், ஆள் அரவமற்றதாகவும் இருப்பதைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கிறது.

பலரும் என்னைப் போல உடையணியாமல் இருந்தது இன்னும் ஆச்சரியமாக இருந்தது. இது மிகவும் வசதியற்ற ஆடை என்று சொல்வேன். குளிர்ந்த வானிலையும், ஏசியும் இருந்தபோதும் மிகவும் வெப்பமாகவும், இறுக்கமாகவும், வியர்வையை ஏற்படுத்தக் கூடியதாகவும் இந்த ஆடை உள்ளது. முகத்தைக் கூட துடைக்க முடியவில்லை. குறிப்பாகக் கையுறைகள். இரவு பகலாக இந்த பிபிஇ கவச உடையுடன் இருந்த சுகாதாரப் பணியாளர்களுக்குத் தலைவணங்குகிறேன். இத்தகைய சிரமத்திலும்



அவர்கள் நமது வலியைப் புரிந்துகொண்டு எப்போதும் நம்மை எப்போதும் பாதுகாக்கிறார்கள். அவர்கள் மீது நான் வைத்திருக்கும் மதிப்பு அதிகமாகி விட்டது. மனித இனத்துக்கும் நீங்கள் செய்து வரும் தன்னலமற்ற சேவைக்கு நன்றி". இவ்வாறு மீனா தெரிவித்துள்ளார்.

# நயன்தாரா எடுத்த அதிரடி முடிவு



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வரும் நயன்தாரா திருமணத்திற்காக அதிரடி முடிவு ஒன்றை எடுத்துள்ளார். தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையான நயன்தாரா தமிழ், தெலுங்கு மொழிகளில் முன்னணி நடிகர்களுடன் நடித்துவிட்டார். அவர் தற்போது கதாநாயகிக்கு முக்கியத்துவம் தரும் படங்களில் நடித்துவருகிறார். அது தவிர ரஜினியுடன் அண்ணாத்த படத்திலும் நடித்து வருகிறார். நயன்தாரா டைரக்டர் விக்னேஷ் சிவனை காதலிப்பதும் இருவரும் திருமணத்தை தள்ளிப் போட்டுவிட்டு ஒன்றாக வசிக்கிறார்கள் என்றும் கூறுகிறார்கள். இந்நிலையில் திருமணத்தைப் பொறுத்தவரை நயன்தாரா புது முடிவு எடுத்துள்ளார். தேசிய விருது பெற்ற பின்னர் தான் திருமணம் என முடிவு எடுத்திருப்பதாக அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவிக்கின்றனர். பல்வேறு பாராட்டுகளும் விருதுகளும் குவிந்தாலும் அவருக்கு இன் னும் தேசிய விருது மட்டும் கிடைக்கவில்லை.

# கவுண்டமணி வழியில் தான் செல்கிறேன்

தமிழ் சினிமாவில் முன்னணி காமெடியனாக இருக்கும் யோகிபாபு, இப்போவரைக்கும் அவர் சொன்ன அட்வைஸைத்தான் கடைப்பிடித்து வருகிறேன் என்று கூறியிருக்கிறார்.தமிழ் சினிமாவில் முன்னணி காமெடியனாக இருக்கும் யோகிபாபு மூத்த காமெடி நடிகர்கள் பற்றி கூறியிருப்பதாவது, எல்லாரையும் சந்தித்து பேசியிருக்கிறேன். அவர்களும் நிறைய விடயங்களை என்னிடம் சொல்லியிருக்காங்க. குறிப்பா, கவுண்டமணி சேர் சொன்ன ஒரு அறிவுரையைத்தான் இப்போவரைக்கும் கடைப்பிடித்து வருகிறேன். முதல்முறை அவரை சந்தித்தபோது, "தம்பி யோகி பாபு, நீ எதை நோக்கி ஓடுறியோ அதை நோக்கி ஓடிட்டே இரு. எவனாவது கூப்பிடுறான்னு திரும்பிப் பார்த்தா, உன்னைத் திண்ணையில உட்கார வெச்சுடுவாங்க. உன் இலக்கு மட்டும் தான் உன் கண்ணுக்குக்



தெரியணும்"னு சொன்னார். இப்போ வரைக்கும் அப்பப்போ சார்கிட்ட பேசுவேன். அதே மாதிரி, வடிவேலு அண்ணனும் "கோலமாவு கோகிலா" படம் பார்த்துட்டு என்னை ஆபீசுக்கு வரச்சொன்னார். அவர்கிட்ட ரொம்ப நேரம் பேசிட்டி ருந்தேன். விவேக் சாரும் "கோலமாவு கோகிலா" படம் பார்த்ததுக்கு அப்புறம் கூப்பிட்டுப் பேசினார். அவரோடு "பிகில்", "அரண்மனை - 3" படத்துல நடிச்சிருக்கேன். சந்தானமும் சூரியும் ரொம்ப நெருங்கிய நண்பர்கள்'. இவ்வாறு அவர் கூறியுள் ளார்.

# சனத் ஜெயசூர்யா

## எதிரணியை அடித்து நொருக்கிய இரும்பு மனிதன்


(கடந்தவார தொடர்ச்சி)

டொஸ் வென்ற பாகிஸ்தான் கப்டன் அமீர் சோஹைல் இலங்கையிடம் பட்டிங்கைக் கொடுத்தார். வழக்கம்போல, ஜெயசூர்யாவும் கலுவிதாரணவும் பாகிஸ்தான் பௌலிங்கை விரட்டி விரட்டி அடிக்க ஆரம்பித்தார்கள். 10 பந்துகளில் 24 ஓட்டங்கள் அடித்து கலுவிதாரண அவுட். ஆனாலும், ஜெயசூர்யாவைத் தடுக்கமுடியவில்லை. இதனால் அமீர் சோஹைல் 8 ஆவது ஓவரிலேயே ஓஃப் ஸ்பின்னரான சக்லைன் முஷ்தாக்கை இறக்கினார். இது பெரிதாகப் பயனளிக்காதபோது கப்டனான் தானே களத்தில் இறங்குவது என முடிவெடுத்தார். ஆனால், அவர் வீசிய முதல் ஓவரில் மட்டும் 2 சிக்ஸர்களை ஜெயசூர்யா அடித்தும் சோஹைல் அடங்கவில்லை. மீண்டும் பௌலிங் போடவந்தார்.

ஆட்டத்தின் 14 ஆவது ஓவர் அது. முதல் பந்தில் நோ போலில் பவுண்டரி அடிக்க, அடுத்த 4 பந்துகளையும் சிக்ஸராக்கினார் ஜெயசூர்யா. அந்த ஓவரில் மட்டும் 30 ஓட்டங்கள். அதுவரை கிரிக்கெட் ரசிகர்கள் காணாத காட்சிகள் அரங்கேறிக்கொண்டிருந்தன. 16 ஆவது ஓவரிலேயே ஜெயசூர்யா சதம் அடித்துவிட்டார். 48 பந்துகளில் சதம். மிகக்குறைந்த பந்துகளில் அடிக்கப்பட்ட முதல் சதம். அதுவரை நியூசிலாந்துக்கு எதிராக 62 பந்துகளில் அசாருதின் அடித்த சதம்தான் மிகக்குறைந்த பந்துகளில் அடிக்கப்பட்டது. 11 பவுண்டரி, 11 சிக்ஸர் என 65 பந்துகளில் 134 ஓட்டங்கள் அடித்து அன்று மட்டுமே பல சாதனைகளை உடைத்தார் ஜெயசூர்யா. இந்த இன்னிங்ஸோடு ஜெயசூர்யாவின் வெறி அடங்கவில்லை. மீண்டும் பாகிஸ்தானுக்கு எதிராக இறுதிப்போட்டியில் விளையாடியது இலங்கை. பாகிஸ்தான் 215 ஓட்டங்கள் அடிக்க, இந்த டார்கெட்டை 20 ஓவர்களிலேயே முடித்துவிடுவாரோ என எண்ணவைத்தது ஜெயசூர்யாவின் ஆட்டம். மீண்டும் உலக சாதனை. இந்த முறை 17 பந்துகளில் 50 ஓட்டங்கள். ஆனால், 28 பந்துகளில் ஜெயசூர்யா 76 ஓட்டங்கள் அடித்தும் இந்தப் போட்டியில் இலங்கை தோற்றது. இந்தத் தொடருக்குப்பிறகுதான் ஜெயசூர்யா பட்டில் ஸ்பிரிங் வைத்திருக்கிறார் என்கிற வதந்தி இந்தியா முழுக்கப் பரவத்தொடங்கியது.

இந்தத் தொடர் முடிந்த சில மாதங்கள் கழித்து இலங்கையில் மீண்டும் சிங்கர் கோப்பை நடந்தது. இதில் இந்தியா, அவுஸ்திரேலியா, சிம்பாவே ஆகிய நாடுகள் இலங்கையோடு மோதின. இந்தியாவுக்கு முதல் மட்ச்சே இலங்கையோடு. சச்சின் டெண்டுல்கர் சென்சுரி அடித்தும் 50 ஓவர்களில் 226 ஓட்டங்கள்தான் அடித்தது. இந்த ஸ்கோரை இந்தியா டிபெண்ட் செய்யும் என்று எந்த நம்பிக்கையும் இல்லாமல்தான் 90ஸ் ரசிகன் ரி.வி. முன்னால் உட்கார்ந்திருப்பான். ஆனால், அவன் பயம் எல்லாம் ஜெயசூர்யா இன்றும் ஏதாவது உலக சாதனை படைத்துவிடக்கூடாது என்பதுதான். ஜெயசூர்யா புதிதாக எந்தச் சாதனையும் படைக்கவில்லையே தவிர வேதனைகள் தொடர்ந்தன. இந்தியாவின் ஸ்கோரை ஓப்பனிங் பட்ஸ்மன்களான ஜெயசூர்யாவும் கலுவிதாரணவும் மட்டுமே முடித்துவிடுவார்களோ என்கிற அளவுக்கு ஆட்டம் போனது. டெண்டுல்கர் வந்துதான் முதல் விக்கெட்டை எடுக்கவேண்டியிருந்தது. அப்போது இலங்கையின் ஸ்கோர் 129. ஒரே விக்கெட்டை மட்டுமே இழந்து 45 ஆவது ஓவரில் மட்ச்சை முடித்தது இலங்கை.

கப்டன் சச்சினை துன்புறுத்துவதற்காகவே நடந்த தொடர் 1997 இன்டிபென்டன்ஸ் கோப்பை. இந்திய சுதந்திரத்தின் 50 ஆண்டுகளைக் கொண்டாட நடந்த இந்தத் தொடரில்தான் ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் துயரத்தைப் பரிசளித்தனர் ஜெயசூர்யாவும் அன்வரும். சச்சினின் சொந்த மண்ணான மும்பை வான்கடே மைதானத்தில் நடந்தது அந்த பகலிரவுப் போட்டி. கங்குலி, சச்சின் என இருவருமே முதல் இரண்டு ஓவர்களிலேயே வெளியேறிவிட டிராவிட், அஜய் ஜடேஜா, ராபின் சிங் ஆகியோரின் அரைச்சதத்தால் எப்போதும்போல இலங்கைக்கு 226 ஓட்டங்கள் டார்கெட்டைக் கொடுத்தது இந்தியா. வெங்கடேஷ் பிரசாத்தின் முதல் ஓவரில் 8 ஓட்டங்கள்தான் அடித்தார் ஜெயசூர்யா. இந்தியர்கள் மகிழ்ச்சி. இரண்டாவது ஓவரில் கலுவிதாரண டக் அவுட். இந்தியர்கள் மிக்க மகிழ்ச்சி. ஆனால், இரண்டாவது ஓவரோடு மகிழ்ச்சிகள் முடிந்தன.




காலத்தின் பதிவு

ஒருபக்கம் இலங்கையின் விக்கெட்டுகள் விழுந்துகொண்டேயிருந்தாலும் இன்னொருபக்கம் ஒரு ஓவருக்கு ஒன்றிரண்டு பவுண்டரிகள் என அடித்துக்கொண்டேயிருந்தார் ஜெயசூர்யா. பந்தைப்போடுவதற்கு முன்பாக டப்பு, டப்பு, டப்பு என ஜெயசூர்யா பட்டால் பிட்ச்சை தட்டிய சத்தமே ரசிகர்களுக்கு மாரடைப்பை வரவைத்தது. சரியான லைன் அண்ட் லென்த்தில், சரியான பவுன்சில் பந்துவீசினால் எந்தப் பிரச்சினையும் இல்லை. அடிக்காமல் அடக்கிவாசிப்பார். ஆனால், ஓஃப் சைடில் பந்து விலகி வந்தாலோ, லெக் சைடில் கொஞ்சம் தள்ளிப்போட்டோலோ, யார்க்கர் போடுகிறேன் என புல் லென்த்தில் போட்டாலோ பந்து பவுண்டரி லைனுக்குப் பறந்துவிடும். அன்று அவர் அதிரடி ஆட்டம் எல்லாம் ஆடவில்லை. மிகச்சரியாக ஒவ்வொரு ஓவரில் வீசப்படும் லூஸ் போலுக்காக காத்திருந்து, காத்திருந்து அடித்தார். 85 பந்துகளில் சென்சுரி அடித்தவர் 120 பந்துகளில் 151 ஓட்டங்கள் அடித்து நொட் அவுட் பட்ஸ்மனாக நின்று 42 ஆவது ஓவரிலேயே மட்ச்சை முடித்துவிட்டார்.

மும்பையோடு சச்சினையும் இந்தியாவையும் விட்டுவைக்கவில்லை ஜெயசூர்யா. இன்டிபென்டன்ஸ் கோப்பை முடிந்ததுமே இலங்கையில் 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடப்போனது இந்திய அணி. சச்சினின் கரியரில் இன்பம், துன்பம் என இரண்டுமே அங்கே நடந்தது. கொழும்பில் முதல் டெஸ்ட். சித்து 111 ஓட்டங்கள், சச்சின் டெண்டுல்கர் 143 ஓட்டங்கள், அசாருதினும் சதம் என மூன்று பேர் சதம் அடிக்க இந்தியாவின் ஸ்கோர் 537. இரண்டாவது நாளின் மாலையில், இலங்கையை வீழ்த்திவீசிவிடும் முனைப்புடன் டிக்ளேர் செய்தார் சச்சின். ஜெயசூர்யாவும் அத்தப்பத்துவும் ஓப்பனிங் பட்ஸ்மன்கள். இந்திய ஸ்பின்னர் நிகில் குல்கர்னிக்கு அதுதான் முதல் போட்டி. முதல் சர்வதேசப் போட்டியின் முதல் பந்திலேயே அத்தப்பத்துவின் விக்கெட்டை எடுத்து அசத்தினார் குல்கர்னி. ஆனால், அதன்பிறகு நடந்தது குல்கர்னிக்கு மட்டுமல்ல, கும்ப்ளே, சவுஹான், குருவில்லா, பிரசாத் என யாருக்குமே வாழ்க்கைக்கும் மறக்காது. அத்தப்பத்து 26 ஓட்டங்களுக்கு அவுட் ஆகிவிட ரோஷன் மஹானமா ஜெயசூர்யாவோடு சேர்ந்தார். அந்த கணத்தில் இருந்தே இந்திய அணியின் கெட்ட நேரம் தொடங்கியது.

இந்த இருவரின் விக்கெட்டையும் வீழ்த்த எந்த பிளானும் இந்திய கப்டன் சச்சினிடமும் இல்லை, பௌலர்களிடமும் இல்லை. மூன்றாவது நாள், நான்காவது நாள் என இரண்டு நாட்கள் முழுக்கவும் விக்கெட்டே விழவில்லை. ஜெயசூர்யா ட்ரிப்பிள் சென்சுரி அடித்தார். ரோஷன் மஹானாமா டபுள் சென்சுரி அடித்தார். இந்தியாவுக்கு எதிராக ஒரு பட்ஸ்மேன் அடித்த அதிகபட்ச ஸ்கோராக 340 ஓட்டங்களைப் பதிவு செய்தார் ஜெயசூர்யா. இன்றுவரை இந்தியாவுக்கு எதிராக அடிக்கப்பட்ட அதிகபட்ச தனிநபர் ஓட்டங்கள் இதுதான். மஹானமா 225 ஓட்டங்கள் அடித்தார். இரண்டாவது விக்கெட்டுக்கு இவர்கள் இருவரும் சேர்ந்து 576 ஓட்டங்கள் அடித்தார். இந்திய பௌலர்களைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது. ஜெயசூர்யாவை நினைத்தாலே கதிகலங்க ஆரம்பித்தது.

அடுத்த டெஸ்ட்டிலும் ஜெயசூர்யா இந்திய பௌலர்களை நிம்மதியாகவிடவில்லை. இலங்கை முதல் இன்னிங்ஸில் 332 ஓட்டங்களுக்கு ஓல் அவுட் ஆக, இந்தியாவின் முதல் இன்னிங்ஸில் சச்சின் 139, கங்குலி 147 ஓட்டங்கள் என மொத்தமாக 375 ஓட்டங்கள் அடித்தார்கள். இரண்டாவது இன்னிங்ஸில் மீண்டும் வேட்டையை ஆரம்பித்தார் ஜெயசூர்யா. இந்தமுறை அதிரடி ஆட்டம். வெங்கடேஷ் பிரசாத்தும், அபய் குருவில்லாவும் இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர்கள். ஆனால், இவர்களை எந்த அளவுக்கு ஜெயசூர்யா சீரியஸாக எடுத்துக்கொண்டார் என்பதற்கு அவர் இவர்களின் பந்துகளை ஹெல்மெட் இல்லாமல் எதிர்கொண்டதே சாட்சி. 226 பந்துகளில் 199 ஓட்டங்கள் அடித்து அவுட் ஆனார் ஜெயசூர்யா. டபுள் சென்சுரி ஜஸ்ட் மிஸ். இந்தத் தொடர் முழுக்கவே இலங்கையின் எண்ணம் இந்தியாவை வீழ்த்த வேண்டும் என்பதல்ல. டார்ச்சர் செய்யவேண்டும் என்பதுதான். இரண்டு டெஸ்ட்களிலுமே அவர்கள் வெற்றிக்காக விளையாடவேயில்லை. துன்புறுத்த மட்டுமே செய்தார்கள்.

ஒருநாள் போட்டிகளில் மொத்தமாக 28 சதங்கள் அடித்திருக்கிறார் ஜெயசூர்யா. அதில் 7 சதங்கள் இந்தியாவுக்கு எதிராக அடிக்கப்பட்டவைதான். கிட்டத்தட்ட 40 வயதை நிறைவு செய்யும் நேரத்திலும் இந்தியாவுக்கு எதிராக சதம் அடித்து மிக அதிக வயதில் சதம் அடித்தவர் என்கிற சாதனையும் படைத்தார். பௌலிங்கிலும் பல முக்கியமான விக்கெட்டுகள் எடுத்திருக்கிறார் ஜெயசூர்யா. இவரது பௌலிங்கில் ஸ்பின் இருக்காது. ஆனால், வேக வேரியேஷன்கள் மூலம் விக்கெட்டுகளை வீழ்த்திவிடுவார்.

இந்தியாவுக்கு எதிராக மட்டுமல்லாமல் உலகின் அத்தனை கிரிக்கெட் அணிகளுக்கு எதிராகவும் அதிரடி இன்னிங்ஸ்கள் ஆடியிருக்கிறார் ஜெயசூர்யா. 2006 இல் இங்கிலாந்தின் லீட்ஸில் நடந்த ஒருநாள் போட்டி இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமானப் போட்டி. இங்கிலாந்து 50 ஓவர்களில் 321 ஓட்டங்கள் அடிக்க, சேஸ் செய்ய ஆரம்பித்தது இலங்கை. உபுல் தரங்கவோடு சேர்ந்து ஆடினார் ஜெயசூர்யா. ஓப்பனிங் பார்ட்னர்ஷிப் மட்டும் 286 ஓட்டங்கள். 1998 இல் இலங்கைக்கு எதிராக சச்சினும் - கங்குலியும் இணைந்து ஓப்பனிங் விக்கெட்டுக்கு 252 ஓட்டங்கள் அடித்திருந்ததுதான். அதுவரையிலான சாதனை. ஆனால், இதை ஜெயசூர்யா- தரங்க ஜோடி முறியடித்தது. தரங்க 102 பந்துகளில் 109 ஓட்டங்கள் அடிக்க, ஜெயசூர்யா 99 பந்துகளில் 152 ஓட்டங்கள் அடித்தார். 26 பந்துகளில் 50 ஓட்டங்கள் அடித்தவர் 72 பந்துகளில் 100 ஓட்டங்கள் அடித்தார். அடுத்த 50 ஓட்டங்களை வெறும் 23 பந்துகளில் ஜெயசூர்யா அடிக்க, 321 ஓட்டங்கள் டார்கெட்டை 38 ஆவது ஓவரிலேயே முடித்துவிட்டது இலங்கை.

டெஸ்ட், ஒருநாள் போட்டிகளில் மட்டுமல்லாது ஐ.பி.எல்.தொடரிலும் அதகளம் செய்திருக்கிறார் ஜெயசூர்யா. முதல் ஐ.பி.எல்.தொடரான 2008 இல் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிராக சென்சுரி அடித்திருக்கிறார். சென்னையின் ஸ்கோரரான 156 ஓட்டங்களை வெறும் 83 பந்துகளில் அடித்து முடித்தது மும்பை. அடித்தவர் ஜெயசூர்யா. 25 பந்துகளில் 50 ஓட்டங்கள் அடித்தவர், 45 பந்துகளில் 100 ஓட்டங்கள் அடித்தார். ஜெயசூர்யா 114 ஓட்டங்களில் நொட் அவுட் பட்ஸ்மனாக இருந்து மும்பையை வெற்றிபெற வைத்தார். வாழ்க்கையில் முதல்முறையாக ஜெயசூர்யாவின் இன்னிங்ஸுக்கு அன்று கைதட்டினார் சச்சின். அன்று மட்டும் ஜெயசூர்யா அடித்தது 11 சிக்ஸர்கள். ஜெயசூர்யாவின் இன்னிங்ஸை வெறுமனே வேடிக்கைதான் பார்த்துக்கொண்டிருந்தார் டோனி.

(முற்றும்)

# பரீட்சையில் சித்தி வாழ்க்கையில் தோல்வி

## யார் குற்றம்?

2020.09.21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை எட்டுமணியிருக்கும். யாழ்.தேவி கடுகதி தொடருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வேளை கிளிநொச்சியில் 21 வயது நிரம்பிய யோகேந்திரன் அஜந்தன் அதில் பாய்ந்து தன்னுயிரை மாய்த்து இறப்புப் பதிவேட்டில் தன் வரவையும் இணைத்துக்கொண்டான். இந்தத் துயரச் செய்திக்குப் பின்னால் பல காரணங்கள் இருக்கத்தான் செய்யும். வாழ வேண்டிய வயதுப் பருவத்தில் இப்படியொரு விபரீத முடிவுக்குள் சிக்கிக் கொண்டான்.

இந்த இளைஞனுக்குள் எத்தனையோ ஆசைகளும் கனவுகளும் சாதனைகளும் ஒளிந்திருக்கும். "அவன் ஏன் இந்த முடிவுக்குப் போனான்" என்று பலமுகங்கள் தம்மிடையே பேசிக்கொண்டன. அவனுக்குள் இருந்த தற்கொலை வெறியை இந்தச் சமூகம் ஏன் கண்டு கொள்ளவில்லை. அவனது தற்கொலை முயற்சியை முறியடிக்க ஏன் நண்பர்கள் துணியவில்லை என்று ஆதங்கப்பட வேண்டியுள்ளது.

1999 ஆம் ஆண்டு தை மாதம் 19 ஆம் திகதி முழங்காவிலில் பிறந்த இவன் மலையாளபுரம் வடக்கு, திருவள்ளுவர் பாடசாலை வீதி, கிளிநொச்சியில் ஆறு வயதிலிருந்தே தந்தையின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தான். அஜந்தன் வீட்டில் இரண்டாவது பிள்ளை. இவனுக்கு இரண்டு சகோதரர்கள். மூத்தது அக்கா, உமையாள்புரத்தில் வசிக்கிறார். மூன்றாவது தம்பி ஒருவன். வீட்டில் தந்தையோடும் சகோதரனோடும் அன்பாகப் பழ குவதிலும் அவர்களில் அக்கறையுடையவனாவும் இருந்து வந்தான்.



தந்தையார் இலட்சுமணன் யோகேந்திரன். விறகு வெட்டும் தொழில் செய்து வருகிறார். மிகவும் கஷ்டப்பட்டு மூன்று பிள்ளைகளையும் வளர்த்து வந்தார். மூத்த பெண் பிள்ளையை ஒருவாறாக கரைசேர்த்தார். ஒரு சைக்கிள் விறகுக் கட்டை ஐந்நூறு அறுநூறு ரூபாய்க்கு விற்பாராம். சிலவேளைகளில் இரண்டு சைக்கிள் விறகுக் கட்டும் விற்பாராம். காட்டுக்குச் சென்று விறகு எடுத்து வந்து வீட்டில் கொத்தி துண்டுபோட்டு சைக்கிளில் அடுக்கி விற்கப்புறப்படுவார். ஐம்பது வயது நிரம்பிய இ.யோகேந்திரன் பிள்ளைகளைப் படிப்பிப்பதில் கூடிய கவனம் செலுத்தினார். சிறுவயது முதல் ஆடம்பரச் செலவுகளை விரும்பாதவராகவும் இருந்தார். அதனால் தான் பரீட்சைக்கட்டணம், பொது நிகழ்வுகளுக்கான கட்டணங்களைத் தவிர அநாவசியச் செலவுகளுக்காகப் பிள்ளைகளுக்கு பணம் கொடுத்து அனுப்பமாட்டாராம்.

அஜந்தன் படிப்பில் மிகமிகக் கெட்டிக்காரனாக இருந்தான். கிளி/பாரதி வித்தியாலயத்தில் கல்வி கற்று 2017 ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவில் கல்விப் பொதுத் தராதரபத்திர உயர்தரப் பரீட்சையில் தோற்றி 3A சித்தி பெற்றான். பாடசாலையில் படிப்பதை அன்றன்றாடம் வீட்டில் படிப்பதோடு அதிகம் சுயகற்றலில் ஈடுபட்டான். அதிகாலை எழுந்து படிப்பது, இரவு 11 மணிவரை படிப்பதை உயர்தரம் வரை வழக்கமாகக் கொண்டிருந்தான். தன்னுடைய இலட்சியம் வங்கி முகாமையாளராக வரவேண்டும் என்பதில் தீவிர கவனம் செலுத்தி வந்தான். நாள டைவில் நண்பர்களின் வட்டாரம் அவனுக்கு அதிகரிக்க அதிகரிக்க தனது இலட்சியத்திலிருந்து மெல்ல விலகலானான். மேசன் வேலைக்குச் சிறிதுகாலம் சென்றான். அதில் பணவரவைக் கண்டான். நண்பர்களுடன் சேர்ந்து மதுப்பழக்கத்திற்கு ஆளானான். பல்கலைக்கழகத்திற்கு புகுமுக மாணவனாகச் சென்று கற்பதில் ஆர்வத்தை நீக்கினான். பல்கலைக் கழக பகிடிவதைகள் இருக்கும் பொருளாதாரம் தன் கல்விக்கு கைகொடுக்காது, பல்கலைக்கழக விதிமுறைகளுக்கு ஒழுகி நடக்க என்னால் முடியுமோ? என்றெல்லாம் எண்ணினானாம். தனக்கென்று ஒரு சாரணியர் பதிவேட்டைப் பேணிவந்தான். அதில் சாரண வாக்குறுதியாகக் கீழ்வருவனவற்றை எழுதி வைத்திருந்தான். "என்னால் இயன்றவரை எமது சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் என் கடமையைச் செய்யவும் எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரியவும் சாரணர் விதிகளுக்குப் பணிந்து நடக்கவும் என் கௌரவத்தின் விதிகளுக்குப் பணிந்து நடக்கவும் என் கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்"



யோகேந்திரன் அஜந்தன் நேர்முகத்தேர்வு ஒன்றுக்காக 2020.08.27 அன்று மலையாளபுரம் KN/09 கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தரிடம் வதிவிட குணநலச் சான்றிதழைப் பெற்றுள்ளான். குணநலம் தொடர்பாக நன்று என்று எழுதப்பட்டுள்ளது.

அஜந்தனின் தந்தையாரான யோகேந்திரன் மகனின் மரணம் குறித்து பகிர்ந்தவை, நான் விறகு வெட்டும் தொழிலாளி. காலையில் எழுந்து பிள்ளைகளுக்குச் சாப்பாடு செய்துவிட்டு வேலைக்குப் போவேன். மீண்டும் மதியம் வந்து சமைத்து பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொடுப்பேன். என்ர மகன் அஜந்தன் வங்கி முகாமையாளராக வரவேண்டும் என்றுதான் விரும்பினான். வீட்டில் நேர அட்டவணை தயாரித்துத்தான் ஒவ்வொரு நாளும் படிப்பான். தனது ஆடைகளைத்தானே துவைத்துக் கொள்வான். நண்பர்கள் அவனுக்கு நிறைய இருந்தது. நல்லா நடனம் ஆடுவான்.

ஊரில் அல்லது வெளியில் எங்காவது பூப்பு நீராட்டு விழா, திருமண விழா, பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கு நண்பர்களோடு சேர்ந்து சென்று நடனமாடுவான்.

எனது மகன் வர்த்தகப் பிரிவில் 3A பெற்றவன். அவனுடைய நண்பர்கள் அவனை வழிப்படுத்தியிருக்கலாம். அப்பா கூலித்தொழிலாளி.

நீதான் வீட்டைப் பார்க்க வேண்டும் என்று உண்மையை உணர்த்தி அவனைப் புரிய வைத்திருக்கலாம். நண்பர்களோடு சேருவதற்கு நான் தடைவிதிக்கவில்லை. சரியாகக் கஷ்டப்பட்டுத்தான் எனது மகன் படித்து A/L பாஸ் பண்ணினான்.

அவன் உயிரோடு இருந்திருந்தால் எனக்குப் பலமாக இருந்திருக்கும். ஏற்கனவே வறுமையான சூழல் எங்களுக்கு. தற்போது இன்னும் வறுமை கூடிவிட்டது.

அவ்விடத்தில் நின்றவர்கள் "எங்கடா போறாய் ரயின் அல்லோ வரப்போகுது நில்லடா" என்று மறித்தார்களாம்.

அதனையும் மீறி என்ர பிள்ளை கடுகதி ரெயினிலே பாய்ந்து உயிரை மாய்த்தான். வீட்டில் அன்பாக இருந்த நாங்கள் ஒரு மகனை இழந்து அவன் நடமாடித்திரிந்த 1 1/2 ஏக்கர் வீட்டு வளவும் தனித்துபோய் விட்டது என்று குமுறினார்.

ஒற்றையடிப்பாதையும் ஓங்கி வளர்ந்திருந்த மரங்களும் ஓலையால் வேயப்பட்ட வேலிகளும் மரணப்பதாகைகளும் அறுந்து விழுந்த தோரணங்களும் அஜந்தனின் அவலச்சாவை அறிவித்தன. இனியும் இவ்வாறான துயரச் செய்திகள் குறையும் என்ற நம்பிக்கையுடன் அஜந்தன் வீட்டிலிருந்து விடை பெற்றோம்.

ஜெயம் ஜெகன்

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்


வலம்புரியின் மருத்துவச்சுடர் 224

## உங்கள் மனதில் எழும் சந்தேகங்களுக்கான பதில்கள்

**➤ எனக்கு 45 வயது. மலச்சிக்கல் உள்ளது. இதனால் உடலில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதற்கு சரியான தீர்வு சொல்லுங்கள்.**

மலச்சிக்கல் எனப்படுவது ஒரு வாரத்தில் 3 தடவைகளுக்குக் குறைவாக மலம் கழித்தல் அல்லது மலத்தின் கடினத்தன்மை அல்லது மலம் கழித்தலிலுள்ள கடினத்தன்மை அல்லது பூரணமாக மலம் கழிக்கவில்லை என்ற உணர்வு என வரையறை செய்யலாம்.

பொதுவாக மலச்சிக்கலானது முறையற்ற உணவுப்பழக்கங்கள், நீர் அருந்துதல் போதாமை, ஒழுங்கற்ற முறையில் மலங்கழிக்க செல்லுதல் போன்றவற்றினால் ஏற்படலாம். இவற்றைவிட சில மருத்துவ காரணங்களாலும் மலச்சிக்கல் ஏற்படலாம். ஊதாரணமாக தைரொக்சின் குறைபாடு, வேறு சில மாத்திரைகள் பயன்படுத்துதல் வேறு குடல் சம்பந்தமான நோய்கள் போன்றவையாகும்.



மலச்சிக்கலைக் குணமடையச் செய்யும் சில நார்ச்சத்து உணவு வகைகள்

எனவே நீங்கள் மலச்சிக்கலை தவிர்ப்பதற்கு ஒவ்வொரு நாளும் குறைந்தது 2 லீற்றர் நீராவது அருந்த வேண்டும். உங்கள் உணவில் அதிகளவு நார்ப்பொருள்ள உணவுகளை, பழங்கள், மரக்கறிகளை அதிக அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றை விட நீங்கள் தினமும் குறித்த ஒரே நேரத்தில் மலங்கழிக்கச் செல்ல உங்களை பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்துவர உங்கள் மலச்சிக்கல் நீங்கும். இவற்றைவிட நீங்கள் வேறு ஏதாவது மலச்சிக்கலை ஏற்படுத்தக் கூடிய மாத்திரைகளை பயன்படுத்தினால் அவை பற்றி உங்கள் வைத்தியரிடம் கேட்டு அவற்றை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இவற்றுக்கும் உங்கள் மலச்சிக்கல் குணமடையாதுவிடின் வைத்தியரை நாடி உங்களிற்கு மேற்குறிப்பிட்டது போன்று வேறு ஏதாவது காரணங்கள் உண்டா? என்று அறிந்து அவற்றிற்கு உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் உடலில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது என குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் அவை என்ன என குறிப்பிடப் படவில்லை. உங்களிற்கு மலச்சிக்கலுடன் நிறை அதிகரித்தல், பசியின்மை, குளிரை தாங்க முடியாமை, தோல் உலர்வடைந்து காணப்படல், பகலில் நித்திரை தூக்கம், தலைமுடி உதிர்த்தல் போன்றன காணப்படின் இவை தைரொயிட் குறைபாட்டிற்குரிய அறிகுறிகளாகும். எனவே நீங்கள் வைத்தியரை நாடி அதற்கு உரிய சிகிச்சை பெற்றுக்கொள்வது சிறந்தது.

**➤ எனது வயது 51, ஒன்பது மாதங்களுக்கு முன் RBS செய்தபோது 209mg / dl ஆக இருந்தது. HbA1C டெஸ்ட் 7.7 ஆக இருந்தது. அன்றிலிருந்து சுமார் 6 மாதங்கள் நான் கடுமையான உடற் பயிற்சி செய்து வந்தேன். ஒவ்வொரு கிழமையும் இரத்தப் பரிசோதனை செய்து வந்தேன். FBS சராசரியாக 121 இல் இருந்தது. மீண்டும் HbA1C டெஸ்ட் செய்த போது 6.7 ஆக இருந்தது. எனது தற்போதைய உடல் நிறை 60kg, உயரம் 170cm. எனக்கு உண்மையில் சலரோக நோய் இருக்கிறதா? எனக்கு இது சம்பந்தமான வைத்திய ஆலோசனை தருவீர்களா.**

முதலில் உங்களுடைய நிலை சலரோக நிலையா? அல்லது சலரோகத்திற்கு முந்திய நிலையா? எனப் பார்ப்போம். சலரோகத்திற்கு முந்திய நிலையின் போது சாப்பாட்டிற்கு முன்னராக குருதிக் குளுக்கோசின் அளவு 100mg/dl - 125mg/dl இற்கும் இடையிலும் HbA1C ஆனது 5.7 - 6.4 இற்கும் இடையிலும் இருக்கும் HbA1c ஆனது 6.5 இற்கு மேற்பட்டிருப்பின் அது சலரோக நோய் உள்ளதாக கொள்ளப்படும். உங்களிற்கு சலரோக நோய் உள்ளது. Metformin என்ற மாத்திரை தொடங்க வேண்டும். உங்களுடைய தற்போதைய உடற் திணிவுச் சுட்டியானது 22.49kgm-2 ஆக உள்ளது. ஒருவருடைய உடற்திணிவுச் சுட்டியானது 18.5 -23 எனும் அளவினுள் இருக்கலாம். எனவே உங்களுடைய நிறை சாதாரண அளவிலேயே உள்ளது. எனவே நீங்கள் வேகமான நடை, ஓடுதல், மிதி வண்டி செலுத்துதல், நீந்துதல் போன்ற காற்றுப் பயிற்சியினை நாளொன்றிற்கு 30 நிமிடங்கள் செய்வது சிறந்தது. அத்துடன் உணவுக் கட்டுப்பாட்டினைக் கடைப்பிடிப்பதன் மூலம் உங்களின் ஆரோக்கியத்தைப் பேண முடியும்.



நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் சில உணவு வகைகள்

**➤ எனக்கு வயது 31. எனது இரண்டு விதைகளும் விதைப்பையினுள் இருக்கின்றது. ஆனால் ஒன்று உயரமானதாகவும் மற்றையது பதிவாகவும் உள்ளது. இது ஒரு நோயா? இதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

ஊயர வித்தியாசம் என்பது இயற்கையானது. இது நோயின் அறிகுறி அல்ல. உங்களுடைய விதைப்பையில் ஒரு விதை மாத்திரமே இருந்து மற்றையதை அடையாளப்படுத்த முடியாமல் இருந்தால் உடனடியாக நீங்கள் வைத்திய ஆலோசனையைப்பெற வேண்டும். விதையானது விதைப்பையினுள் இறங்காது வயிற்றினுள்ளேயே காணப்படின் பல பிரச்சினைகள் ஏற்படும். ஆனால் உங்கள் விதையானது விதைப்பையினுள் இறங்கியிருப்பதால் இது பற்றிக்கவலை கொள்ளத்தேவையில்லை

**➤ வயது 32 ஆண். தற்போது தான் திருமணம் முடித்தேன். ஆனால் எனக்கு நீரிழிவு நோய் உள்ளது. இதனால் குழந்தை பெறுவதில் சிக்கல் இருக்குமா?**

நீரிழிவு நோயை தகுந்த முறையில் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் ஏனைய சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதைக் குறைக்க முடிவதைப் போலவே, பாலியல் சம்பந்தமான பிரச்சினைகளையும் பெருமளவில் தவிர்த்துக் கொள்ள முடியும். எனவே குழந்தைகள் பெற்றுக் கொள்வதிலும் பிரச்சினைகள் இருக்கப் போவதில்லை. நீங்கள் இது சம்பந்தமாக மனக்குழப்பம் அடையத் தேவையில்லை. நீரிழிவை மருத்துவ ஆலோசனைகளுக்கமைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் அநாவசிய பிரச்சினைகளைத் தவித்துக் கொள்ளலாம்.

**➤ நாளாந்தம் பசுப்பால் அருந்துவதால் சளி பிடிக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?**

சிலருக்கு பால் குடிக்கும் போது சளி பிடிப்பது போன்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படுகிறது. இதற்கு காரணம் பசுப்பாலிற்கு அவர்களில் ஏற்படும் ஒரு ஒவ்வாமை வகையான வெளிப்பாடாகும். பால் குடிக்கும் போது சளி பிடிக்கும் தோற்றப்பாடு ஒரு பிரச்சினையாக அமைந்தால் பசுப்பால் குடிப்பதை நிறுத்திக் கொள்வது நல்லது. எனவே நீங்கள் பால் குடிப்பதை நிறுத்தி விட்டு பால்மா வகைகள் அல்லது ஆட்டுப் பாலைப்பாவித்து பாருங்கள். அதனால் உங்களிற்கு ஒரு பிரச்சினையும் ஏற்படாவிடின் தொடர்ந்து பாவிக்கலாம். உங்களிற்கு எல்லா வகையான பால், பால்மா, பால் சேர்த்த உணவு வகைகள் அனைத்திற்கும் ஒவ்வாமை வகையான தாக்கம் ஏற்படின் பால் உற்பத்தி பொருட்களைப் பாவனையை முற்றிலும் நிறுத்தி விட்டு வேறு வகையான புரதங்களை, சோயா, பால், முட்டை, மீன், என்பவற்றை சேர்த்துக்கொள்ளலாம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது மருத்துவ நிபுணர்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்